# தேசிங்குராஜன் கதை



ஸ்ரீமகள் கம்பெனி
வரதா முத்தியப்பன் தெரு
சென்னை-1.

உ

ஸ்ரீ ராமஜெயம்

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப் புலவரவர்கள் இயற்றிய

பெரிய எழுத்து

# தேசிங்குராஜன் கதை



[ஐதீக படங்களுடன்]

ஸ்ரீமகள் கம்பெனி

50, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1

1982 [விலை 50-00







# தேசிங்குராஜன் கதை

—卐—

காப்பு

## விநாயகர் தோத்திரம்

மேதினியரசரெல்லாம் வியப்புடன் புகழ்வதாக
நீதிசோ நெறியுஞ் செங்கோல நிலைமையுந்தருமமுற்ற
நீதிவோ தென்றுங்காக்கும் தேசிங்குராஜனற்சீர்க்
கதையையெடுத்துரைக்கக் கணபதி காப்புதானே

## முருகர் தோத்திரம்

ஜெயங்கொள தேசிங்குராஜன்சீர்கதை யதனைச்சொல்ல
வயங்கொண்மா மயிலிலேறும் வருந்திருமுருகர்தூய
நயங்கொள் பாதத்தையுந்த ருகியமரர்கள் சிரசி
வியங்கொள்பாதத்தையுந்தான் விரும்பியேவணங்குவோமே

## சிவ தோத்திரம்

தஞ்சமென்றுரைக்காக்கும் தயாள தேசிங்குராஜன்
எஞ்சலிக்கலதையைச் சொல்ல வெந்தையாஞ்சுந்தரேசர்
செஞ்சரணத்தேயுந்தன தேவிபார்வதியாள்பாதங்
கொஞ்சு மாவடி பையுங்கை கூப்பியேவணங்குவோமே

## விஷ்ணுதோத்திரம்

சங்குசக்கரங்கோ தண்டந் தண்டுவாள்கரத்திற்கொண்ட
செங்கண்மால் பதமூஞ்சீரார் தருவின்பொற்பாதநாளும்
பொங்க மாயிறைஞ்சியுன்னி புகழுந்தேசிங்குராஜன்
துங்கமாங்கதையைச்சீராய் சொல்லுவோம் வியினோர்க்கே

## சரஸ்வதி தோத்திரம்

பலகலைகளுணர்ந்தேற்றிப் போற்றுகின்ற
பாவணர்க்கு நவிசெய்து பாதுகாக்கும்
நிலைமையுடன் தவளநிற முடையார்வாசல்
திகழும்சரஸ்வதியைத் தானிறைஞ்சி
அலையெறியுங்கடல்சூழ புவியோர்மெச்சும்
அங்கதனைக்கண்டசாங்கொள் எழுதுறைந்த
விலையிலாமணிமுத்து தேசிங்குராஜன்
வியன் தருசீர்ச் சரித்திரத்தை விளம்புவோமே

## அவையடக்கம்

முத்தமிழன் பயனுணர்ந்த புலவோர்முன்னே
மூடனடியேனுயேன் பிதற்றுகின்ற

பத்திமிகுந்தெழிற் செங்கோல் செலுத்துகின்ற
பராக்கிரமமதி வீர ராமனென்றே
எத்திசையும் புகழும் தேசிங்குராஜன்
எழிற்கதையிற் சொற்குற்றம் பொருட்குற்றந்தான்
மெத்தவிருக்கினும் குதகைச் சொல்லைப்போலே
வியங்கொள்வார் பாராட்டி நயங்கொள்வாரே

## நாட்டுச் சிறப்பு

சீருஞ்சிறப்புமுள்ள தேசிங்குமகாராஜன்
பெரும் பிரபலமும் பெருகிவரும்படியாய்
செந்நெற்கதிர்பெருத்துச் செழித்துவளர்கிறதும்
கன்னற்கொழுத்துக் கட்டைமறைப்பதுவும்
வன்புலியும்பசுவும் மருவியேவாழ்கிறதும்
காகமும் கவுதாரி காட்டுப்புறுகூவுறதும்
பேடைமயிற்கூடி பிரியமடைகிறதும்
புன்னைப் பலாச்சோலை பொருந்திநிறைந்திடவும்
சந்தனச்சோலைகளும் சாதிமல்லிபூத்திடவும்
தாமரைப்பொய்கைகளுந் தடாகமுள்ள ஏரிகளும்
வாழுறுங்காஞறும் வபுகளுமென்ன சொல்வேன்
செஞ்சிநகர்ச்சீரைச் சிலவற்றையெடுத்துரைப்போம்
எஞ்சலில்லா வீதிகளு மெழிற்றோரணநிறையும்
வாழைக்கமுகங்களெங்கும் வளமாகக்கட்டியதும்
ஏழைகளுக்கு வியன்னம் இட்டுவருகிறதும்
இந்திரலோகம்போ லிருக்கிறஅரண்மனையும்
சந்தமின்னார்களின் கற்பின்திறமைகளும்
வேதியர்கள் கூடி வேதப்படிப்பதுவும்
நீதிதவறாமல் நிர்புலவோர் பாடுவதும்
பொன்னன்கரிதன்னைப் போற்பொருந்திநின்றுடுவதும்
மன்னன்சீர் கீர்த்திதன்னை வாழ்த்திவருகிறதும்

## கதையின் வரலாறு

வடக்கேவெகுதூரமிருக்குது பார்மகம்மருசாரமொன்று
மகமேருசாரலில்தபசு செய்கிறார் வர்ணலட்சமகரிஷிகள்
கர்த்தனைநோக்கிதபசுசெய்கிறார் கனத்தமகரிஷிகள்
சிவாசிவாவென்றசத்தமங்கே தெய்வலோகம் கேட்கும்
அரகராவென்றசத்தமங்கே ஆகாயமட்டுமெட்டும்
கோவிந்தாவென்றசத்தமங்கே கொடுமுடிதான் கேட்கும்
மாயவாவென்றசத்தமங்கே வைகுந்தந்தான்கேட்கும்
துலுக்கனொருவன் கர்த்தனை நோக்கி கோடிதவஞ்செய்தான்
மந்திரவித்தைதந்திரவித்தை மகாவித்தைதானறிவான்
இந்தப்படியசரிஷிகளெல்லாம் இருந்துதவஞ்செய்தார்



## குதிரையின் பெருமை

தெய்வலோகத்திற்பிறந்தகுதிரை திசைதப்பிவருகுதுபார்
அரங்கர்கிருபையால்திகைத்தகுதிரை நடனமாடுதுபார்
உச்சிமலைகளில்புல்லுகள்மேய்ந்து ஒதுங்கிவருகுதுபார்
சாரலோரம்புல்லுகள்மேய்ந்து சாய்ந்துவருகுதுபார்
கோடிசூரியனுதித்தாப்போல் குலுங்கிவருகுதுபார்
தங்கமயமானகுதிரையைக்கண்டான் தவஞ்செய்யுந்துலுக்கன்
குதிரையைக்கண்டுஓடிவருகிறான் கொங்குதேசத்துலுக்கன்
துலுக்கனைக்கண்டுகர்ச்சனைசெய்தது தெய்வலோககுதிரை
அஞ்சனம்போட்டுக்குதிரைவலிமையை அறிந்துகொண்டானும்
மந்திரவலையைவீசிப்போட்டு மடக்கிபிடித்தானும்
தந்திரவலையைவீசிப்போட்டு தடவிப்பிடித்தானும்
மந்திரத்தாலேகுதிரைப்பாகரை வரிசையாய்வைத்தானும்
நாலாயிரங்குதிரைப்பாகரை நடுவேவைத்தானும்
குதிரைமேலேகூடாரம்போட்டு கொண்டுமேவாருனும்
ஐந்துதமுழிகைதூரமிருந்து அதட்டியேவாருனும்
தகத்தகாயமாய்நடுவிலிருந்து தாண்டுதுமுன்னாலே
மந்திரவலைபிலைகப்பட்டகுதிரை வருகுதுமுன்னாலே
தந்திரத்தாலேமாயபக்கிரி மடக்கிக்கொண்டுவாருன்
டில்லிக்குவெகுமதிகொடுப்போமென றுசேரக்கொண்டுவந்தான்
வெகுமதிசெய்யபாராசாரியை வெளியில்கொண்டுவந்தான்
வெளியில்நிறுத்திபக்கிரியவனும் வேலையென்னசெய்தான்
குதிரையைச்சுற்றிகூடாரம்போட்டுகொடியகாவல்வைத்தான்
யானைச்சங்கலிபோட்டு மடக்கினனந்தக்குதிரையைதான்
மந்திரவலையயவிழ்த்துவிட்டான் மாயபக்கிரியும்
மயக்கந்தெளிந்துகண்ணாலேகண்டது வர்ணமேககுதிரை
அண்டமிடிந்துவிழுங்காற்போலேயலறி கனைத்ததுபார்
கோட்டையிடிந்துவிழுந்தாற்போல குலுங்ககனைத்ததுபார்
டில்லிபட்டணம்காதவழியும் சேரவேநடுங்குதுபார்
கூடகோபுரமாடமண்டபம் குலுங்கிநடுங்குதுபார்
பட்டணமுள்ளஜனங்களெல்லாம் பதறிவிழுந்தார்கள்
பாட்சாதசத்துநடுங்கியவனும் பதறிவிழுந்தானும்
மூணரைநாழிகைமூர்ச்சையாயினர் முழுதுப்ராசாக்கள்
பட்டணத்திலுள்ளஜனங்களெல்லாம் பதறிமூர்ச்சையானார்
டில்லிபதுரைமூர்ச்சைதெளிந்துசினந்துவிழுந்தானும்
அண்ணாவாடாதம்பிவாடா ராஜஸிங்கபாபு
இதுவென்னவதிசயமென்னவதிசயம் ராஜஸிங்கபாபு
அண்டமிடிந்துவிழுந்ததோசொல்லும் ராஜஸிங்கபாபு
ஏழுலோகமுங்கூடிவந்ததோ ராஜஸிங்கபாபு
சமுத்திரமேலோடிசுற்றிப்பாரும் ராஜஸிங்கபாபு
ஆனலைதல்லதாகட்டுமென்றான் ராஜஸிங்கபாபு

ஒத்தைக் குதிரைக்காரனைய்யா ராஜலிங்கபாபு
ஓடியேசுற்றிப்பார்த்தானைய்யா ராஜலிங்கபாபு
வடக்குத்திசையதில்மின்னுதுபாரு வர்ணமேகபுரவி
குதிரைவருவதைகண்ணாலேகண்டான் கொங்குபக்கிரியும்
எதிரில்வந்து சலாம்செய்தா ரிருந்தபாலகனும்
பதில்சலாமுங்கொடுத்தானைய்யா ராஜலிங்கபாபு
சலாம்செய்துகுதிரையைக்கண்டான் ராஜலிங்கபாபு
குதிரையைக்கண்டுபெருமூச்செறிந்தான் ராஜலிங்கபாபு
ஐயாகேளுமையா கேளும் கொங்குபக்கிரியே
எந்ததேசத்திலிருந்தகுதிரை யிங்கேகொண்டுவந்தீர்
தெரியவெனக்குநீர் சொல்லும் தேசத்துபக்கிரியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் கொங்குபக்கிரியும்
ஐயாகேளுமையாகேளும் ராஜலிங்கபாபு
இந்தவுலகத்திற்பிறந்ததல்லயிந்தபுரவியுந்தான்
அந்தபேச்சைக்காதிலேகேட்டது குதிரையாளுவும்
கோபம்வந்துமூண்டுகொண்டது குதிரைக்காளும்
கடகடகடகடகடவென்று கனைத்துநின்றதுவே
தெய்வலோகத்திற்பிறந்தகுதிரை சொர்ணமேகக்குதிரை
பன்னிரண்டுவயது ஆச்சுதுபாரு பாரசாரிகுதிரை
வெள்ளிக்கிழமையிற்பிறந்த குதிரைவேகமானகுதிரை
ஒருவருமண்டக்கூடாதுபாருயுயர்ந்தமேகக்குதிரை
இந்தவுலகத்திலொருவருமில்லை யிந்தக்குதிரையேற
மனதுதுணிந்துஏறினாலால் மாண்டுபோய்விடுவார்
தைரியங்கொண்டுஏறுவோரானால் சிதைந்துபோய்விடுவார்
தெய்வவரத்தினால்பிறந்தபிள்ளை வந்துயேறவேணும்
வரத்தினாலேபிறந்தபிள்ளை வந்துயேறவேணும்
பூமிபாரந்தீர்க்கவந்தவன் இப்புரவியேறவேணும்
தேவரடியாற்பிறந்தபிள்ளை தேசியேறவேணும்
அந்தச்சொல்லைக்கேட்டவுடனே அஞ்சிவிழுந்தார்கள்
டில்லிபதுரைக்குயினுக்கொடுக்கதேடிவந்தேனென்றான்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் ராஜலிங்கபாபு
கேட்டவுடனே மனதுகலங்கி கீழேவிழுந்தானும்
விழுந்தவுடனே தைரியங்கொண்டு மெள்ளஎழுந்தானும்
எழுந்தவுடனேராஜதுரைக்கு எழுதிவிட்டானும்
ஓலையைக்கொண்டுகையிலேகொடுத்தார் ஓடிவந்ததுதர்
ஓலையைப்பிரித்துவாசித்துபார்த்தான் டில்லிபதுரைதானும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
அண்ணாவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
தெய்வலோகத்துப்புரவியொன்று தேடியேவந்ததாம்
குதிரையேறிசவாரிசெய்துநான் கொண்டுபோகவேணும்
சல்திசல்திகுதிரைகொண்டுவா அர்க்காருபாப்பையா



பட்டத்துயானைகொண்டுவா அர்க்காருபாப்பையா
ஆனால்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
சலாம்வாங்கித்திரும்பினானைய்யா அர்க்காருபாப்பையன்
தண்டுக்குச்சைகையூதினானைய்யா அர்க்காருபாப்பையன்
பட்டத்துயானைவந்துநின்றது ராஜன்முன்னாலே
யானைமேலேறினானைய்யா டில்லிபதுரைதானும்
முதல்மந்திரிராஜலிங்கனும் முன்னேபோயிருந்தான்
போட்டிக்குவந்தராஜதுரைகள் பின்னேநடந்தார்கள்
நாலாயிரந்துருப்புங்குதிரை நடந்ததுமுன்னாலே
காலாள்சேனையாயிரம்பேர் கடுகிநடந்திடவே
திமிதிமிதிமிதமிதிமிதிமிவென்று சேனைநடந்திடவே
சேனைகள்வருவதைக்கண்ணாலேகண்டது தெய்வலோகக்குதி
கிடுகிடுகிடுகிடுகிடுவென்று கர்ச்சனைசெய்ததுவே [ரை
கர்ச்சனைசெய்தசத்தத்தினாலே கீழேவிழுந்தார்கள்
அண்டமிடிந்துவிழுந்ததுபோல அலறிவிழுந்தார்கள்
ஆனைசேனைகுதிரைகளெல்லாம் அங்கேவிழுந்திடவே
டில்லிபதுரையானைமீதில் திடுக்கிட்டுவிழுந்தானும்
சுற்றிலுமிருந்தராஜதுரைகள் துள்ளிவிழுந்தாராம்
மூலைக்குமூலைதுருப்புகுதிரை முறித்துக்கொண்டோடுதுபார்
அவ்வதிசயத்தைக்கண்ணாலேகண்டான்டில்லிபதுரைதானும்
அண்ணாவாடாதம்பிவாடா ராஜலிங்கபாபு
வந்ததொருமந்திரிமாரும் நடுங்கியோடிவந்தார்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
இதுஎன்னவதிசயமென்னவதிசயம் ராஜலிங்கபாபு
இத்தனைநாளுமிந்தகுதிரையை எங்கும்பார்த்ததில்லை
டில்லிபதுரையைக்கண்ணாலேகண்டான் தேசபக்கிரியும்
முழங்கால்சிலைபோட்டவனும் முன்னேசலாம்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானைய்யா டில்லிபதுரையுந்தான்
சுற்றிலுமிருந்தராஜதுரைகள் சூழ்ந்தேசலாஞ்செய்தார்
போட்டிக்குவந்தராஜதுரைகள் பெரியசலாஞ்செய்தார்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையேநீ
தெய்வலோகத்திற்பிறந்த குதிரைதேடிக்கொண்டுவந்தேன்
இனுங்கொடுக்கக்கொண்டு வந்தேனிந்தப்புரவியைத்தான்
இந்தப்புரவியேறாகிறராஜா இந்தவுலகினில்லை
இதற்கென்றுபிள்ளை பிறக்கப்போகிறு ளிந்தவுலகிலேதான்
அந்தமட்டும்பாராசாரியையடக்கிவையுமையா

## கொங்கு பக்கிரி டில்லி பாட்சாவுக்கு குதிரையைக் கொடுத்து வெகுமதி பெற்றுக்கொண்டது

அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
சந்தோஷமாகப்பக்கிரியவனைத் தழுவிக்கொண்டானும்

என்னுடன்கூடடில்லியில்நீயு மிருந்துபோகவேணும்
விருந்து பொசித்துயினும்கொடுப்பதைவேண்டிப்போகுமையா
ஆனல் நல்லதாகட்டுமென்று னந்தபக்கிரியும்
அண்ணுவாடா தம்பிவாடா ராஜலிங்கபாபு
குதிரைகொட்டடி கொண்டுபோய்வையும் ராஜலிங்கபாபு
கொள்புல்தண்ணீர் கூசாமல்வையும் ராஜலிங்கபாபு
அந்தப்படிக் குத்தாரங்கொடுத்தான் டில்லிபதுரைதானும்
ஆனல் நல்லதாகட்டுமென்றான் ராஜலிங்கபாபு
அண்ணுவாடாதம்பிவாடா அர்க்காருசின்னையா
ஜல்திஜல்திதயார்செய்யடா அர்க்காருசின்னையா
ஆனல் நல்லதாகட்டுமென்றான் அர்க்காருசின்னையன்
கோடிப்பாகரை அழைத்துவந்தான் அர்க்காருசின்னையன்
குதிரைகொட்டடிகொண்டுசேர்த்தானர்க்காருசின்னையன்
கோடிப்பரகரை கொலுவாகவைத்தான் அர்க்காருசின்னையன்
சுற்றிலும் துருப்புசிப்பாய்வைத்தான் அர்க்காருசின்னையன்
பந்தோபஸ்தாயிருந்ததுபார் பாராச குதிரை
டில்லிபதுரையும்பக்கிரியவனை கூடிகொண்டுவந்து
விருந்துசெய்துசந்தோஷமாக மெச்சி என்னசெய்தான்
ஊருபதிநாடுகளெல்லாம் உறுதியாய்க்கொடுத்தான்
வேண்டியமட்டும்திரவியம்கொடுத்துவேண்டிக்கொண்டானு
தங்கமயமானசாலுவை ஒன்றுதலைக்குகொடுத்தானும் [ம்
அந்தவெகுமதிபெற்றுக்கொண்டான் அந்தபக்கிரியும்
அந்தநாளும் சென்றதுமறுநாள் ஆச்சுதுஐயாவே
தகத்திலிருந்தரசு தனிமையாய்செய்கிறானும்
பொன்னின் தகத்திலிருந்தரசு பொறுமையாய்செய்கிறானும்
தகத்திலிருந்துயோசனை செய்தான் டில்லிபதுரைதானும்
அண்ணுவாடாதம்பிவாடா மந்திரிதுரைமாரே
இந்தபுரவியேறுகிறராஜன் இந்தஉலகிலுண்டோ
இந்தப்பாராசாரியேறுகிறராஜன் பத்துதிக்கிலுமுண்டோ
இந்தப்புரவியேறுகிறராஜனை புகழ்ந்துகாணவேணும்
யோசனை செய்து தெரியச்சொல்லும் என்னுடனேபாபு
அந்தப்பேச்சைக்காதிலே கேட்டார் அந்தமந்திரிமாரும்
எல்லோருங்கூடி யோசனைசெய்தா ரந்தசபையிலேதான்
முதல்மந்திரிராஜலிங்கனு முன்னேயோடிவந்தான்
முழங்கால்மண்டிபோட்டவனும் முன்னேசலாம் செய்தான்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையேநீ
ஐம்பத்தாறுதேசராஜரை யறிந்துசொல்கிறேன் கேள்
எட்டுத்திசையிலுள்ளராஜர் இதற்குதவமாட்டார்
கோடிராஜரிருக்குறரையா குதிரையேறமாட்டார்
தெரிந்தமட்டுப சொல்லுகிறேன்கேள் டில்லிபதுரையேநீ
தெற்கேவெகுதூரமிருக்குது செஞ்சிக்கோட்டைதுருகம்



செஞ்சிதுருகத்திலரசு பண்ணுகிறான் சூரசிங்குராஜன்
சூரசிங்கு குமாரனையா தரணிசிங்குராஜன்
தேரணிராஜன் தம்பியையா தரணிசிங்குராஜன்
அண்ணனுந்தம்பியு மாளுகிறாரையா செஞ்சிக்கோட்டையை
அவருக்குமிஞ்சியொருவருமில்லையந்தக் குதிரையேற [தான்
பத்துதிக்கிலுமொருவருமில்லை பாராசாரியேற
செஞ்சிராஜனையழைத்தீரானல் தேசியேறிடுவார்

## டில்லிபாட்சா ஓலையெழுதி தேரணிமகாராஜனை அழைத்தது

அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
கலகலவென்றுசிரித்தானையா டில்லிபதுரைதானும்
நீயேவாடாநீயேவாடா கணக்கப்பிள்ளைவாரும்
ஆயிரக்கணக்குப்பிள்ளைக்கு பெரியகணக்குபிள்ளைவாரும்
செஞ்சிகோட்டைக்குஓலையெழுத கணக்கப்பிள்ளைதானும்
ஆனல்நல்லதாகட்டுமென்றான ரங்கப்பிள்ளைதானும்
சலாமையாசலாமையா தேரணிமகாராசா
டில்லிபதுரையும்ஓலையெழுதுகிறான் தேரணிராசருக்கு
உன்னிடபேட்டிகாணவேணும் உயர்ந்தசெஞ்சிராஜா
தேசத்துராசரே பேட்டிக்குவந்தார் தெரிசனம்செய்தோம்
உன்னிடபேட்டி ஒருநாளுங்காணேன் உத்தமராஜாவே
என்மீதில் தயவுமிருக்குமேயானலிங்குவரவேணும்
அந்தப்படியேயெழுதி முடித்தார் அந்தஓலையிலே
அண்ணுவாடாதம்பிவாடா அர்க்காருபாப்பையா
ஓலைகொண்டுசெஞ்சிக்குப்போடா அர்க்காருபாப்பையா
செஞ்சிசேதிதெரிந்துவாடா அர்க்காருபாப்பையா
இருபதுநாளில்சேதிசொல்லடா எந்தனுக்கானாலும்
ஆனல்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
அங்கிருந்துவெளிப்பட்டானையா அர்க்காருபாப்பையன்
தபால்மார்க்கமாய்தனியேபோறான் அர்க்காருபாப்பையன்
பத்துநாளில் பழஞ்செஞ்சிசேர்ந்தானர்க்காருபாப்பையன்
புதுசெஞ்சியில்அரசுபண்ணுகிறான் தேரணிமகாராசன்
அரசுமுகத்தில் வந்துநின்றான் அர்க்காருபாப்பையன்
முழங்கால்மண்டிபோட்டவனும் முன்னேசலாம் செய்தான்
பதில்சலாங்கொடுத்தானையா தேரணிமகாராஜன்
ஓலைகொண்டுகையில்கொடுத்தா னர்க்காருபாப்பையன்
ஓலைமுகத்தைகண்ணுலேபார்த்தான் தேரணிமகாராஜன்
வந்ததுதரைவரிசையாய்ப்பார்த்தான் தேரணிமகாராஜன்
எங்கிருந்து இங்குவந்தீர்கள் எனக்குசொல்லுமையா
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் அர்க்காருபாப்பையன்
டில்லியிலிருந்துவந்தோமையா தேரணிமகாராஜா
அண்ணுவாடாதம்பிவாடா தரணிசிங்குராஜா

டில்லியிலிருந்து சேதி வந்தது தரணிசிங்குராஜா
ஓலையைப்பிரித்துசேதிசொல்லும் தரணிசிங்குராஜா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தேரணிமகராஜன்
ஓலையைப் பிரித்துவாசித்துப் பார்த்தான் தரணிசிங்குராஜா
டில்லிசேதியைதெரியசொன்னான் தரணிசிங்குராஜா
அந்தப் பேச்சை காதிலே கேட்டான் தரணி சிங்குராஜா
கலகல வென்று சிரித்தானையா தேரணிமகாராஜா
அண்ணுவாடா தம்பிவாடா மந்திரிதுரைமாரே
ஆயிரங்குதிரை தயார்வையடா மந்திரிதுரைமாரே
அண்ணுடஞ்சேதிபடிக்கடி எழுதும் மந்திரிதுரைமாரே
எனனிடசேதி யெழுதியனுப்புகிறேன் என்மந்திரிமாரே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் அந்தமந்திரிமாரும்
ஆனால்நல்லதாகட்டுமென்றார் அந்தமந்திரிமாரும்

### தேரணி மகாராஜன் மனைவியிடத்துப் போய் விடைபெற்றுக் கொள்ளுதல்

அரசுகடந்து அரண்மனைபோனார் அண்ணனுந்தம்பியுமாய்
இராணிவசத்தில்நடந்தாரையா தெய்வராம் பாயி
பத்துமாதங்கெர்ப்பமையா பத்மராம்பாயி
பூரண கர்ப்பமானாளையா புண்ணியராம் பாயி
புருஷனைக்கண்டு பூசைபண்ணினாள் புண்ணியராம் பாயி
பெண்சாதிமுகத்தைக்கண்ணாலேகண்டான் தேரணிமாராஜ
மனதுகலங்கி எதிரிலே நின்றான் வந்தமகாராசன் [ன்
பெண்ணேகேளும்பெண்ணேகேளும் புண்ணியராம்பாயி
நான்போய்வரேன்போய்வாரேன் புண்ணியராம்பாயி
டில்லியிலிருந்துசேதிவந்தது தெய்வராம்பாயி
அந்தபேச்சைகாதிலேகேட்டாள் அந்தராம்பாயி
இன்றேநாளையோசொர்ப்பமென்றுயிருக்குதென் துரையே
என்னைவிட்டுநீரெப்படிபோறீர் என்பிராணநாதா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தேரணிமகாராஜன் [ஜன்
பெண்சாதிமுகத்தைபெருமையாய் பார்த்தான்தேரணிமகாரா
பெண்ணேகேளும் பெண்ணேகேளும்புண்ணியராம்பாயி
சக்கியிலென்னைவரவேஎழுதினான் டில்லிமகாராஜன்
சீக்கிரம் என்னைவரவே எழுதினான் டில்லிமகாராஜன்
போகதேபோனார் பிழைகளைவருதே புண்ணியராம்பாயி
மூன்றுமாதத்தில்வந்துசேருகிறேன் முத்துராம்பாயி
ஒன்றுக்குமஞ்சவேண்டாம்பெண்ணே உத்தமராம்பாயி
தோழியும்நீயும் சுகமாகயிருங்கள் சொகுசுராம்பாயி
பாங்கியும் நீயும் பதனமாயிருங்கள் பத்மராம்பாயி
நான் போனவுடனே ஓலை எழுதுறேன் பொன்னுராம்பாயி
இவ்விடஞ்சேதி எனக்கு தெரியநீ எழுதும்பெண்மயிலே



அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் அந்தராம்பாயி
போய்விட்டுவாரும்போய்விட்டுவாரும் புருஷசிங்கமேநீர்

## தேரணி மகாராஜன் டில்லி பட்டணம் வந்து டில்லிபதுரையைக் காணல்

ஆனால்நல்லதாகட்டுமென்று அப்புறந்தான்நடந்தார்
செஞ்சியைவிட்டுப் புறப்பட்டாரையா தேரணிமகாராஜன்
அண்ணனுந்தம்பியுங் கூடநடந்தார் அந்ததேசம்விட்டு
தபால்மார்க்கமாய்வாருரையா தம்பியுமண்ணனுமாய்
அதற்குமுன்னமே எழுதிவிட்டார் அந்தத்தேசத்திற்கு
தேசத்தரசர்கள் வரவே எழுதினான் டில்லிபதுரை தானும்
ஐம்பத்தாறுதேசராஜர்கள் அடங்கலும்வாருர்கள்
சுற்றிலுமிருந்தராஜதுரைகள் சூழவேவந்தார்கள்
டில்லிபட்டணமுழுதிலும்ராஜர் சூழவிருந்தார்கள்
கொலுநிறைந்துயிருந்தாரையா செஞ்சிதுரைமார்கள்
டில்லியைத்தேடி வாருரையா கோடி துரைமார்கள்
வரிசையாகவேடில்லிபட்டணம் வந்துபுகுந்தார்கள்
டில்லிதேசத்தின்முன்னேவந்தான் தேரணிமகாராஜன்
முழங்கால்மண்டியிட்டேயவனுமுன்னேசலாம் வாங்கினான்
பதில்சலாமுங்கொடுத்தாரையா டில்லிபதுரை தானும்
வந்தராஜனை கண்ணாலே கண்டு வாரும்வாருமென்ருர்
சிம்மாதனத்திலிருமென்ருனே டில்லிமகாராஜன்
சிம்மாதனத்திலுட்கார்ந்தாரையா தேரணிமகாராஜன்
அந்தநாழிகைக்குயோசித்தானும் டில்லிமகாராஜன்
அண்ணமாரேதம்பிமாரே ராஜதுரைமாரே
நானொருபேச்சிசொல்லுகிறேன் கேளும் ராஜதுரைமாரே
உலகத்திலில்லாதகுதிரை என்னிடம் திசைதப்பிவந்தது
ஐம்பத்தாறுதேசராஜாக்கள் அடங்கலும்வந்தார்கள்
குதிரைசவாரிசெய்யவேணும் கோடி துரைமாரே
புரவியுமச்சுநான் கொடுக்கிறேன் புண்ணியதுரைமாரே
அந்தப்பேச்சை காதிலேகேட்டார் அந்ததுரைமார்கள்
ஆனால்நல்லதாகட்டுமென்றணைவருந்தானெழுந்தார்
தேரணிராசாஏறுகிறேனென்றுதிடுக்கென்றெழுந்தானும்
ஏறுகிறேனென்றுதைரியமாக சகலோருமெழுந்தார்கள்
சந்தோஷமாக எழுந்தராஜர்கள் தைரியமாகப்பார்த்தார்
கலகலவென்றுசிரித்தாரையா டில்லிபதுரைதானும்
இன்னொருபேச்சுசொல்லுறேன் கேளுந்தன்துரைமாரே
புரவியைகண்டு பயப்பட்டீரானால் பிடித்துகொள்வேனுன்
தேசியை கண்டுபயப்பட்டீரானால் சிறையில்போடுவேன்
இந்தப்படிசம்மதியிருந்தால் எல்லோரும் வாருமென்ருன்
ஆனால் நல்லதாகட்டுமென் றணைவருந்தாமெழுந்தார்



சந்தோஷமாகவெளியேவந்தார் சகலதேசத்தாரும்
சிம்மாதனம் விட்டுக்கீழேகுதித்தான் டில்லிமகாராஜன்
முதல்மந்திரிராஜாக்களும் முன்னேநடந்தாரும்
மற்றமந்திரிதந்திரிகளும் கூடநடந்தாராம்
குதிரைகொட்டடியில் வந்துநின்ருர் கோடி துரைமார்கள்
குதிரையை சுற்றிப்பார்த்தாரையா கோடி துரைமார்கள்
வந்தராஜரை கண்ணாலேகண்டது வர்ணமேககுதிரை
பார்த்தராஜரை கண்ணாலேகண்டது பாரசாரிகுதிரை
கடகடகட கடகடகட வென்று கனைத்துகுதிக்குதுபார்
குதிரைகனைத்தசத்தத்தாலே கொபலென்றுவிழுந்தார்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல அலறிவிழுந்தார்கள்
கோட்டையிடிந்து விழுந்தாற்போல் தடபுடவிழுந்தாராம்
முன்னேயிருந்தராஜதுரைகள் மிரண்டுவிழுந்தாராம்
பின்னேயிருந்தராஜதுரைகள் மிரண்டுவிழுந்தாராம்
தேரணிராஜன் கண்ணாலேகண்டு திகைத்திருந்தானும்
தரணிசிங்குகுதிரையைக்கண்டு தலையைக்குனிந்தானும்
குதிரையைக்கண்டுபெருமூச்செறிந்தார் கோடிதுரைமார்கள்
தலையைக்குனிந்து எதிரிலே நின்ருர் சகலதேசத்தாரும்
எதிரிலே நின்றராஜதுரைகளை ஏறிட்டுப்பார்த்தானும்
கலகலவென்றுசிரித்தாரையா டில்லிபதுரை தானும்
குதிரையைக் கண்டு விழுந்தசேதி கூவிச்சொல்லுமையா
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டார் அந்ததுரைமார்கள்
ஐயாவேகேளுமையாகேளும் தேசத்துராசாவே
[illegible]ரிலிசக்குமகுதிரையென்று தேடிவந்தோமையா
தேசத்திலிருக்குங்குதிரையென்று தேடிவந்தோமையா
தெய்வலோகப்பாராசாரிமேல் தேவர்களேறவேணும்
இந்தலோகத்துராசரேறினால் இறந்துபோய்விடுவார்
தப்பித்தவறியேறினாரானால் இறந்துபோய்விடுவார்
குதிரையைப்பார்த்தால்குடல்நடுங்குது டில்லிமகாராஜா
தேசியைப்பார்த்தால்திக்குமுக்காடுது டில்லிமகாராஜா
பாராசாரியைப்பார்த்தவுடனே பலமுமொடுங்குதுபார்
என்ன ஆக்கினைசெய்தாலுநாங்க ளேறமாட்டோமையா
உயிருடனாநாங்கள் தப்பிப்பிழைக்க உத்தாரந்தாருமையா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் டில்லிமகாராஜன்

## இராஜாக்கள் குதிரை ஏருதனிலுல் சிறையில் அடைத்தல்

நானொருபேச்சு சொல்லுகிறேன் கேளும்கோடிதுரைமாரே
ஐந்துவருஷமென்னண்டை நீங்கள் அடிமைசெய்யவேண்டும்
ஏழுவருஷமென்னண்டை நீங்களிருந்துபோகவேண்டும்
அந்தப்பேச்சையழித்தீரானால் அரசுக்கீனமையா
ஆனால்நல்லதாகட்டுமென்று அனைவரும்சம்மதித்தார்

டில்லியில் நடந்தசேதியெல்லாம் தெரியவெழுதினார்கள்
அந்தந்த தேசஓலைவந்ததை யறிந்துகொண்டார்கள்

## தேசிங்குராஜன் பிறந்தது

செஞ்சியில்நடந்தசேதியெல்லாம் தெரியச்சொல்லுகிறேன்
தேரணிராஜன்போன ஏழாநாள் செல்வன்தான்பிறந்தான்
பட்டணத்திலபிள்ளை பிறந்தசேதி பலருமறிந்தார்கள்
பிள்ளைபிறந்துசெஞ்சிநகரம் புகழ்ச்சியடைந்தார்கள்
குழந்தைபிறந்தநல்லிலக்கணம் குறிப்பையறிந்தார்கள்
குறிப்பறிந்துசந்தோஷமானார் கொலுவுமந்திரிமாரும்
சந்தோஷமாகதானங்கொடுத்தார் சகலதேசத்தார்க்கும்
வண்டியில்சர்க்கரை வழங்கினார்வந்ததேசத்தார்க்கும்
ஊருபதிகள்பிராமணர்களுக்கு உறுதியாய்தான்கொடுத்தார்
நல்லநாள் கொண்டு தொட்டிலுமிட்டார் ராசாவுக்காணுலும்
தேசிங்குபாலனென்றுசொல்லி திருஷ்டிகழித்தாராம்
தேசிங்குபிறந்துயிருபதுநாளில் சேதிவந்ததையார்
சங்கதியைக்கண்டு திகைத்தழுதாள் தெய்வராம்பாயி
மந்திரிமாரும் செஞ்சிசனமும் மனதுகலங்கினார்கள்
அலண்டுபுரண்டு அலறிவிழுந்தாள் அந்தராம்பாயி
குழந்தைமுகத்தைக்காணுமல் நீர் கொடியதேசம்போனீர்
மைந்தன்முகத்தைக்கண்டுநீரும் மகிழ்ச்சியடையாமல்
ரங்கர்கிருபையிப்படியிருப்பதால் நானென்ன செய்வேனையா
ஆனால்நல்லதாகட்டுமென்று அம்மனுமேது செய்வாள்
மைந்தன்பிறந்தசேதியெல்லாம் தெரியவேநானெழுதி
ஓலையெழுதியனுப்பினுளையா உத்தமியம்மாளும்
தேரணிராஜனை சடியுமங்கே சேதிவந்ததையார்
சேதியைக்கேட்டுதிகைத்துநின்றுரே தேரணிமகாராசா
ஓலையைக்கண்டுமுதுங்கிநின்றுரே தேரணி மகாராசா
இரங்கரைநோக்கவிசனமடைந்தான் நல்லமகாராசன்
ஆனால்நல்லதாகட்டுமென்று அங்கேதானிருந்தார்
செஞ்சியிற்பிறந்ததேசிங்கு பாலன்சேதியைசொல்கிறேன்
பாலன் பிறந்தமூன்றும்மாதம் பதைத்துவிழுந்தானும்
குழந்தைபிறந்தஏழாம்மாதம் குலுங்கிவிழுந்தானும்
தொட்டிலைவிட்டுக்கீழேயிறங்கி துள்ளிவிழுந்தானும்
தங்கத்தொட்டிலைபாட்டியுதைத்துதரையில்விழுந்தானும்
பத்தாமாதம்தவழ்ந்துநடந்தான் பலருமறியவேதான்
தாய்மடியில்வந்து பிணையாடி தகப்பனெங்கேயென்பான்
பள்ளிக்குப்போய் படிக்கவெடுக்க பாலனுமறிந்தானும்
கூடயிருக்குந்துரைகளோடு குதிரையேறிபோவான்
காடுமலைகளை செடிகளெல்லாம் கலங்கடிப்பானும்
குதிரையேறிசவாரிசெய்து கோட்டையில்வருவானும்



ரங்கரைக்கண்டு பூசைகள்செய்து நலமாய்வருவானும்
தாயண்டைவந்து பசிக்குதென்று தள்ளாடிவிழுவானும்
தாயாரெடுத்து மடியில்வைத்து சாந்திகளிப்பாளாம்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேயூட்டிடுவாளாம்
கொஞ்சிகொஞ்சிசாப்பிடுவாளையா குழந்தைதேசிங்கு
சாப்பிட்டிளைப்பாறிவெளியேவந்து சண்டைசெய்வானும்
கூடப்படித்த மோவுத்துக்காரனைகூப்பிட்டழைப்பானும்
இருவருங்கூடிகுதிரையேற்பியே எங்குந்திரிவாராம்
காடுமலைகள் செடிகளெல்லாம் கலங்கவடிப்பாராம்
புலிகரடிசிங்கத்தைகண்டால் புகுந்துவெட்டிவாராம்
வேட்டையாடிவெளியில்வந்து வெற்றிகொண்டோமென்பார்
சங்கராபரணிக்கரையில்வந்து தண்டிகுதிப்பாராம்
ஒருவர்க்கொருவருயர்ந்தமேடையிலுதம்பிகுதிப்பாராம்
வலைகளைத்தூக்கியெதிர்க்கிறேனென்றுவந்துமோதுவார்கள்
சையதுசாயபு சலாம்செய்து தாண்டிவிழுவார்கள்
மண்டிகள்போட்டுமலைகளை தூக்கி வாரியடிப்பாராம்
மலைகளை ஓங்கிக்குத்தனால் சிதைந்துமுறிந்துபோம்
பத்துபனைமரமுயரம் கிளம்பி பல்டியடிப்பாராம்
மூச்சுப் பிடித்துக்கிளம்பி விழுந்தார் மூன்றரைநாழிகை
ஆகாயமார்க்கமந்தர் பல்டியடித்துவிழுவாராம்
குன்றுகளேறிக்குதித்தாரானால் குதிரைபள்ளமாகும்
பனைமரங்களை தூக்கியெடுத்து பந்துசெண்டாடுவார்கள்
தேறித்தெளிந்தான் வித்தைகளாடி தேசிங்குமகிபாலன்
அந்தப்படி ஐந்துவருடம் ஆடித்திரிந்தானும்
ஆடியலண்டுகோட்டைக் கேவந்தான் அந்தபாலகனும்
தாயண்டைவந்துபசிக்குதென்று தள்ளாடிவிழுவானும்
தாயாரெடுத்துமடியில்வைத்து சாந்திகழிப்பாளாம்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனேமுன்னேயூட்டுவாளாம்
சாப்பிட்டிளைப்பாறிதாயார் முகத்தைத்தனியேபார்ப்பானும்
அம்மாகேளும்மாகேளும் யென்னைப்பெற்றதாயே
உன்னிடமனதில் என்னவிசனம்ஒளியாதுசொல்லென்று
ஊரிலிருக்கும்பிள்ளைகளுக்கு உதவிமெத்தவுண்டு
தாயுந்தகப்பனுமிருக்குறாரம்மா தாயே பெற்றவளே
என் தாயாரிருக்க என் தகப்பன் எங்கேயென்றுகேட்டான்
ஜல்தியெனக்குத்தெரியச்சொல்லு தாயேபெற்றவளே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் அவனைபெற்றதாயும்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டாள்
உச்சிமுகந்து திருஷ்டிகழித்தாள் உத்தமிபெற்றவளும்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
ஐம்பத்தாறுதேசராசர்க்கும் அதிபதிதுரைதானும்
டில்லியிலிருக்கும் பெரியபாஷா சேதியனுப்பினாராம்

செதியறிந்துவன்னிடதகப்பன் தேரணிமகாராசன்
தம்பிதரணி சிங்குராசனை தனியேயழைத்தாராம்
இருவரும் கூடிபோனுரையா எந்தன்கண்மணியே
போனவிடத்தில் புரவியொன்று புதிதாய்வந்ததாம்
தெய்வலோகத்துப் புரவியேறவேசேதிகள் சொன்னாராம்
ஏறுவோமென்றுதைரியமாக எல்லோரும் வந்தாராம்
கண்ணுற் கண்டடில்லிபதுரையும் கடினமாய்சொன்னார்
ஏறுமற்போனுலேழுவருஷமிருப்பீர் சிறையிலென்றார்
புரவியைப்பார்த்துபயப்பட்டீரானல் போடுவேன் சிறையிலெ
ஆனால் நல்லதாகட்டுமென்று அனைவரும் சொன்னாராம் [ன்றார்
அந்தப் படியேசத்தியம்பண்ணி யனைவரும் போனாராம்
குதிரையைச்சுற்றிபார்த்தவுடன் பதைத்துவிழுந்தாராம
முன்னேயிருந்தராசதுரைகள் மூர்ச்சையாய்விழுந்தாராம்
பின்னேயிருந்தராசதுரைகள் புரண்டுவிழுந்தாராம்
மூர்ச்சைதெளிந்தராசதுரைகள் முன்னேஓடிவந்தார்
இந்தகுதிரையேறினோமானல் இறந்துபோய்விடுவோம்
ஏழுவருஷம்சிறையிலிருந்து எங்களூருபோவோம்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார்டில்லிபதுரைதானும்
ஆனால் நல்லதாகட்டுமென்று அருஞ்சிறைவைத்தானும்
ஐந்துவருஷஞ் சென்றதுபாரு அருமையானமகனே
இன்னமிரண்டுவருடஞ் சென்றால் நிமிஷமிருக்கார்கள்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் அலறுஞ்சிங்கம்போல்
பல்லைப் படபடவென்றுகடித்து பதறியெழுந்தானும்
கண்கள்நெருப்புப்பொறிகள் பறக்கக்கனத்தெழுந்தானும்
கோபத்தாலே நெருப்புப்பொறிகள் குப்பென்றெழுந்தது
தாயைச்சுற்றிவலமாகவந்து சரணங்கள் செய்தானும்
கும்பிட்டெழுந்து எதிரில்நின்று கூசாமல் சொல்லுவான்
எனக்கு நல்லவரந்தரவேணுமென்னைப்பெற்றதாயே
எட்டுநாளையிலிங்கேவாரே னென்னைப்பெற்றதாயே
சல்தியிலென்னையனுப்பிடவேணுந்தாயேபெற்றவளே
அனுப்புமென்றசேதிகேட்டு பூமியில்விழுந்தாளாம்
இனியென் செய்வேன்கண்மணியேயென்றேங்கிவிழுந்தாளா
போகிறேனென்றசேதிகேட்டு அலறிவிழுந்தாளாம் [ம்
மகனிடகோபமறிந்து மண்மேல்விழுந்தாளாம்
கைகளை நெறித்துவயிற்றைப்பிசைந்துகண்ணீர்சொரிந்தாளா
பூமியில்விழுந்துமூர்ச்சையாயினள் புண்ணியராம்பாயி [ம்
இங்குயிருந்தாலனுப்பமாட்டாள் என்னைப்பெற்றதாயும்
பூமியில்விழுந்ததாயைப்பார்த்து பின்னிட்டுநடந்தானும்
சங்கராபரணியில்ஸ்நானம் பண்ணிசல்தியோடிவந்து
இரங்கர்கோயில் புகுந்தானையா இராசாதேசிங்கு
இரங்கரைச்சுற்றி வலமாகவந்தான் இராசாதேசிங்கு



கும்பிட்டெழுந்து எதிரில்நின்றான் குழந்தைதேசிங்கு
சவாரிசெய்யடில்லிக்குப்போறேன் சுவாமிரங்கநாதா
கூடவிருந்துசவாரிசெய்துகொண்டுதிருப்புமையா
உன் குழந்தைநானூருக்குப்போறேன் உடனேவாருமையா
சல்திசல்திவாருமையா சுவாமிரங்கநாதா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டார் இரங்கநாதசுவாமி
ஆனால் நல்லதாகட்டும்வாறேன் அருமைகண்மணியே
போய்விட்டுவாடாபோய் விட்டுவாடா புத்தியுள்ளமகனே

### தேசிங்குராஜனும் மோவுத்துக்காரனும் டில்லி பட்டணம் வந்தது

அந்தப்பேச்சைகாதிலேகேட்டு அடிபணிந்தானும்
கும்பிட்டெழுந்துவெளியில்வந்தான் குழந்தைதேசிங்கு
அண்ணுவாடாதம்பிவாடா மோவுத்துக்காரா நீ
மோவுத்துக்காரனை கூப்பிட்டழைத்துமுன்னேமேதுசொல்வா
தெய்வலோகத்துப் புரவியொன்று டில்லியிலிருக்குதாம் [ன்
எனதுதகப்பன்தேரணிராசன் அங்கேயிருக்கிறாராம்
குதிரையேறிசவாரிசெய்து கொண்டுவரவேணும்
சல்திசல்திபுறப்படுமென்றான் மோவுத்துக்காரனை
ஆனால்நல்லதாகட்டுமென்று அடட்டி எழுந்தானும்
கொட்டடிசென்றுகுதிரையிரண்டு கொண்டுவந்தானும்
வழிசெலவுக்குசவர்ணலட்சம்பொன் மடியிலவைத்தானும்
சல்தியாகவேகொண்டுநிறுத்தினான் தபால்குதிரைகள்
குதிரையைக்கண்டு சந்தோஷமானான் குழந்தைதேசிங்கு
அரிகரியென்று தட்டியேறினாரிருவருமப்போது
ஏறினவுடனே வெள்ளிக்குறடா எடுத்து அடித்தார்கள்
அடித்தவுடனேஐந்துநாள்பயணம் அதிரநடந்ததுபார்
பத்துநாளையிலே வந்துசேர்ந்தார் பாலரிருவருந்தான்
டில்லிசேர்ந்துதெருவிலே நடந்தார் தேசிங்குபாலகனும்
கோட்டைகொத்தளம்தாண்டிவாரான் குழந்தைதேசிங்கு
சிங்காரமாளிகையிலேவந்துசேர்ந்தான் சிங்ககுட்டிபோலே
அவ்வேளையிலென்ன செய்கிறான் டில்லிபதுரைதானும்
தங்கரத்தகத்திலிருந்தேயரசு தனிமையாய்செய்கிறாராம்
பொன்தகத்திலிருந்தேயரசு பொறுமையாய்ச்செய்கிறாராம்
சுற்றிலுமிருந்தராசதுரைகள் சூழவிருந்தார்கள்
நற்புத்தியுள்ளமந்திரிமாரும் நடுவேயிருந்தார்கள்
ஐம்பத்தாறுதேசராசரும் அருகிலிருந்தார்கள்
சிறையிருக்கும்ராசதுரைகள் சேரவிருந்தார்கள்
தேரணிராசன் தரணிசிங்குமே சேர்ந்திருந்தார்கள்
கொலுநிறைந்தராசதுரைகள் கொல்லென்றிருந்தார்கள்
அந்தசமயம்வந்துநின்றான் அலறுஞ்சிங்கம்போல்

பாலசூரியனுதித்தாற்போல் பனிச்சென்றுசார்ந்தானும்
கோடிசூரியனுதித்தாற்போல் குபபென்றுசார்ந்தானும்
வானத்திலிருக்கும்சூரியனைப்போல் வந்துநுழைந்தானும்
கோடிமன்னன் கையில்வைத்து கொலுவல்வந்தாப்போல்
நிறைந்தகொலுவிருக்கும்துரைகள் சட்டென்றெழுந்தாராம்
தகத்திலிருக்கும்டில்லிபதுரை தானுமெழுந்தானும்
எழுந்தராசவர்க்கண்ணாலே கண்டான் ரசா தேசிங்கு

## தேசிங்குராஜனும் மோவுத்துக்காரனும் டில்லிபதுரையைக் கண்டது

சலாமையா சலாமையா டில்லிபதுரையே கேள்
உன்தேசத்திலுயர்ந்தபுரவி யுன்னண்டையிருக்குதாம்
பாராசாரியைச் சவாரிசெய்ய பாலன் வந்தேனென்றான்
ஏறிசவாரிசெய்வதற்காக இங்கேவந்தேனென்றான்
புரவியேறிசவாரிசெய்து நான் போகவேணுமென்றான்
வானமிடிந்துவிழுந்தாற்போல மைந்தனுஞ் சொல்லிநின்றான்
அண்டமிடிந்துவிழுந்தாற்போலவனும்சொல்லிநின்றான்
சொன்னசொல்லை காதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
சுற்றிலுமிருந்தராசதுரைகளைச் சுற்றியேபார்த்தானும்
சித்திரப்பதுமைபோலேயிருக்கிறார் தேசராசரெல்லாம்
ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்தே ஒதுங்கியிருந்தார்கள்
டில்லிபதுரைகண்ணாலே கண்டு சேதிசொல்லலுற்றார்
எதிரிலிருக்கும்தேசிங்கு பாலனை ஏறிட்டுப்பார்த்தானும்

## டில்லிபதுரை தேசிங்குராஜனுடைய வயப்பத்தைக் கேட்டது

மன்மதன் போலழகுகுழந்தை மண்மேற்பார்த்தாராம்
ஐயாகேளுமையாகேளும் அறியாதபாலகனே
எந்தேசத்திலிருந்துநீயும் தேடிவந்தாயப்பா
உந்தனூருபேருநாடு முன் தகப்பன்பேரும்
உனைப்பெற்றதாயின் பேருஞ் சத்திசொல்லுமென்றான்
அவ்வார்த்தைகாதிலேகேட்டானவனுஞ் சிங்கம்போல்
சொல்லுகிறேன்கேள் சொல்லுகிறேன் கேள்டில்லிபதுரையே
தெற்கேவெகு தூரமிருக்குதுபாரு செஞ்சிகோட்டை
செஞ்சிகோட்டையாளும்ராசன் தேரணிமகாராசன்
தேரணிராசகுமாரன் நான்தான்தேசிங்குமகிபாலன்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே சிறையிலிருக்கிறாராம்
குதிரையேறவல்லுவில்லாமல் கொலுவிலிருக்கிறாராம்
குதிரையேறிசவாரிசெய்து நான்கொண்டுபோகவந்தேன்
சத்திசத்தி குதிரைகொண்டுவா டில்லிபதுரையே நீ
சொல்லுஞ்சிங்கக்குட்டியைப்போலே சீறியேநின்றானும்
அந்தச்சொல்லைக்காதிலே கேட்டான் டில்லிமகாராசன்



தேரணிராஜன் காதிலேகேட்டு தேடியேவந்தானும்
சிற்றப்பதுரைதரணிசிங்குமே தேடியோடிவந்தார்
வாரியெடுத்துமடிமீதில்வைத்து மகனைமுத்தமிட்டார்
சந்தோஷமாகவழுவியெடுத்து திருஷ்டிகழிப்பாராம்
சேர்த்துதழுவி மகனையெடுத்து திருஷ்டிகழிப்பாராம்
ஐம்பத்தாறுதேசராசாக்கள் அதிசயப்பட்டாராம்
டில்லிதுரையும் சந்தோஷமாகவேஓடிவந்தார்
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளமேகேளாய்
என் மகனைக்கண்டுதானும் மகிழ்ச்சியடையாமல்
உந்தன்சொல்லைகேட்டுதானும் உள்ளமகிழ்ந்தேனே
பெற்றதாயும் புன்னைபிரிந்து பின்னுயிர்வைப்பாளாம்
அரசனைக்கேட்டு செஞ்சிக்குப்போவோம்கண்மணியே
மறுவுக்கேட்டுவருகிறேனப்பா வாருங் குழந்தையென்றான்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் அழகுபாலகனும்
கலகலவென்றுசிரித்தெழுந்தான் கதுப்புச்சிங்கம்போல
ஐயாகேளுமையாகேளும் என்னைப்பெற்றராசாவே
குதிரையைப்பார்த்து பயப்பட்டு நீங்கள் கொடியசிறையிருந்தீர்
பாராசாரியைப்பார்த்து பயந்து பாரசிறையிருந்தீர்
ஏறிசவாரிசெய்துநானுமிப்போ இட்டுபோகிறேன்பார்
குதிரையேறிசவாரிசெய்து கொண்டுபோவேனென்றான்
சற்றுநோத்திச்சவாரிசெய்து சிறைமீட்டுப்போவேன்
போகாமற்போனாலுன்வயித்திற் பிறந்ததென்னத்திற்கு

## தேசிங்குராஜன் குதிரை யேறுதல்

அந்தவார்த்தை காதிலேகேட்டு அலறிவிழுந்தாராம்
கனைத்துகதும்பியெனியில்வந்தான் காளைசிங்கம்போலே
குதிரையிருக்கும் கொட்டடிதேடி குதித்தோடிவந்தான்
ஓடிவருகிறராசரை கண்டுதும்பியெழுந்ததுபார்
கோட்டையிடிந்து விழுந்தாற்போல குலுங்கக்கனைத்ததுபார்
நாற்றிசையிலுங்கலங்கியங்கே நடுக்கங்கொண்டதுபார்
ஐம்பத்தாறுதேசராசாக்கள் அதிர்ந்துவிழுந்தார்கள்
குழந்தைகுழந்தையென்று சொல்லிக் கூவியழுதார்கள்
டில்லிபதுரைதேரணிராசனும் திகைத்துஎழுந்தார்கள்
விழுந்தவுடனேகுழந்தையென்று தேடியேவாரார்கள்
கனைத்தகுதிரையைகண்ணாலே கண்டு கடுகஓடிவந்தான்
குதிரையைத்தட்டிசலாம்வாங்கினான் கொல்லும்சிங்கம்
அண்ணுவாடாதம்பிவாடா மோவுத்துக்காரா நீ [போலே
கால்கழுத்தைகழுத்துக்கயிற்றை கடுகவிடுமென்றான்
அந்தசொல்லைகாதிலேகேட்டான் மோவுத்துக்காரனும்
சொன்னவுடனேசத்தியாய்ப்பார்த்துசுருக்காயெழுந்தானும்
தங்கத்தாலே சேணிபோட்டு தடவிக்கொடுத்தானும்

அந்தக்குதிரையைக்கண்ணாலே கண்டு அகமுமகிழ்ந்தானும்
அரிபரந்தாமாவென்று அலறியேயெழுந்தானும்
கோவிந்தா ஸ்ரீ கிருஷ்ணாவென்று கும்பிட்டெழுந்தானும்
பாராசாரியைச்சலாம்வாங்கி பாய்ந்தேறினானும்
புலிக்குட்டிபோலேபாய்ந்தவனும் புரவியேறனானும்
ஏறினவுடனே பாராசாரி என்ன செய்யுதுபார்
தடதடவென்றுகனிக்குதுபார் அந்தக்குதிரைதானும்
கிடகிடவென்று கிளம்பிகுதித்தது அந்தக்குதிரைதானும்
கொணிழுத்து கையிலேபிடித்தான் ராஜாதேசிங்கு
ஐயா கேளுமையாகேளு மென்னைப்பெற்றவரே
புரவியேறிசவாரிபோறேன் பெற்றவரேஐயா
தப்பித்தவறிவந்தேனானால் தழுவிக்கொள்ளுமையா
இன்றைக்குஞ்சாவு நாளைக்குஞ்சாவு இருக்குது தலைமேலே
ஒன்றுக்குநீ அஞ்சவேண்டாம் உறுதிகொள்ளுமையா
சொன்னசொல்லைகாதிலேகேட்டார் தேசராசாக்கள்
ஐம்பத்தாறுதேசராசரு மடங்கலுங்கேட்டார்கள்
மகனேயென்னசெய்வோமென்றுவயிற்றைப் பிசைந்தார்கள்
போகாதேபோகாதே மகனேபுரவிகொண்டுபோமே
அந்தலோகத்துப்புரவியல்ல சந்தன் கண்மணியே
உயிருடனுன்னைவிட்டு பிரிந்து உலகத்திலிருப்போமோ
பிறந்தபோதேபிறந்தபேனும் பெரியதுக்கமில்லை
ஐந்துவருஷம்வளர்த்தமாதா அலைந்துமேபோவாள்
குதிரையைவிட்டுகுதித்துவாடா குழந்தையென்மகனே
என்னுயிர் பூமியிலேதரித்திருக்க யிறங்கிவாசுதனே
அந்தமொழியைக்காதிலே கேட்டானதிரு தேசிங்கு
கலகலவென்று சிரித்தானையா கதம்புசிங்கம்போலே
இங்கேயிருந்தாலென்னகவலை என்னவாகுமோதான்
கோவிந்தாகோவிந்தாவென குதிரையைத்தட்டிவிட்டார்
அரி அரிஸ்ரீமுகுந்தாவென்று அசுவத்தைதட்டிவிட்டார்
தட்டினதட்டில்குதிரைகிளம்பி தரையில்நில்லாமல்
ஆகாயமார்க்கம்வந்துபாயுது அந்தமேகக்குதிரை
சூரியன்போலதுலங்குதுபாரு சொன்னமேகக்குதிரை
கண்டகண்ட தூரம்பார்த்துராசர்கள் கலங்கிநின்றார்கள்
வாய்பிறகுதிரையைக்கண்ணால் கண்டு ரசனித்திட்டார்கள்
மேகமண்டலமானவிவரமதைப்பார்த்தான் தேசிங்கு
லகானையிழுத்துசிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
சிமிட்டாகொடுத்தவேகத்தினால் சீறிப்பாய்கிறது
கோபம்வந்துமூண்டுகொண்டது ராசாவுக்கானாலும்
காடுமலைகள செடிகளெல்லாம் கலங்கிநடுங்கிடவே
மலைகளிடித்துதவிடுபொடியாய் மண்மேல்விழுந்திடவே
குன்றுமலைகள் தாண்டிகுதிரை குதித்துப்போகுதாம்



குன்றுகளெல்லாம்பொடி பொடியாக குலுங்கிவிழுந்தது
குதிரைபோகும்வேகத்தாலே குன்றுமலைகளெல்லாம்
அப்பொழுதங்கா தவழியும் கொண்டுபோகிறதாம்
ஆறுகுளங்கள் ஏடுக்களெல்லா மதிரநடுங்குதுபார்
அங்காதவழிக்கப்புறமிருக்கிறது அந்தமேகக்குதிரை
குதிரைதட்டின வேகத்தாலே குழந்தைதேசிங்கு
குலுங்கநகைத்துசிமிட்டா கொடுத்தான் குதிரைக்காலும்
நிமிஷநாழிகைக்கு ஐந்நூறுகாதம் நிலையாய்பறக்குது
மலைச்சேர்ந்தகாடுமலைகள் ஒதுங்கிநடுங்குதுபார்
தேசத்திலிருக்கும் ஜனங்களெல்லாம் திரண்டுநடுங்குதுபார்
ஐந்நூறுகாதம்பஞ்சபுரவி ஆகாயம்போகுதுபார்
ஆகாயம்போகும் வேகத்தாலே யலையுதுலகமெல்லாம்
மேகங்கிளம்பிவாயைத்திறந்து மின்னல்கக்குதுபார்
மின்னல் வெளிச்சந்தன்னில்பாயுது வேகமானகுதிரை
தேவர்களெல்லாம்மனதுபயந்து திகைத்திருந்தார்கள்
இருந்தவிடந்தனைவிட்டேயவர்க ளிறங்கியோடிவிட்டார்
மேகமண்டலம்போட்டேயவர்கள் ஒதுங்கியோடினார்கள்
காடுமலைவெகுதூரம் மகமேருசாரல் வந்துபாய்ந்தது
குதிரைப்போகும் வேகத்தால் பூமி தலுங்குதுபார்
பர்வதங்கள் படபடவென்று பதறிநடுங்குதுபார்
அந்தக்குதிரையைத் திருப்பினானந்தபாலகனும்
தெற்குநோக்கிபர்வதத்தைத் தேடியோடுதுபார்
கங்கைகரைநான்குசுற்றுகத்தாநடத்திக்கொண்டுவாரான்
பூமியிலுள்ள ஜெந்துக்களெல்லாம் பொறிகலங்குதுபார்
வானத்திலிருக்கும்மேகபந்திகள் மதிமயங்குதுபார்
மேற்கேவெகுதூரங்கிளம்பி மேலண்டைகொண்டுவாரான்
ஐந்துகாதவழிராயகலாசுவதிரவேகொண்டுவாரான்

## குதிரை தேசிங்குராஜனை மோசஞ்செய்ய நினைத்தது

பாராசாரி மனதுகலங்கி பார்த்து நினைத்ததுபார்
சலாமுமிட்டுவாங்க இந்தப்பாலகன் எங்கேசென்மித்தானோ
இருக்கிறது ரெண்டுநாழிகை லிறக்கடிப்பானே
பூமியில் விழுந்தால் ஜீவனிப்போ போய்விடும்பிரிந்து
தரைதனில் விழுந்தம்தேசிங்குபாலன் ஓட்டிக்கொள்வானே
சிங்கம்போல் ஜெயிக்கும்பாராசாரியும் தெய்வலோகம்போகுதுபார்
ஆகாயமார்க்கம்கிளம்பி போகுமந்தக்குதிரை
புரவிபோகும்வேகமறிந்தான் புலிக்குட்டிதேசிங்கு
தெய்வலோகத்தன்னிலடங்கத்தேடிப்போகுதென்று
லகானிழுத்துச்சிமிட்டாகொடுத்தான் ராஜாதேசிங்கு
இருதாரமாயிரண்டுசிமிட்டாயிடுக்கக்கொடுத்தானும்
சிமிட்டாகொடுத்தவேகத்தினால் திகைத்துநின்றது

இடித்த இடியில்மனது கலங்கி யிருந்துமே ஆடுதுபார்
ஆகாயமார்க்கநந்தத்தளிக்குது அந்தமேகக்குதிரை
அந்தநாட்டையிந்தநாட்டை அசையாமலேபிடித்து
நாலுதிக்குந்திரும்பிப்பார்த்தான் ராஜா தேசிங்கு
ஐம்பத்திருபதிகள் நாடுகளெல்லாம் ஒன்றுந்தெரியவில்லை
அன்னம்புசித்தைந்து நாளாயிற்று அறியாதபாலகனும்
ஆகாயம்பூமிஒன்றாயிருப்பதை அறிந்தான் பாலகனும்
கண்களை வந்து சூழ்ந்தவுடனே கண்டுமேது சொல்வான
கடிவாளத்தைகெட்டியாய்ப்பிடித்து கவிழ்ந்துபடுப்பானும்
குதிரைகயிற்றைகெட்டியாய்ப்பிடித்து குப்புறபடுத்தானும்

## தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதரை நினைத்தல்

அரிபரந்தாமாவென்று அலறியழுதானும்
கோவிந்தா ஸ்ரீகிருஷ்ணாவென்று கூப்பிட்டழுதானும்
ஆபத்பாந்தவா அநாதரட்சகா ஆதிமூலபொருளே
அடியேனைவந்துரட்சிபுமையா ரங்கநாதாவென்று
அலறியழுதுகவிழ்ந்துபடுத்தான் அந்தக்குதிரைமீதில்
கண்ணைமூடிக்கவிந்துபடுத்தான் ராசாதேசிங்கு

## ஸ்ரீரங்கநாதர் தேசிங்கு ராஜனிடத்தில் வந்தது

அழுதவுடனேஸ்ரீரங்கநாதர் அருகில் வந்து நின்று
கடிவாளத்தினைகயிற்றைப்பிடித்து கன்னத்திலறைந்தாராம்
குழந்தையைக்கொண்டாகாயமார்க்கம் கொல்லநினைத்தாயே
இன்றையவரையிலாகாயமார்க்கமெழும்பிபோகவேண்டாம்
கூடவிருந்து தேசிங்குபாலகனைக்கொலுவில் கொண்டுவாரும்
கொஞ்சநாளையில் சண்டைநேரும் குழந்தைக்காகவும்
சண்டைமுனையில் போகுமுனக்கு சகாயம் செய்வேனென்றார்
அந்தமொழியை காதிலேகேட்டு அடிபணிந்தகுடார்
சந்தோஷமாகராஜனைக்கண்டு சாஷ்டாங்கமாகுதுபார்
சேதிகள்சொல்லி ஆகாயமார்க்கம் சேரக்கொண்டுவந்தார்
டில்லிக்குநேரே கொண்டுநிறுத்தினார் தேசிங்குபாலகனை
குழந்தையை எடுத்த குதிரைமீதில கூசாமல்வைத்தார்
அஸ்தமப்படவே கண்கள் தெளிந்து அதட்டியெழுந்தான்
கண்கள் தெளிந்து கண்ணைவிழித்து சுற்றுமுன்பார்த்தான்
பார்த்தவுடனே ஆனந்தமாகப்பதறியழுதானும்
ஆபத்பாந்தவா அநாதரட்சகா ஆதிமூலமே நீ
அடியேனைவந்துரட்சித்தீரே ஐயா ரங்கநாதா
அந்தவார்த்தையைக்காதில்கேட்டார் ரங்கநாதசுவாமி
கண்ணேமணியேரத்தினமேயென் கருவிளங்கினவனாய்
டில்லிக்குநேரேயிருக்குதுபாரு தெய்வலோகப்புரவி
குதிரையிறங்கி சந்தோஷமாக கோட்டைக்குவாருமென
போய்வாரேன் போய்வாரேனிப்போ புத்தியுள்ளமகனே



ஆனால் நல்லதாகட்டுமென்று அடிபணிந்தானும்
பணிந்தவுடனே மாயமாய்ரங்கர் பரவியிருந்தார்கள்

## தேசிங்குராஜன் குதிரையைடில்லியிற் கொண்டுவந்தடக்கியது

போனவுடனே தேசிங்குபாலன் புரவியை என்செய்தான்
மெள்ளசிபிட்டா கொடுத்துகொண்டு மெதுவாய்வரவே
பக்கஞ்சிபிட்டா கொடுத்துக்கொண்டு பாலன்வாரானே
கலகலகலகலகலகலகலவென்று கனைத்துவருகுதுபார்
கனைத்தசத்தத்தைக்காதிலேகேட்டார்களனைட தேசத்தார்
ஐம்பத்தாறுதேசராசரும் ஆகாயமேபார்த்தார்
சூரியனைப்போற்றுலங்கிவருகுது சொர்னமேககுதிரை
சந்திரனைப்போலத்தகதகவென்று சாரிவருகுதுபார்
வருகிறபாலனை கண்ணுற்கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்
தோரணிராசனும் டில்லிபதுரையும் தேடிஓடிவந்தார்
ஆனந்தக்கண்ணீர் புரண்டபமாரியாய் அலறியழுதார்கள்
சந்தோஷம்வந்து மூண்டுக்கொண்டது சகலதேசத்தார்க்கும்
அந்தசமயத்தில் வந்து நிறுத்தினான் அந்தபாலகனும்
பரிசாரிகொண்டு நிறுத்தினான் பாலசூரியன்போல
நிறுத்தினவுடனே புட்பமாரி நிலையாய் பொழிந்தாராம்
தேவரெல்லாம் சந்தோஷமாக தேன்மாரிபொழிந்தார்கள்
தோரணிராசன் தரணிசிங்குமே தேடியோடிவந்தார்
வந்துமகனைக்கண்ணுலே கண்டு வாரியெடுத்தாராம்
வாரியெடுத்து மடிமீதுவைத்து மகனை முத்தமிட்டார்
தேசிங்குபாலனை மடியில்வைத்து திருஷ்டிகழித்தாராம்
சந்தோஷமாக மகனையெடுத்து சாந்திகழித்தாராம்
ஐம்பத்தாறுதேசராசரும் ஆலத்தியெடுத்தாராம்
மங்களம்பாடி வாழ்த்தியெடுத்துமைந்தனைமுத்தமிட்டார்
டில்லிபதுரையும் தேசராசரும் சேரவோடிவந்தார்
முழங்கால்மண்டிபோட்டேயவர்கள் முன்னேசலாஞ்செய்தார்
சபாஷ்சபாஷ்ரேசீதாரஷூரே ராசாதேசிங்கு
பரிசலாமுங்கொடுத்தானையாபாலனெழுந்திருந்தார்
முன்குதித்தனமுமாகவந்து உகந்துசலாஞ்செய்தார்
சைகையார்த்தியாதைசெய்தான் காளைகுழந்தையவன்
குதிரைக்குவேண்டியபுல்லுதண்ணீர் கூசாமல்வைத்தார்
சமயமிகவந்து நிறைந்துகொண்டார் சகலதேசத்தாரும்

## டில்லிராஜன் தேசிங்குராஜனுக்கு வெகுமதி கொடுத்தது

டில்லிபதுரையும் தேசிங்குராஜனை சேர்த்தணைத்தெடுத்து
உயர்ந்தசிம்மாதனத்தில்வைத்து ஒதுங்கி பக்கம் நின்றான்
ஆண்பிள்ளைவாடாதம்பிவாடா ராஜசிங்காபு
சத்துகளஞ்சியபணத்தையெடுத்து பகுதிகட்டுமென்றான்
ஆதிரையாயிரமானையாயிரம்கொண்டு நிறுத்துமென்றான்

கணக்கில்லாசேனைதளத்தைகடுகதிறத்துமென்றான்
தேசிங்குக்கேற்றமாணிக்கவுடுப்பு தேடிகொண்டுவாரும்
மாணிக்கமாலைமுத்தாரங்கள் வரிசைகொண்டுவாரும்
தெய்வலோகத்து பாரசாரியை தேடிகொண்டுவாரும்
தேசத்தார்க்கு வெகுமதிசெய்ய தேடிகொண்டுவாரும்
நாமே ஏறும்புரவி நீலவேணியை துரத்திவாருமென்றான்
அந்தவார்த்தையை காதிலேகேட்டான் ராஜசிங்கபாபு
சொன்னநாழிகைக்கு தயாராச்சுது சூழ்ந்தகொலுவினிலே
தயாரான தைகண்ணாலேகண்டுடில்லிபதுரைதானும்
முத்தாரமும் ரத்னாரமும் முன்னேகழட்டிபோட்டான்
தேசிங்குக்கேற்றவெகுமதியெல்லாம் சேர்த்துக்கொடுத்தான்
மோவுத்துக்காரனை கண்ணாலேகண்டு முன்னேஓடிவந்தான்
இவரவர்கேற்றவெகுமதியெல்லாம் சேர்த்து கொடுத்தான்
தேசிங்கருகிலிருக்குமவனை திருஷ்டித்துதான் பார்த்தான்
முத்தாரங்கள் ரத்னாரங்கள் கழுத்திற்போட்டானும்
அவனுக்கேற்றவெகுமதி எல்லாமங்கேகொண்டுவந்தான்
ஐயாகேளுமையாகேளும் மோவுத்துக்காரனே
தானேறும்புரவிநீலவேணி நீயேறவேணுமென்றான்
ஐம்பத்தாறுதேசத்திலுள்ள ராசருமேறமாட்டார்கள்
ஏறினால்நீயேறவேணும் என்னென்றுகேளாய்
உன் - ஆத்தறிந்துயினுமாக உனக்குத்தந்தேனென்றான்
ஆனால்நல்லதாகட்டுமென்றதனைஒத்துக்கொண்டான்
தேசிங்குபாலனைக்கண்ணாலே கண்டுசேதியென்னசொல்லு
ஐம்பத்தாறுதேசராசர்க்கும் அதிபதிதான்தானே [கிறார்
எனக்குமிஞ்சின அதிபதியாகவிருந்தரசுசெய்யும்
என்மகள்ராணியம்மாளை யிங்குதந்தேனென்றான்
கலியாணஞ்செய்தரசுழுகத்தைக்காத்துக்கொள்ளுமென்றான்
எப்போதிஷ்டமோஅப்போ கலியாணஞ்செய்துபோமென்று
நீ-இட்டவேலையைதலையாலேசெய்ய நிச்சயமாகணையா [ன்
அவ்வார்த்தைகாதிலேகேட்டா னதியாதபாலகனு
கோவிந்தாகோவிந்தாவென்று குப்பென்றெழுந்தானும்
டில்லிபதுரையைசேர்த்தணைந்து சேதிசொல்லுகிறான்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையே நீர்
சமஸ்தானத்தையறியாதவனுதாக்கு வேண்டுமையா
செஞ்சியைவிட்டாறுமாதமாச்சு செலவுதாருமையா
அம்மொழியைக்காதிலேகேட்டான் டில்லிபதுரையும்
வாரியெடுத்துமார்மீதணைத்துவர்ன முத்தமிட்டான்
அந்தமொழியைக்காதிலேகேட்டான் தேரணிராஜனும்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையே நீ
ஐந்துவருஷபாலனுக்குதே அறியாத என்குழந்தை
இப்போதுகலியாணஞ்செய்ய எனக்குசம்மதியில்லை



இருபதுவயதில்கலியாணஞ் செய்திட்டுக்கொண்டுபோறேன்
ஆனால்நல்லதாகட்டுமென்று அவனுஞ்சம்மதித்தான்
அண்ணாவாடாதம்பிவாடா ராசசிங்கபாபு
திவ்யசேனை ஆனைகுதிரை செஞ்சியில்கொண்டுசேரும்
என்னைநிகரும்செஞ்சிகோட்டைபுரபணமும் இல்லை யென்றுசொ
ஐம்பத்தாறுதேசராஜாக்கள் அனைவரையும் பார்த்து [ல்லும்
செஞ்சிராசனால் சிறைமீண்டுபோங்கள்தேசராசர்களே
போய்வாரேரும்போய்வாரேம் புண்ணியதுரைமாரே

## தேசிங்குராஜன் செஞ்சிக்கோட்டை வந்து சேர்ந்தது

தேரணிராஜன்சிற்றப்பதுரையும் தெருவில் வந்தார்கள்
மோவுத்துக்காரன் நீலவேணியில் முன்னேவந்துநின்றான்
அவரவர்தேசங்களிலவரவர் போய்ச்சேர்ந்தார்
செஞ்சிகோட்டையில் வந்துசேர்ந்தான் தேசிங்குபாலன்
வருகுமுன்னமேசேதியறிந்து வருந்தியேபெற்றவளும்
ஆயிரந்தோழிமார்களுடனே அங்கேவந்துநின்றாள்
வந்தவுடனேதாயைக்கண்டு வணங்கிநமஸ்கரித்தான்
வந்துபணிந்தமகனை யெடுத்து வாரி முத்தமிட்டாள்
ஆயிரந்தாதிகள்வந்தே முத்து ஆலாத்தியெடுத்தார்கள்
திருஷ்டிகழித்துமங்கள திருஷ்டி தெருவிலெறிந்தார்கள்
முக்கனிசர்க்கரைபாலமுதுடனே முன்னேவட்டித்தார்
மகனை யெடுத்துமடியில்வைத்து மகிழ்ச்சியடையாமல்
என்னைவிட்டுநீ எப்படி போனாய் எந்தன்கண்மணியே
போனது என்னைய முதல் புசிப்பெடுப்பதில்லை
தாய்தகப்பனுமைந்தனைப்பார்த்து சந்தோஷமானார்கள்
எழுவருஷம்சந்தோஷமாக இருந்தரசு செய்தார்கள்
பட்டங்கட்டி மூன்றும்மாதத்தில் பாலனை பெற்றவளும்
சாயுஜ்யத்தைப்போயடைந்தாள் பாக்கியராம்பாயி
தேசிங்குதித்த எட்டாம் வருஷம் தேரணி மகாராசன்
சாயுஜ்யமாம் செய்தேயவரும் பரகதியைச்சேர்ந்தார்
சிற்றப்பதுரைதரணிசிங்கு செஞ்சியையாண்டிருந்தார்
டில்லிக்குசென்றுராணி அம்மாளை செஞ்சிக்குகொண்டுவந்தர்
பதினெட்டுவயது பாலனுனன் ராஜாதேசிங்கு
கலியாணஞ்செய்ய வெத்தனித்தார் கண்மணிபாலனுக்கு
சிற்றப்பதுரை தரணிசிங்கு தேடியென்னசெய்தார்
ஆறுமாதமாய்கலியாணம் பண்ணியறையிலேவைத்தான்
ராணிதேவியைக்கல்யாணம்பண்ணி இராசமுடிதரித்தார்

## தேசிங்குராஜன் திருக்கல்யாணம் செய்துகொள்ளல்

திருமாங்கட்டிகலியாணஞ்செய்தார் செஞ்சிக்கோட்டையில்
பெண்சாதிமுகத்தைப் பார்த்தறியான் புலிக்குட்டிதேசிங்கு
புருஷன்முகம்பார்த்தறியாள் புண்ணியராணியம்மாள்

இரங்கரைநோக்கி பூசைசெய்தாள் ராணியம்மாளும்
மூன்றரை நாழிபூசைசெய்து முழுதுமாண்டிருந்தாள்
இப்படி பன்னிரண்டுவயதுவரைக்கும் ஏகசக்கராமாண்டான்
செஞ்சிதேசத்தையாண்டிருந்தான் சிங்கக்குட்டிபோல
இந்தமட்டோடே ஆச்சுதுபாரும் அந்தசெஞ்சிசேதி

## டில்லிராஜன் நவாப்பிடத்தில் பகுதிக்கனுப்புதல்

டில்லியிலிருக்கும்டில்லிபதுரை சேதியென்னசொல்வான்
அண்ணுவாடாதம்பிவாடா இராசலிங்கபாபு
ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் பகுதிகட்டுகிறார்கள்
நூற்றெழுபத்திரண்டு பாளையப்பட்டு ராஜமானுனும்
ஆர்காடுடையாளும் நவாப்புசைதுல்லாஅவனும்கட்டினுனும்
சல்திசல்திசொல்லும் இராசலிங்கபாபு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் இராசலிங்கபாபு
முழங்கால்சீலேபோட்டேயவனும் முன்னேசலாம் செய்தான்
ஐயாகேளுமையாகேளும் டில்லிபதுரையே நீ
ஐம்பத்தாறுதேசராசரும் பணங்கட்டினுர்கள்
ஆர்க்காடு நவாப்புசைதுல்லா அவனுங்கட்டவில்லே
சலாம்செய்துபாட்சபணத்தை சலதிகொண்டுவாரேன்
தோப்புநபணமும்நிலுவையிருக்குதுபழஞ்செஞ்சியிலே
பனிரண்டுவருடம் தோப்புநபகுதி பணமுங்கட்டவில்லே
அந்தசொல்லேகாதிலேகேட்டான் டில்லிபதுரைதானும்
அண்ணுவாடாதம்பிவாடா கணக்கப்பிள்ளைவாடா
ஆர்காட்டையாளும்நவாப்புசைதுல்லா பணமுங்கட்டவில்லே
ஐயாகேளுமையாகேளும் நவாப்புசைதுல்லா
பனிரண்டுவருஷம்தோப்புநபகுதி பணமுங்கட்டவில்லே
நூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டு உனக்கேபாளுனும்
தேசத்துபணமும்முன்னிட்டபணமும் டில்லிக்குவரவில்லே
எட்டுநாளையிலனுப்பினுலாச்சு இந்தபணத்தையெல்லாம்
இல்லாமற்போனல் நவாப்பை ஆடுவேன்சிறையென்று
சிறையிற்போட்டு மானபங்கஞ் செய்தனுப்புவேனன்
அந்தப்படிக்கே எழுதிமுடித்தான் அந்தஓலையைத்தான்
நீயேவாடா நீயேவாடா அர்க்காருபாப்பையா
ஐம்பதுபோடலாய்த்துமாரை அதிரக்கொண்டுபோம்
அரிகத்துபண்ணி பணத்தைவாங்கடா அர்க்காருபாப்பையா
ஆனல்நல்லதாகட்டுமென்று அவனுமோடிவாரான்
பத்துநாளையில் ஆர்க்காடுதேசம் பகுதிகேட்கவந்தான்
சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
டில்லியிலிருந்துஓலேவந்தது நவாப்புசைதுல்லா
டில்லிபேச்சைகாதிற்கேட்டு திடுக்கிட்டெழுந்தானும்
அண்ணுவாடாதம்பிவாடா ரங்கநாதபிள்ளே



வாசித்துப்பார்த்து சேதிஎனக்குவகுத்துச்சொல்லுமென்றான்
அந்தவார்த்தைகாதிற்கேட்டு திடுக்கிட்டெழுந்தானும்
ஓலையைப்பிரித்துவாசித்துச்சொல்லும் ரங்கநாதபிள்ளே
ஆனல்நல்லதாகட்டுமென்றான் ரங்கநாதபிள்ளே
ஓலையைப்பிரித்துசேதியுரைத்தான் ரங்கநாதபிள்ளே
கேட்டவுடனே மனதுகலங்கி கீழேஓடிவந்தான்
கஜானதிறந்துதிரவியமெல்லாம் கண்ணாலேதான்கண்டான்
அண்ணுவாடாதம்பிவாடா பங்காருநாயக்கா நீ
கஜாஞ்சியபணமும்டில்லிபணமும் கட்டிப்போடுமோதான்
அதிகமாகுமோ குறைவாகுமோ நீ அறிந்துசொல்லுமென்றான்
ஐயாகேளுமையாகேளும் நவாபுசைதுல்லா
டில்லிபட்டணத்திற் கஜாஞ்சியபணம்போனகுறையுதையா
கணக்குப்பார்த்துதோப்புநபணத்தைசல்தியழையுமென்றான்
இருபதுநாளில்பணத்தை எடுத்தனுப்புமென்றான்
ஆனல்நல்லதாகட்டுமென்று அவனுமோடிவந்தான்
ஐயாகேளுமையாகேளும் அர்க்காருபாப்பையா
கணக்கைசோதித்து டில்லிகணக்கை கடுககொண்டுவாரேன்
இருபதுநாளில் பாட்சபணத்தை எடுத்துமேவாரேன்
அப்படியேவாரும்சல்தி அர்க்காருபாப்பையா
ஆனல்நல்லதாகட்டுமென்றான் அர்க்காருபாப்பையன்
அந்தமட்டே நவாப்புசைதுல்லா அரசுசெய்யலுற்றான்
கோபம்பிறந்துசைதுல்லாவும் குருராயமைந்தானும்
அண்ணுவாடாதம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
பெரியகணக்கரங்கநாதபிள்ளையை பிடித்துவாருமென்றான்
நல்லதென்றுபங்காருநாய்க்கன் நாடிஓடிவந்தான்
சல்திசல்தியோடிவாடா ரங்கநாதபிள்ளே
ஸ்நானஞ்செய்துபூசைமுடித்துசாப்பிட்டிளைப்பாறி
அதிகசந்தோஷங்கொண்டேயிருக்கும்கணக்குபிள்ளைவாடா
அந்தசொல்லேகாதிலேகேட்டான் இரங்கநாதபிள்ளே
கணக்கையெடுத்து சலாஞ்செய்து கடுகஓடிவந்தான்
ஐயாகேளுமையாகேளும் இரங்கநாதபிள்ளே
நூற்றெழுபத்திரண்டு பாளையப்பட்டு நமக்கேயானுலும்
பாளையப்பட்டுராஜதுரைகள் பகுதிகட்டுகிறார்கள்
கட்டாதிருக்கும்ராஜதுரைகளை கடுகசொல்லுமென்றார்

## இராஜாக்கள் பகுதிகட்டும் விபரம்

தேசத்துராசதுரைகளையுந் தெரியச்சொல்லுமென்றான்
ஆனலும் நல்லதாகட்டுமென் றவனுஞ்சொல்லிவாரான்
ஐயாகேளுமையாகேளும் நவாபபுசைதுல்லா
திருவையென்று பிள்ளைதவர்கள் நிலைமையாய்கட்டுகிறார்கள்
தேசத்துப்பட்டுதுவுத்துக்காரனும் திரைபணங்கட்டிவாரான்

திருவண்ணாமலைசுபங்கிதுரை திரைபணங் கட்டுகிறான்
கள்ளக்குறிச்சி கான்சாபப் கட்டிவாரான் பணத்தை
மதுரை சீமைமலையாளத்தான் வாய்தாபணங்கட்டுகிறான்
திண்டுக்கல்லுகொல்லுமுகத்தான் திரைபணங்கட்டுகிறான்
அரியலூர் பெரியதுரையும் பணமுங்கட்டிவாரான்
எட்டியாபுரத்துபாளையக்காரன் பணமுங்கட்டிவாரான்
திரிசிக்கோட்டை ஷேக்முகம்மது பணமுங்கட்டிவாரான்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரர் பணமுங்கட்டிவாரார்
இன்றையவரைக்கும்தோப்புருபணமும் நிலுவையொன்றுமில்லை
நானொருசேதி சொல்லுகிறேன் கேள் நவாப்புசைதுல்லா
செஞ்சிக்கோட்டையாளுகின்ற தேரணிமகாராசன்
சூரசிங்குகுமாரனையா தேரணிமகாராசன்
தேரணிராசன் குமாரனையா தேசிங்குபாலன்
சிம்மாசனத்தில் அரசுசெய்கிறான் சிங்கக்குட்டிபோலே
அந்தசெஞ்சியையாளும் தேசிங்கு பணமுங்கட்டவில்லை
பனிரெண்டுவருஷந்தோப்புரு பணம் செஞ்சியில்வரவேண்டு [ம்
வாய்தா பணம்வேறேயிருக்குது பழஞ்செஞ்சியிலே
தோப்புருபணத்துக்குப்போய்வாடா நீ தோன்றமல்லண்ணா
அந்தபேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லண்ணன்
நானொருமொழிசொல்கிறேன் கேளும் நவாப்புசைதுல்லா
ஒண்டியாய்நான் போகமாட்டேன் நவாபுசைதுல்லா
துருப்புகுதிரைமுந்நூறெனக்கு துரிதமாய் தரவேணும்
சாவிமூங்கில்சவாரிசண்டை தரவேணுங்கூடவேதான்
கோபுரவண்டி குள்ளருவண்டி கூடத வேணும்
இந்தப்படிக்குகொடுப்பாயானால் நவாப்புசைதுல்லா
செஞ்சிக்கோட்டை நான்போய்வாரேன் நவாப்புசைதுல்லா
போனநாழிசெஞ்சி ராஜனை பிடித்துக்கொண்டுவாரேன்
வரசமற்போனாலுசெஞ்சிராஜனை மடக்கிக்கொண்டுவாரேன்
கறுனுபணத்தைகட்டாமற்போனால்கழுவில்போட்டுவாரேன்
பகுதிபணத்தைக்கட்டாமற்போனால்கழுவில்போட்டுவாரேன்
சிறையில்வைத்த அரிகத்தபண்ணி சேரக்கொண்டுவாரேன்
இந்தப்படிக்குத்தாரங்கொடுத்தால்அங்கேபோறேனென்றான்
அந்தவார்த்தையைகாதிலேகேட்டான் நவாபுசைதுல்லா
சலாம்வாங்கிதிருப்பினனையா தோன்றமல்லோஜி
அரண்மனைக்குள்ளே சென்றனந்த தோன்றமல்லோஜி
ஸ்நானஞ்செய்துசாப்பிட்டானையா தோன்றமல்லோஜி
தலைக்குத்தலைப்பாபோட்டானையா தோன்றமல்லோஜி
அங்கவஸ்திரமால்போட்டானையா தோன்றமல்லோஜி

## தோன்றமல்லன் செஞ்சிக்குப் போதல்

அரண்மனைவிட்டுவெளியேவந்தான் தோன்றமல்லனும்
அதற்குமுன்னேதயாராச்சுது பட்டத்துயானையும்



ஆனைக்கொம்புக்குகத்திகட்டினான் தோன்றமல்லோஜி
தாராயணகோவிந்தாவென்று யானையேறினானும்
செஞ்சிக்கோட்டைக்குப்பயணமானான் தோன்றமல்லனும்
கணகணகணகணகணகணவென்று கத்திமின்னுதுபார்
பளபளபளபளபளவென்று பட்டாமின்னுதுபார்
தடதடதடதடதடதடவென்று குதிரைகள்நடக்குதுபார்
இங்கேயடித்தநகாருசத்தம் திமிரியிற்கேட்குது
அந்தவேளையிலென்னசெய்கிறான் ஷேக்முகமதையா

## தோன்றமல்லனை ஷேக்முகமது காணல்

எதிரிளவரோ வந்தானென்று ஷேக்முகமதுவும்
மூந்நூறுகுதிரைதயார்பண்ணினான் ஷேக்முகம்மதுவும்
எண்ணூறுதுருப்பு குதிரையுடன் முன்னேஓடிவந்தார்
தோன்றமல்லனைக்கண்ணாலேகண்டான் ஷேக்முகம்மதுவும்
பதிலசலாமுங்கொடுத்தானையா தோன்றமல்லனும்
எங்கேயிருந்தெங்கேபோறீர் தோன்றமல்லண்ணா
இங்கே வந்தவயணமென்ன தோன்றமல்லண்ணா
நேற்றையநிலுவைபசாபணமும் கட்டியனுப்பினேன்
இன்றையநிலுவைபசாபணமும் கட்டப்போகிறேன்
எனக்கீனையில் நகாருபோட வயணமென்னையா
அந்தவார்த்தைக்கென்ன சொல்கிறான் தோன்றமல்லனும்
சண்டைக்குவரலைசாடிக்குவரலை ஷேக்முகம்மதையா
செஞ்சிகோட்டைபணத்துக்கு போறேன்ஷேக்முகம்மதையா
அந்தபேச்சைகாதிலேகேட்டான் ஷேக்முகமதையா
நானொருவார்த்தைசொல்கிறேன்கேளும் தோன்றமல்லண்ணா
அவனேமகசூரனையா இராசாதேசிங்கு
செஞ்சிக்கோட்டைசிப்பாயையாராஜாதேசிங்கு
சுத்திப்பிடித்த சிப்பாய் மகனும் ராஜா தேசிங்கு
அவன் — கண்ணையுருட்டிபார்த்தானானால் சிப்பாய்தேசிங்கு
காலாகலங்களும்கைபலங்களும் கதறியோடுமே நான்
பாழும் பாறும் நீர்த்துப்போடுவன் இராசாதேசிங்கு
சண்டைபண்ணிஜெயிக்கமாட்டாய் தோன்றமல்லண்ணா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லோஜி
என்னபேச்சுபேசினையடா ஷேக்முகம்மதையா
அவன் — சூரத்தனக்குத்தெரியும் ஷேக்முகமதையா
செஞ்சிக்குசென்று நந்தன்வலிமை தெரியகாண்பிக்கிறேன்
போய்வாரேன் போய்வாரேன் ஷேக்முகம்மதையா
கட்டியிருந்தகுதிரைகளெல்லாம் நடக்குது யானையும்
போகுதுபோடென்றுபோறானையா தோன்றமல்லனும்
ஆரணிக்கோட்டைக்கிரண்டு நாழிகையில் நகாருபோட்டானும்
வேங்கடராயர்சீனிவாசராவு சந்திரமகாராசாவும்

சதுர்தீர்த்தேயுட்கார்ந்திருந்தார் மூன்றுதுரைமாரும்
கார்பார்பண்ணுறெவேங்கடராயா காதிலேகேட்டிடவே
எதிரியாகவே வந்தானென்று வேங்கடராயரும்
ஆயிரங்குதிரை தயார்பண்ணினார் வேங்கடராயரும்
கோட்டையிலிருந்து வெளியேவந்தார் வேங்கடராயரும்
துருப்பிலுள்ள ஆயிரங்குதிரை துரத்திஓடிவந்தார்
தோன்றமல்லனைக்கண்ணாலே கண்டார்வேங்கடராயரும்
சலாமையா சலாமையா தோன்றமல்லோஜி
நீ-இங்கேவந்த பயணமென்ன தோன்றமல்லோஜி
தேற்றுநிலுவை பைசா பணமுங் கட்டியனுப்பிவைத்தேன்
என்சீமையில் நகாருபோட்ட பயணமென்னவையா
நானொருபேச்சு சொல்லுகிறேன் கேளும் வேங்கடராயரே
சண்டைக்குவா லேசாடிக்குவாலே வேங்கடராயரே
செஞ்சிகோட்டைபணத்துக்கு போறேன்வேங்கடராயரே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் வேங்கடராயனும்
நானொருசேதிசொல்லுகிறேன் கேளும்தோன்றமல்லண்ணு
அவனிடசேதி எனக்குத்தெரியும் தோன்றமல்லண்ணு
அவன் பிறந்தஏழாம்வருஷம் தாயார்சென்றுபோனாள்
தேசிங்குபிறந்த எட்டாம்வருஷம் தகப்பன் சென்றுபோனான்
சித்தப்பதுரை தரணிசிங்கு எடுத்துவளர்த்தாராம்
பதினெட்டு வயதில் கலியாணம் பண்ணினார்சிற்றப்பராசாவும்
இப்போ இருபத்திரண்டுவயதுள்ளபாலன் ராசாதேசிங்கு
ஐம்பதுதுலாம் பரிசைகத்தி அவனிடகத்தியும்
ஏழுதுலாம்பரிசைபலா அவன்கைபலாவும்
அவனுக்கேற்ற தெய்வலோக பாராசாரிகுதிரை
பாராசாரிஏறினானால் ராசாதேசிங்கு
பட்டாவுநிலை கையிலேபிடித்தால் ராசாதேசிங்கு
பன்னிருகாதம்பாய்ந்து வெட்டுவான் ராசாதேசிங்கு
இணையொருவ ரெங்குமில்லே தேசிங்குமன்னுக்கு
பாற்சமுத்ரம்போலேதுரைகள் படைகளெதிர்த்தாலும்
பத்துநாழிகையிலேபார்த்து கொண்டுபழஞ்செஞ்சிபோவான்
சிங்கம்போலேபுகுந்து வெட்டுவான் ராசாதேசிங்கு
புலியைப்போலே புகுந்துவெட்டுவான் ராசாதேசிங்கு
மாறுமாறென்று தீர்த்துபோடுவான் ராசாதேசிங்கு
அவனை ஜெயிப்பாரொருவருமில்லே தோன்றமல்லண்ணு
சண்டைபண்ணி ஜெயிக்கமாட்டாய் தோன்றமல்லண்ணு
சமாதானத்துக்குடன் படமாட்டான் ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லண்ணு
இனியில்லா பயம்பிடித்தது தோன்றமல்லனுக்கு
கையுங் காலும் உதறலெடுத்து கலங்கியிருந்தானும்
அந்தவேளையிலென்ன சொல்லுகிறார் வேங்கடராயரும்



மெத்தசூரத்துக்காரனவனும் ராசாதேசிங்கு
பணமென்ற சேதிகேட்டால்பாய்ந்து குதித்திடுவான்
[illegible] மெத்தக்கெட்டிக்காரனையா ராசாதேசிங்கு
அவன் விஷ்ணுபக்திகாரனையா ராசாதேசிங்கு
இரவு பகலும் ரங்கநாதரை எண்ணியிருப்பவன் தான்
நாமத்தைக்கண்டால்பயப்படுவானையா ராசாதேசிங்கு
அந்தசேதியைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
சந்தோஷமாக வேங்கடராயனை தழுவிக்கொண்டானும்
இனியெனக்குபயமில்லையென்று சுமாந்துசொன்னானும்
நாமம்போட்டு செஞ்சிராஜனை நடத்திக்கொண்டுவாரேன்
எந்தவிதமும் செஞ்சிராஜனை இடுவேன்சிறையென்றான்
ஆற்காடுதேசங்கொண்டவனை அடக்கப்போடுவேன்பார்
செய்யாமற்போனாலெனது பேரும் தோன்றமல்லனல்ல
போய்வாரேன்போய்வாரேனென்றும் வேங்கடராயரே
கட்டியிருந்தகுதிரையெல்லாம் நடந்ததுபாளையமும்
போடுபோடென்று போறானையா தோன்றமல்லனும்
செஞ்சிக்கோட்டை மண்ணைமிதித்தான்தோன்றமல்லனும்
செஞ்சிக்கோட்டை ஐந்துநாழிவழிதேவனூருபேட்டை
தேவனூருபேட்டை ஓரத்திலே சங்கராபரணியாறு
ஆற்றங்கரையில்வந்தேயவனும்பாளையம் போட்டானும்
மூன்று நாள்வரைக்கும்சத்துபண்ணாமல் முழித்திருந்தானும்
நாலாநாள் காலையிலே நகாருபோட்டானும்
இங்கேபோட்ட நகாருசத்தம்செஞ்சியிற்கேட்டதுபார்
அதுசெஞ்சியில் பூசைபண்ணுகிறான் ராசாதேசிங்கு
பழஞ்செஞ்சியில் கார்பார்பண்ணுகிறார் சிற்றப்பராசாவும்
என்றுமில்லாத நகாருசத்தம் இன்றுவந்ததென்ன
அரங்கத்துமேலேறிட பார்த்தான் சிற்றப்பராசாவும்
ஆற்றங்கரையில் நிறைந்திருக்குது நவாப்புபாளையமும்
கண்ணாலே கண்டு மனதுகலங்கி கடுகவென்னசெய்தான்
ஒற்றைகுதிரைபோட்டுமே ஏறி உடனேஓடிவந்தான்
அந்தவேளையில் பூசை பண்ணுகிறான் ராசாதேசிங்கு
அரிநமோ நாராயணாவென்று பூசைபண்ணுகிறான்
கிருஷ்ணா அரிகோவிந்தாவென்று பூசைபண்ணுகிறானும்
செஞ்சிக்கோட்டைரங்கநாதரை தியானஞ்செய்கிறானும்
பூசை முகத்திலே வந்துநின்றான் சிற்றப்பராசாவும்
என்ன பூசை பண்ணிறையடா மகனேதேசிங்கு
தேவனூரிலே கணகணவென்று நகாருமுழங்குதிப்போ
பாளையம் வந்து நெருங்கியிருக்குது மகனேதேசிங்கு
துரைமாரும் நவாப்புப்பாளையம் நாடியிருக்குதுபார்
ஆற்றங்கரையில் நவாபுபாளையம் அண்டியிருக்குதுபார்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராசாதேசிங்கு

கண்ணைவிழித்துப்பார்த்தானையா ராஜாதேசிங்கு
ராமுராமுரே தேவாவுடக்கு சித்றப்பராசாவே
என்னபேச்சுபேசினீரையா சித்றப்பராசாவே
கலகலவென்று சிரித்தானையா ராசாதேசிங்கு
கோபம்கொண்டு நகைத்தவனும் கொல்லும்சிங்கம்போல
ஐயாகேளுமையா கேளும் சித்றப்பராசாவே
பன்னிரண்டுவருஷமோப்புருபண மும்தாம்மண்டையிருக்குது
நமதுகோட்டைக்கு பயமேயில்லை நக்கேயானாலும்
ராமாராமாவென்று ராஜ்ஜியமாளுகிறேன்
ராஜகுலத்தில் நானும்பிறந்தேன் ரோஷக்காரனாக
எதிராளியான நவாப்புதண்டு பக்கத்தில்விழுந்ததோடா
படையாளியான நவாப்பு தண்டு பக்கத்தில் விழுந்தோடா
தேசமெல்லாம்சேர்ந்துவந்ததோ சித்றப்பராசாவே
இன்னுமவரைகாலநாழி பொறுத்துக்கொள்ளும் சித்றப்பராசாவே
டாருடாருய்க்கிழித்துப்போடுறேன் சித்றப்பராசாவே
ஆறிலுஞ்சவு நூறிலுஞ்சவு சித்றப்பராசாவே
பிறந்தவன்றைகேசாவிருக்குது சித்றப்பராசாவே
வந்தவனாரென்று கேட்டுப்பாரு சித்றப்பராசாவே
இதற்கோ நீயும் பயந்தாயையா சித்றப்பராசாவே
பூசை முகத்தை கெடுக்கவேண்டாம் சித்றப்பராசாவே
ஆனால் நல்லது கட்டுமென்றான் சித்றப்பராசரும்
அந்தவேளையிலென்ன பண்ணுகிறான் சித்றப் பராசாவும்
சித்றப்பதுரை தரணீசிங்குமே கொலுவுக்குவாரானும்
இரண்டுபேர் அர்க்காமாரை தோன்றமல்லனுக்கு
அஞ்சல்மேலே அஞ்சல்போகுது தோன்றமல்லனுக்கு
தோன்றமல்லனைத்தேடிவந்தார் அர்க்காருமார்களும்
வந்தவனைத்தன் கண்ணாலே கண்டான் தோன்றமல்லனும்
ராமுராமுரேரா முராமுரே அர்க்காருமாரே நீர்
என்னைத்தேடிவந்தகாரியம் எனக்குச் சொல்லுமையா
அந்தப்பேச்சை காதிலேகேட்டார் அர்க்காருமார்களும்
எம்முடையானும் தேசிங்குராசா உன்னையழைக்கச்சொன்னார்
சல்திசல்திபுறப்படுமென்றார் அர்க்காருமார்களும்
இச்சேதியைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்

### தோன்றமல்லண்ணன் தேசிங்குராஜனிடம் வருதல்

கால்நடுங்கிகைநடுங்கி யானையேறினானும்
சுண்ணும்பெடுத்து ரச்சலும்பிழிந்து நாமத்தைப்போட்டானும்
ஆனைக்குத்திரத்தமெடுத்து நடுவில் போட்டானும்
பட்டநாமம் போட்டானையா தோன்றமல்லனும்
அந்தவேளையிலென்ன பண்ணுகிறான் ராசாதேசிங்கு
பூசைமுழுதும் முடிந்துதையா ராசாவுக்கானும்



பூசையைவிட்டு வெளியேவந்தான் ராசாதேசிங்கு
சிங்காரமாலிலே வந்தானையா ராசாதேசிங்கு
திருமணிப்பெட்டிகையிலேகொடுத்தான் ராசாதேசிங்கு
ராமாராமாவென்று திருமணிநெற்றியிலிட்டானும்
சரிகைமூண்டாசு தலையிலேதரித்தான் ராசாதேசிங்கு
கவிக்கத்துராவெடுத்துக்கட்டினான் கதும்பும்சிங்கம்போல
கடாவெடுத்துத் தலையில்போட்டான் ராசாதேசிங்கு
கைக்குச்சீராகட்டிக்கொண்டான் ராசாதேசிங்கு
ஈர்ந்துதுலாம்பரிசைக்கத்தி கையில்பிடித்தானும்
ராமன்போலேஉட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
மன்மதன்போலேஉட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
அருகிலிருந்த அர்க்காருமாரை யதட்டிக்கூப்பிட்டான்
கூப்பிட்டழைத்தசேதிசொன்னான் கொலஞ்சிங்கம்போலே

### தேசிங்குராஜன் பாளையபட்டரை கொலுவுக்கு வரவழைத்தல்

ஜெயராமுகெங்காராமை கொலுவுக்குவரச் சொல்லும்
தத்தார்சிங்குகேபாலசிங்கு நமதுகொலுவிலழையும்
ராமுசிங்கு லட்சுமணசிங்கு நமதுகொலுவிலழையும்
ராமுதுசிலட்சுமணதாரியை கொலுவுக்குவரச்சொல்லும்
ராமுசிங்கை தரணீசிங்கை கொலுவுக்குவரச்சொல்லும்
மான்சிங்குதிருபுசிங்கை கொலுவுக்குவரச்சொல்லும் [லும்
பேட்டைசிப்பாய்மோவுத்துக்காரனை கொலுவுக்கு வரச்சொல்
சித்றப்பதுரைதரணிசிங்கை கொலுவுக்குவரச்சொல்லும்
ஜல்திஜல்தியென்று சொன்னான் ராசாதேசிங்கு
சொன்னநாழிகைக்குக்கொலுவில சூழவோடிவந்தார்
இல்லைதமாக இருக்குதங்கேசெஞ்சி கோட்டைக்குள்ளே
அந்தவேளையிலென்ன செய்கிறான் தோன்றமல்லனும்
ஆனையைவிட்டுக்கீழேகுதித்தான் தோன்றமல்லனும்
காராமுகோவிந்தாவென்று கோட்டைக்குள்ளேவந்தான்
சதுர்மூன்னுக்குவந்தானையா தோன்றமல்லனும்
முழுங்காலசீலைபோட்டடையவனும் மூன்னேசலாம்செய்தான்
பதில்சலாமுங்கொடுத்தானையா ராசாதேசிங்கு
கண்ணாலேகண்டுதோன்றமல்லனை கடுகசொல்லலுற்றான்
நீ இங்கே வந்தவயணமென்ன தோன்றமல்லண்ணா
எனக்கு இருபத்திரண்டு இப்போதாச்சுது வயது
இத்தனைநாளாய் நவாப்புசேனைகள இங்கேவந்ததில்லை
கவிழ்த்துக்கசெஞ்சிகோட்டைக்கு உகந்துவந்திரோ
அதரிமங்கொண்டுசெஞ்சிகோட்டைக்கு சார்ந்துவந்திரே
எம்மீசைகவில நகைகுபோட எண்ணவலுமைகொண்டீர்
சத்திசல்திசொல்லுமென்றான் ராசாதேசிங்கு

அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
கால் நடுங்கிகைநடுங்கி காலில விழுந்தானும்
சலாமையா சலாமையா ராசாதேசிங்கு
நான்சண்டைக்கு வரவில்லைசாடிக்கு வரவில்லைராசாதேசிங்கு
கோபமில்லாமல் என்னிடபேச்சைசற்றேகேளுமையா
சந்தோஷமாக என்னிடபேச்சைசற்றேகேளுமையா
நூற்றெழுபத்திரண்டு ஆனையப்பட்டு நவாப்புக்காறனும்
செஞ்சிக்கோட்டைபணமும் வரவில்லைராசாதேசிங்கு
தோப்புருபணமும்வேறே கிடக்குது பழஞ்செஞ்சியிலே
தோப்புருநிலுவைக்கு வந்தேனையா ராசாதேசிங்கு

## தேசிங்கு தோன்றமல்லன் மீது கோபித்தது

பல்லைபட படவென்று கடித்தானையா ராசாதேசிங்கு
கையைதூக்கிகனைத்துதட்டினன் ராசாதேசிங்கு
இனியிலாதகோபமாச்சுது ராசாவுக்காறனும்
கோபத்தினலேயவனைக்கொல்ல கத்தியெடுத்தானும்
பார்த்தவுடனே தோன்றமல்லன் பதைத்து விழுந்தானும்
விழுந்தவுடனே சலாஞ்செய்து வேண்டிக்கொண்டானும்
தலையசைத்துதோள் நெறித்தான் அவும்சிங்கம்போல
கண்களையுருட்டிக்கதுப்பினனையா காளைசிங்கம்போல
அடா என்னபேச்சுபேசினயடா தோன்றமல்லண்ணு
நீ வந்தாப்போல் நவாப்பு வந்தால் நிமிஷமிருக்கமாட்டான்
டணமென்றசேதிகாதில்கேட்டால் பாய்ந்துவெட்டிடுவேன்
நானைக்கு வரும் நவாப்புசாயுபை இன்றைக்குவரச்சொல்லும்
ரோஷக்காரனுனல்நவாப்புசாயுபை நொடியில்வரசொல்லும்
ஆண்பிள்ளையானல்நவாப்புசாயுபைவிரலைநீட்டச்சொல்லும்
மீசையுள்ளவனுனல் நவாப்பை வெளியேவரச்சொல்லும்
கத்தியெடுக்கிறசிப்பாய்களெல்லாம் தோப்புருகட்டுகிறதோ
வீரியமுள்ளவனுனல் நவாப்பை சல்தியில்வரச்சொல்லும்
கறவாடுவிற்கிறலப்பைபயலுக்கு கிஸ்திகட்டுறதோ
கத்திமுனையிலேபணமுந்தாரேன் நவாப்புக்காறனும்
பரிசைமுனையிலே பணமுந்தாரேன் நவாப்புக்காறனும்
போனவருஷத்துக்கிந்தவருஷம் வரகுவிளைந்தது
வரகுவைக்கோல்மெத்தக்கிடக்குது வாரிப்போகச்சொல்லும்
கோட்டைவெளியில்மணல்கிடக்குது கொண்டுபோகசொல்
ஒட்டையாயிரம் யானையாயிரம் ஓட்டிவரச்சொல்லும்[லும்
பொதிகளைபோட்டு நவாபைஎடுத்துப்போகச்சொல்லும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லனும்
கால்நடுங்கி கைநடுங்கி கனைத்துவிழுந்தானும்
செத்தபிணம்போலேயிருந்தான் தோன்றமல்லனும்
மூர்ச்சைதெளிந்து எழுந்தானையா தோன்றமல்லனும்



பார்க்கப்பார்க்ககோபமீறுது ராசாவுக்காறனும்
கோபம்வருவதைக்கண்ணுலேகண்டான் தோன்றமல்லனும்
ரங்கநாதரை வேண்டிக்கொள்ளுகிருன் தோன்றமல்லனும்
தேசிங்குராஜனடிக்குதுசெஞ்சிக்குவந்தேன் ரங்கநாதரே
என்னுயிர்கொண்டு ஆற்காடுபோனல் ரங்கநாதரே
ஆயிரம்பேருக்கு அன்னம்கொடுக்கிறேன் ரங்கநாதரே
வுண்திருதானம் வகைவகையாக நீவருக்கு கொடுப்பேன்
மல்லனமாகக்கலியாணம் மகிழ்வாய்செய்துவைப்பேன்
சோமசிங்கமரே வீவந்தாலும் செர்ணதானங்கொடுப்பேன்
வேதவேதியர்கேட்கும்வகைகளைவிருப்பமுடன் கொடுப்பேன்
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
நானுருசேதிசொல்கிறேன்கேள் தோன்றமல்லண்ணு
நீவந்தாப்போல் நவாப்புவந்தால் குத்திபோடுவேனுன்
உங்கள் நவாப்புக்குபயப்படவில்லை தோன்றமல்லனே நீ
உன் நெற்றியில்நாமத்தைக்கண்டுபயந்தேன் தோன்றமல்லனே
ரங்கர்வசத்தைதயைக்கண்டுபயந்தேன் தோன்றமல்லண்ணு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தோன்றமல்லண்ணன்
ராமுராமுரேசீதாராமுரே ராசாதேசிங்கு
உந்தன்மேலேகோபம்வேண்டாம் ராசாதேசிங்கு
தப்பிப்போதேஓடிப்போறேன் ராசாதேசிங்கு
சலாம்செய்து திரும்பினனையா தோன்றமல்லனும்
கோட்டைக்குவெளியே வந்தானையா தோன்றமல்லனும்
நானொருபேச்சுசொல்கிறேன்கேளும் சமேதாருமாரே
அந்தப்பேச்சுக்கென்னசொல்கிருன் தோன்றமல்லனும்
நான்யானைமீதிலேறமாட்டேன் சமேதாருமாரே
குதிரையின்மேலேற மாட்டேன் சமேதாருமாரே
நான்டுக்குலேபடுத்துக்கொள்ளுக்றேன்சமேதாருமாரே
நாலுபக்கமாகமூன்றுநாள்பயணம் செஞ்சிக்குவந்தோமே
ஒரேராத்திரி ஆற்காட்டுக்கு கொண்டுபோகவேணும்
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டார் சமேதாருமாரும்
காடுகடந்துதிரைசேனையும சடுதியில்நடந்திடவே
காற்றுப்போலப்பறக்கிருரையா சமேதாருமாரும்
ஆற்காடுசேர்ந்தவுடன் நகாருசத்தம் அவ்பாகவடித்தாரும்
ஆற்காட்டுக்கோட்டை நகாருசத்தம் நவாப்புகேட்டாரும்
அந்தசேதியிலென்னசொல்கிருன் நவாப்புசைதுல்லா
அங்கேயுள்ளதப்பிவாடா பங்காருநாய்க்கா நீ
செஞ்சிகோட்டைபணமும் வருதுபங்காருநாய்க்கா நீ
சதுரங்கமைபோடச்சொன்னன் நவாபுசைதுல்லா
சாப்பாட்டுயையபழைக்க சொன்னன் நவாப்புசைதுல்லா
தாம்பூலங்களைவைக்கச்சொன்னன் நவாபுசைதுல்லா
அந்தவேளையிலென்ன செய்கிருன் தோன்றமல்லனும்

### நவாப்பிடத்தில் தோன்றமல்லன் வந்து சொல்லல்

நவாப்புமாளிகைவந்தாணையா தோன்றமல்லனும்
சலாஞ்செய்துமாதிரில நின்றான் தோன்றமல்லனும்
பதில்சலாமுங்கொடுத்தாணையா நவாப்புசைதுல்லா
கொண்டுத்தினவுலக்கைபோலே மூன்னே நின்றானும்
தோன்றமல்லனைகண்ணாலேகண்டான் நவாபுசைதுல்லா
என்னகாரியம்பண்ணுணடா தோன்றமல்லண்ணா
பணமுமெங்கேகாசுமெங்கே தோன்றால்லண்ணா
ஐயா-பணமுங்காணேன் காசுங்காணேன் நவாப்புசைதுல்லா
நூற்றெழுபத்திரண்டு யானையப்பட்டுக்குநான்பேயிருக்க
இத்தனை தானும்பிவனைப்போலே நானும்பார்த்ததில்லே
இனியில்லாதபாடு படுத்தினான் ராசாதேசிங்கு
ராசாபடுத்தினபாடுபாருமையா நவாப்புசைதுல்லா
செத்துபோனவன் திரும்பிவந்தேன் நவாப்புசைதுல்லா
வாயினாலேசொல்லமாட்டான் நவாபுசைதுல்லா
செஞ்சிக்கோட்டையான் ஓலையெழுதினான் நவாப்புசைதுல்லா
ஓலைமுகத்தை தக்கண்ணாலேபாரும் நவாப்புசைதுல்லா
ஓலையெடுத்துள்திரேயைத்தான் தோன்றமல்லண்ணா
அந்தவேளையிலென்னசொல்கிறான் நவாப்புசைதுல்லா
ஆயிரங்கணக்குப்பிள்ளைக்கு பெரியகணக்குப்பிள்ளைவாரும்
வாசித்துப்பார்த்து தலையைக்குனிந்தான் ரங்கநாதபிள்ளை
என்னகாரியம்பண்ணினையடா நீ ரங்கநாதபிள்ளை
இரண்டுநாழிகையிலிடித்துப்போடுறேன் செஞ்சிகோட்டையை
எதிர்த்துவந்ததேசிங்குராஜனை பிடித்துப்போடுவேன் நான்
ஆண்சிறைபெண்சிறைதனைப் பிடிக்கிறேன்செஞ்சிகோட்டைக்குள்
உண்டானசேதி வெளியிலே சொல்லுமரங்கநாதபிள்ளை
அந்தவேளையிலென்ன சொல்லுகிறான் ரங்கநாதபிள்ளை
நானொருசேதி சொல்லுகிறேன் கேள் நவாபுசைதுல்லா
ஆண்பிள்ளையானால் நவாப்புசாயபை இன்றைக்குவரச்சொல்லும்
சல்-பெண்பிள்ளையானால்நவாப்பை அங்கே இருக்கச்சொல்லும்
மீசைமுளைத்த ஆண்பிள்ளையானால்சண்டைக்குவரச்சொல்லும்
கத்திமுனையிலேபணமுந்தாரேன் நவாப்புக்கானாலும்
ஈட்டிமுனையிலேபணமுந்தாரேன் நவாப்புக்கானாலும்
போனவருஷத்துக்கித்தவருஷம் வரகுமெத்தவிளைவாம்
வரகுவைக்கோல்மெத்தகிடக்குது வாரிப்போகச்சொல்லும்
கோட்டையின்மேல்புல்கிடக்குது கட்டிப்போகச்சொல்லும்
கோட்டையின்வெளியில்மணல்கிடக்குது வாரிப்போகசொல்
இத்தனைசமர்த்துமிருந்துதானால் இங்கவரச்சொல்லும் [ஆம்
திராணியில்லாத பெண்பிள்ளையானால் அங்கேயிருக்கசொல்
இப்படியாக எழுதியிருக்கிறது நவாப்புசைதுல்லா [லும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் நவாப்புசைதுல்லா



கேட்டவுடனேவயிறெரியுது நவாப்புக்கானுலும்
நீலவிழி பள்ளரியுதையா நவாபபுக்கானுலும்
மீசை படபடவென்றுதுடிக்குதையா நவாப்புக்கானுலும்
சல்பட்டாவுருவி கையிலேபிடித்தான் நவாப்புசைதுல்லா
அண்ணுவாடா தம்பி வாடா பங்காரு நாயக்கனே
உனக்கானே செத்தாலும் ஆனைதாரேன் பங்காரு நாய்க்கனே
குதிரைசெத்தாலும்குதிரைதாரேன் பங்காருநாய்க்கனே
தனங்கள் செத்தால்தனங்கள்தாரேன் பங்காருநாய்க்கா நீ
சண்டாயிழுத்துவெளியில்போடு பங்காருநாய்க்கா நீ
அவ்வேளையிலென்ன சொல்கிறான் பங்காருநாயக்கனும்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரரை கொலுவுக்கு வரச்சொல்லும்
ஓலையெழுத காணியையில்பிடித்தான் பங்காருநாய்க்கனும்
ஓலையெழுதி தயாராபண்ணினன் பங்காருநாய்க்கனும்
ஓலையெடுத்துக்கையில் கொடுத்தான் அர்க்காருமாருக்கு

## அர்க்காருமாருகள் பாளையம்பட்டுக்கு ஓலை கொண்டுபோகுதல்

காற்றுபோல் பறக்குறாரையா அர்க்காருமார்களும்
மேகம்போல்பறக்குறாரையா அர்க்காருமார்களும்
இரண்டு நாழியிற்போய்ச்சேர்ந்தாரையா அர்க்காருமார்களும்
ஓலையைக்கொண்டுகையில் கொடுத்தார் அர்க்காருமார்களும்
ஓலையைப் பிரித்துப்பார்த்தாரையா பாளையக்காரரும்
அவர்களுக்கேற்றதுருப்புகுதிரை தயார் பண்ணினுனும்

## நவாப்பினிடத்தில் பாளையப்பட்டார் வருதல்

தேசத்துரங்காரவு கொலுவுக்கு வாரானும்
திருவண்ணுமலைசுங்கிதுரையும் கொலுவுக்கு வாரானும்
திமிரிக்கோட்டைஷேக்முகம்மது கொலுவுக்குவாரானும்
வாலிக்கோட்டை அப்துல்காதரும் கொலுவுக்குவாரானும்
மதுரைசீமை பாளையாளத்தானும் கொலுவுக்கு வாரானும்
ஆரணிக்கோட்டைவேங்கடராயர் கொலுவுக்குவாரானும்
அரியலூர்பெரியதுரையும் கொலுவுக்கு வாரானும்
ஆச்சிநாயகன் பொம்மிநாயகன் கொலுவுக்கு வாரானும்
எட்டியாபுரத்துபாளையக்காரன் கொலுவுக்குவாரானும்
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரரும் கொலுவுக்குவாராராம்
ஆற்காட்டு ஐங்காதவழி வந்து நிறைந்தாராம்
பாளையக்காரர்வந்தசேதியை காதிலேகேட்டானும்
சீமைக்குநாட்டார்வந்தசேதியை காதிலேகேட்டானும்
சிங்கக்குட்டிபோல் பாளையக்காரரை கண்ணில்கண்டானும்
அந்தவேளையிலென்னசெய்கிருன் நவாப்புசைதுல்லா



## நவாப்பு பங்காரு நாய்க்கனுக்கு சேனைகளையும் கிஸ்தியையும் தயார் செய்யச் சொல்லுதல்

பெரியகணக்குபங்காருநாயக்கனை கிட்டவரச்சொன்னுர்
அண்ணுவாடா தம்பி வாடா பங்காருநாயக்கா நீ
மூன்றுமாதத்திற்கிஸ்திகட்டடா பங்காருநாயக்கா நீ
நூற்றெழுபத்திரண்டுபாளையக்காரருக்கு விருதுகட்டடா நீ
அறுபதினுயிரம்ரேக்லாபீரங்கி தயார்பண்ணடா நீ
ஐம்பதுகோடி பாருத்துப்பாக்கி தயார்பண்ணடா நீ
அதற்குத்தகுந்த குண்டுமருந்து தயார்பண்ணடா நீ
சர்தாருபேர்சமேதாருக்கு சேதிசொல்லடா நீ
நூற்றெழுபத்திரண்டு பாளையபட்டுக்கு கிஸ்திகட்டடா நீ
வெள்ளைக்கூடாரம்பச்சைக்கூடாரம் தயார்பண்ணடா நீ
கணக்கில்லாததசேனைதளத்தை தயார்பண்ணடா நீ
அந்தவேளையிலென்ன பண்ணுறன் பங்காருநாயக்கனும்
ஐம்பதுகோடி பீரங்கிகுண்டு தயார்பண்ணினுனும்
அறுபதினுயிரம்பீரங்கிகுண்டு தயார்பண்ணினுனும்
ஐம்பதினுயிரப் பீரங்கிகுண்டு தயார்பண்ணினுனும்
நூறுயிரம் ரேக்லாகுண்டு தயார் பண்ணினுனும்
இருபதினுயிரம் ஒட்டகங்களும் தயார்பண்ணினுனும்
ஐம்பதினுயிரம்பாலாவீட்டிகள் தயார்பண்ணினுனும்
ஐம்பதாயிரம்பாலாவீட்டிகள் தயார்பண்ணினுனும்
அவர்களுக்கேற்றவஸ்துக்களெல்லாம்தயார்பண்ணினுனும்
அறுபத்துநாலுசண்டாமரமும் தயார்பண்ணினுனும்
பதினெட்டு தலைமுபிரலியிருக்குது நவாப்புபாளையமும்
சீமையைபாசலாமையா நவாப்புசைதுல்லா
பாளையமெல்லாம்தயாராச்சுது நவாப்புசைதுல்லா
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் நவாப்புசைதுல்லா
பாலுக்குள்ளேபுகுந்தானையா நவாப்புசைதுல்லா
கால்சராய்தமான்போட்டானைய்யா நவாப்புசைதுல்லா
இடுப்புக்குகச்சையிறுக்கிக்கட்டினுன் நவாப்புசைதுல்லா
அங்கிதோமான போட்டானையா நவாப்புசைதுல்லா
தலைப்பாயெடுத்து தலையில் தரித்தான் நவாப்புசைதுல்லா
கலிக்குத்துருகட்டினுனையா நவாப்புசைதுல்லா
சல்பட்டாவுருவிகையிலேபிடித்தான் நவாப்புசைதுல்லா
தனக்குவார்த்த பட்டத்துயானையை சல்திவரச்சொன்னுன்
ஆனை கொம்புக்குகத்திகட்டினுன் நவாப்புசைதுல்லா
ஆனையைச்சுற்றி முகமல்கட்டினுன் நவாப்புசைதுல்லா
அம்பாரிதன்னே தொட்டில்கட்டினுன் நவாப்புசைதுல்லா
ஆனையையிறுதொட்டுசலாம்வாங்கினுன் நவாப்புசைதுல்லா
சலாமுகளிலேதுாக்கிக்கொடுத்தது பட்டத்துயானையும்

இருப்புலக்கைகையிலிருக்குது யானைக்காறனும்
அல்லாகு அல்லாகுவென்று யானையேறினும்

## நவாப்பும் மற்ற பாளையபட்டாரும் சேனைகளும் செஞ்சிக்கு சண்டைக்கு வருதல்

செஞ்சிகோட்டைக்குப்பயணமென்று நகாரடித்தானும்
கணகணகணகணகணகணவென்று நகாருமுழங்குதுபார்
பளபளபளபளபளவென்று பட்டாக்கள்மின்னுதுபார்
தடதடதடதடதடதடவென்று தமுறு முழங்குதுபார்
துந்துமிபேரிகைசிடலிசல்லரி தொந்தோமெனவே
அவுதாருமாலைவீசுகிறார் நவாப்புக்காறனும்
வெள்ளை வெண்சாமரைபோடுகிறார்கள் நவாப்புக்காறனும்
அந்தவேளையிலென்னசெய்கிறார் ராசாதேசிங்கு
புதுசெஞ்சியிலேபூசை பண்ணுகிறார் சிற்றப்பராசாவும்
அரங்கத்துமேலேறியேபார்த்தான் சிற்றப்பராசாவும்
திடுதிடுவென்றுபயந்துநடுங்கி கீழேவிழுந்தாராம்
கீழேவிழுந்தசிற்றப்பராசா திட்டென்றெழுந்தாராம்
மைந்தாருகிலோடிவந்தான் சிற்றப்பராசாவும்
காஞ்சிநாதரைகாவேரிரங்கரை பூசைபண்ணுகிறானும்
ஸ்ரீஹரிகோவிந்தாவென்று பூசை பண்ணுகிறானும்
கண்ணைமூடிபூசை செய்கிறான் ராசாதேசிங்கு
பூசைமுகத்தில்வந்துநின்றான் சிற்றப்பராசாவும்
என்ன பூசைபண்ணிறையடா மகனே தேசிங்கு
உன்பூசைமுகத்தில் இடிவிழுந்ததுமகனே தேசிங்கு
கோட்டையைச்சுற்றிவளைந்திருக்கிறது நவாப்புபாளையமும்
செஞ்சிகோட்டை ஐந்துநாழிவழி தேவனூர்பேட்டை
தேவனூர்பேட்டை ஓரத்திலே சங்கராபரணியாறு
சங்கராபரணிகரையில்வந்து நவாப்புபாளையமும்
அண்ணுவாடா தம்பிவாடா பங்காருநாயக்கா நீ
தண்டுசேனையைப்பிடித்துப்போடடா பங்காருநாயக்கா நீ
தண்டுமூன்னேபிரித்துபோடடா பங்காருநாயக்கா நீ
மெத்தையின்மேல்பீரங்கியேத்து பங்காரு நாயக்கா நீ
துருப்புக்குதரைசுற்றிலும்வையும் பங்காருநாயக்கா நீ
ஒருபளுத்தாசலதியாதீரும் பங்காருநாயக்கா நீ
அந்தபடியுத்தாரங்கொடுத்தார் நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
ஆராருக்குப்பயணஞ்சொல்லி நவாப்புசைதுல்லா
உத்தாரங்கொடுத்தநிமிஷத்திலே பங்காருநாயக்கனும்
சலதிசலதிபளுத்தாதீர்த்தான் தேவனூர்பேட்டையிலே
அந்தப்பளுத்தாகாதிலேகேட்டார் நவாப்புபாளையமும்



மரங்கள்மட்டைதரித்துப்போடுகிறார் நவாப்புபாளையமும்
தேவனூர்பேட்டை இடித்துப்போடுகிறார் நவாப்புபாளையமும்
இளியில்லாதசொள்ளையிடுகிறார் நவாப்புபாளையமும்
சின்னவருமாலைவீசுகிறார் நவாப்புக்காறனும்
நெருக்கிக்கொண்டுவாராரையா நவாப்புசைதுல்லா
பதினெட்டுவழிபரவியிருக்குது நவாப்புபாளையமும்
எள்ளுபோட்டாஎள் ளுவிழாது நவாப்புபாளையத் தில்
மண்ணைமண் ணு கீழேவிழாது நவாப்புசைதுல்லா
அந்தவேளையில எங்கேவாரார் நவாப்புசைதுல்லா
செஞ்சிகோட்டையைதேடியேவாரார் நவாப்புசைதுல்லா
மூரேதினத்தில்வந்திறங்கினாரையா நவாப்புசைதுல்லா
பங்காருநாயக்கனைபக்கமழைத்தான் நவாப்புசைதுல்லா
சப்பளம்பேடுரஸ்துக்கசு போடு பங்காருநாயக்கா நீ
இறங்கிசெப்பளம்கொடுத்தானையா பங்காருநாயக்கனும்
தண்டுக்குரண்டுபோட்டானையா பங்காருநாயக்கனும்
அங்கிருந்துவிட்டுபுறப்பட்டானையா நவாப்புசைதுல்லா
அன்றுராத்திரி அங்கேவந்தான் நவாப்புசைதுல்லா
போடுபோடென்றுவாரானையா நவாப்புசைதுல்லா
எதிர்ந்துகொண்டுவாரானையா நவாப்புசைதுல்லா
பதிபூசையைத்தள்ளிபோடடா மகனே தேசிங்கு
தோப்புறுவணத்தைக்கட்டியனுப்பும் மகனேதேசிங்கு
இந்தசேதிகாதிலேகேட்டான் ராஜாதேசிங்கு
மூடின கண்ணைத்திறந்துபார்த்தான் ராஜாதேசிங்கு

## தேசிங்குராஜன் சிற்றப்பாவுக்குச் சொல்லல்

என்ன பேச்சுபேசினீரையா சிற்றப்பராசாவே
அறுபதுவயதுசென்றவுமக்கு அறிவுகொஞ்சமில்லை
பூசைமுகத்தைகெடுக்கவேண்டாம் சிற்றப்பராசாவே
அரைக்கால்நாழிபொறுத்து குதிரையை தயார்பண்ணசொல்
வெள்ளரிக்காய்வீசினாற்போல வீசிப்போடுகிறேன் [லும்
பத்தல்பத்தலாய்கிழித்துபோடுறேன் சேனைகளையெல்லாம்
சக்கைசக்கையாய்சிதைத்துபோடுறேன் சேனைகளையெல்லாம்
அரைக்கால்நாழி பொறுத்துகொள்ளும் சிற்றப்பராசாவே
தலைதலையாயுருட்டிபோடுகிறேன் களங்களையெல்லாம்
குதிரைகுதிசிதறிட்டோட கரிகளை வாட்டுகிறேன்
இந்தபடி செய்யாமற்போனால் என்பேர்தேசிங்கல்ல
பொடிபொடியாநொறுக்கிப்போடுகிறேன் நவாப்படைகளையும்
ஆனால் நல்லதாகட்டுமென்றான் சிற்றப்பராசாவும்
இந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராசாதேசிங்கு
கண்ணைமூடிபூசைசெய்கிறான் ராசாதேசிங்கு
இந்தவேளையிலென்னபண்ணுகிறான் சுபங்கிதுரைதானும்
நிருபமொன்றுமலைசுபங்கிதுரையும்நவாப்புமூன்வந்தான்

## சுபங்கிதுரை நவாப்பைக் கேட்குதல்

சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
இரண்டுநாழியிற்பிடித்துகொடுக்கிறேன்செஞ்சிகோட்டையை
மூவாயிரம் வீடுகளிருக்கும் தேவனூர்பேட்டை
அரைக்கால் நாழிகொள்ளைகொடுமையா நவாப்புசைதுல்லா
நிமிஷநேரத்தில் பிடித்துவருகிறேன் நவாப்புசைதுல்லா
மூவாயிரங்குதிரையுடனே கொள்ளைக்குப்புறப்பட்டான்

## சுபங்கிதுரை தேவனூரைக் கொள்ளையிடுதல்

தேவனூர்க்குள்ளேபுகுந்தானையா சுபங்கிதுரைதானும்
இனியில்லை தக்கொள்ளையிடுகிறான் சுபங்கிதுரைதானும்
வீடுவாசலையிடித்துப்போடுகிறான் சுபங்கிதுரைதானும்
மாடமண்டபமிடித்துபோடுகிறான் சுபங்கிதுரைதானும்
ஆண்சிறைபெண்சிறைதள்ளிபிடிக்கிறான் சுபங்கிதுரைதானும்
மாடுகன்றுகள்மடக்கிபோடுகிறான் சுபங்கிதுரைதானும்
பெட்டிபேழையெடுத்துடைக்கிறான் சுபங்கிதுரைதானும்
பொன்னுவெள்ளிகள் மூட்டைகட்டுறான்சிப்பாய்துரைதானும்
அப்படிசிறையழித்துபோடுகிறான் சுபங்கிதுரைதானும்
கொள்ளையடித்துவெளியில வந்தான் சுபங்கிதுரையும்
நவாப்புப்பாளையம்வந்துசேர்ந்தான் சுபங்கிதுரைதானும்
இந்தப்படிக்கு இருக்கிறானையா நவாப்புசைதுல்லா
தேவனூரிலேயிருந்தஜனங்கள் திசைகெட்டோடினார்கள்
காடுமலைகள்செடிகளெல்லாம் கடந்தோடினார்கள்
கோவென்றசத்தமாச்சுதையா செஞ்சிகோட்டையிலே
அந்தவேளையிலென்னபண்ணுறார் குடியானமார்களும்
தலையில்கையைவைத்து அழுகிறார் குடியானமார்களும்
அந்தவேளையிலென்னசெய்கிறார் ராசாதேசிங்கு
ஸ்ரீநந்தகோவிந்தாவென்று தோத்திரம்செய்கிறானும்
மங்கைலட்சுமிமணாளாவென்று மனதிலெண்ணுகிறான்
பூசைமுகத்தில்வந்துநின்றார் குடியானமார்களும்

## குடிகள் தேசிங்குராஜனிடத்தில் முறையிடுதல்

என்னபூசைபண்ணுகிறீரையா ராஜாதேசிங்கு
தேவனூரிலே கொள்ளையடிக்கிறான் சுபங்கிதுரைதானும்
வீடுவாசலையிடித்துப்போட்டான் சுபங்கிதுரைதானும்
மாடுகன்றுகள்மடக்கிபோடுகிறான் சுபங்கிதுரைதானும்
அகப்பட்டசிறையை பிடித்துபோட்டான் சுபங்கிதுரைதா
பெட்டிபோச்சுதுபேழைபோச்சுது ராசாதேசிங்கு ளும்
பெண்சாதிபோச்சுதுபிள்ளைபோச்சுது ராசாதேசிங்கு



ரொக்கம்போச்சுதுரோசனமீறிப்போச்சுது ராசாதேசிங்கு
நாங்களென்னமாய்பிழைக்கபோகிறோம் ராசாதேசிங்கு
கண்கள் நிறையகண்ணீரைவிட்டார் குடியானமார்களும்
ஐயா நாங்களென்ன செய்வோம் ராசாதேசிங்கு
இந்தநாளும்சீராய்ப்பிழைத்தோம் ராசாதேசிங்கு
துன்புறையகஸ்தியென்னசொல்வோம் ராசாதேசிங்கு
தாமரையிலையிற்றண்ணீர்போலே தவிக்கிறோமையா
ஏழைகளெங்களையும் காக்கவேணும் ராசாதேசிங்கு
கதறியழுதுபுலம்புகிறாரையா குடியானமார்களும்
அந்தப்பேச்சைகாதிலே கேட்டான்ராசாதேசிங்கு

## தேசிங்கு குடிகளுக்கு தேறுதலைச் சொல்லல்

பதறவேண்டாம்பதறவேண்டாம் குடியானமார்களே
என்சீமையில் தேவனூர்பேட்டை ஒருகொள்ளைபோச்சு
நவாப்புசீமையடங்கலுங்கொள்ளையுங்களுக்குவாங்கிதாறேன்
நாமதுசீமையில் பிழ்சிறை ஒன்றுபோச்சுது
ஒருவர்கள்சிறையைபிடித்துதாறேன் குடியானமார்களே
ஒருகொள்ளைக்குஒன்பதுகொள்ளை நான்வாங்கிதாரேன்
ஒன்றுக்கும்நீங்களஞ்சவேண்டாம் குடியானமார்களே
பூசைமுகத்தைகெடுக்கவேண்டாம் குடியானமார்களே
ஆனால் நல்லதாகட்டுமென்று அப்புறம்போனார்கள்
கண்ணைமூடிப்பூசைப்பண்ணுறான் ராசாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் அவனுடதாயாதி
தேசிங்குராசன் தாயாதியையா தன்சிங்குராசாவும்
முற்றைக்குதிரைபோட்டுக்கொண்டு ஓடிவந்தானெதிரே

## தன்சிங்குராஜன் தேசிங்குராஜன்முன் வந்துசொல்லல்

என்னபூசை பண்ணுகிறீரையா ராசாதேசிங்கு
தேவனூர் கொள்ளையாய்போச்சுது ராசாதேசிங்கு
கோட்டையேறிருக்கிறானையா நவாப்புபாளையமும்
இந்தப்படிக்குசொல்லிநின்றான் தன்சிங்குராசாவும்
கண்ணைவிழித்துப் பார்த்தானையா சிப்பாய்தேசிங்கு
பாதிபூசைதள்ளிபோட்டான் ராசாதேசிங்கு
கனைத்துக்கொண்டுமெழுந்தானையா சிப்பாய்தேசிங்கு
தன்கள்கோயிலில்துலுக்கன்புகுந்தால் எனக்கென்னபூசை
துலுக்கனைவெட்டிபூசைசெய்கிறேன் தன்சிங்குராசாவே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் தன்சிங்குராசனும்
ஆனால்நல்லதாகட்டுமென்றான் தன்சிங்குமகாராசன்
அந்தவேளையிலென்னபண்ணுகிறார் ராசாதேசிங்கு
சிங்காரமாளிகையிலேவந்தானையா ராசாதேசிங்கு
திருமணிபெட்டியைகையிலெடுத்தான் ராசாதேசிங்கு

முத்துப்போலேதிரு மணியங்கே நெற்றியிலிட்டானும்
காலுக்குகுடுத்த ணீபோட்டானையா ராசாதேசிங்கு
இடுப்பில் கச்சையிறுக்கிக்கட்டினன் ராசாதேசிங்கு
சரிகையுருமாலைத் தலையிற் கட்டினன் ராசாதேசிங்கு
மாருக்குகவசம்போட்டானையா சிப்பாய்தேசிங்கு
அங்கியெடுத்துமேலுக்கு போட்டான்ராசாதேசிங்கு
ஐந்துதுலாம்பரிசகத்தி கையில் பிடித்தானும்
ஏழுதுலாம்பரிசைகத்தி கையில்பிடித்தானும்
சிங்கம்போலுட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
ஜெயராமுகெங்காராமு கொலுவுக்குவந்தாராம்
சிற்றப்பதுரை தரணீசிங்கு கொலுவுக்குவந்தாராம்
நத்தர்சிங்கு கோபால் சிங்கு கொலுவுக்குவந்தாராம்
ராமூசிங்குகோபால்சிங்கு கொலுவுக்குவந்தாராம்
மான்சிங்குகிரிபுசிங்கு கொலுவுக்குவந்தாராம்
ராமுதாரிலட்சுமணதாரி கொலுவுக்குவந்தாராம்
ஒரேகும்பலாய் கூடினரையா முந்நூறுஜன முந்தான்
ராமுராமுரேசீதாரா முரே ராசாதேசிங்கு
பதில்சலாமுங் கொடுத்தானையா சிப்பாய்தேசிங்கு
சிப்பாய்மார்களைகண்ணுலேகண்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
ஐயாகேளுமையாகேளும் ராசாதேசிங்கு
எண்பதினாயிரம் குதிரையிருக்குது நவாப்புக்காரனுலும்
லக்ஷம்பேர்சிப்பாயிருக்கிறார்கள் நவாப்புக்காரனுலும்
மூந்நூறுகுதிரை எனக்கிருக்கிறதுசிற்றப்பராசாவே
இந்தகுதிரை எனக்குபோதாதோ சிற்றப்பராசாவே

## தேசிங்கு மோவுத்துக்காரனை அழைக்கச் சொல்லல்

முந்நூறுகுதிரைக்கதிபதியானவன் ஒற்றைகுதிரைக்காரன்
வழுதாவூரிலிருக்கிறனையா மாப்பிள்ளைராயனும்
இரண்டு நிமிசத்திலழைப்பிக்கவேணும் சிற்றப்பராசாவே
சல்திசல்தியென்றுசொன்னான் ராசாதேசிங்கு
ஆனால் நல்லதாகட்டுமென்றான் சிற்றப்பராசாவும்
ஓலையெழுதிகையிலே கொடுத்தான் சிற்றப்பராசாவும்
மூன்றுபேர் அர்க்காருமாரை சல்தியழைத்தானும்
ஓலையெடுத்துகையிலே கொடுத்தான் அர்க்காருமாருக்கு
சல்திசல்தியென்றுசொன்னான் சிற்றப்பராசாவும்
சலாம்வாங்கித் திரும்பினாரையா அர்க்காருமார்களும்
செஞ்சிகோட்டைக்கும் வழுதாவூர்க்கும் முக்காதவழி
மூன்றுநாழியிற்போய்ச்சேர்ந்தார்களர்க்காருமார்களும்
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் மோவுத்துக்காரனும்
கலியாணமுங்கூடியிருக்குது மோவுத்துக்காரனுக்கு



கையிற்கங்கணங்கட்டியிருக்குது மோவுத்துகாரனுக்கு
கலியாணபந்தலஜோடித்திருக்குது மோவுத்துகாரனுக்கு
கர்ப்பூரிபாங்கா முழங்குதுவழுதாவூருக்குள்ளே
சந்தோசகங்கணம் கட்டியிருக்குதுமோவுத்துகாரனுக்கு
சரிகைவுடுப்புதரித்திருக்கிறான் மோவுத்துகாரனும்
அல்லாவே அல்லாயென்று தாலிகட்டப்போறான்
ராமாராமாவென்றுசொல்லி தாலிகட்டப்போறான்
அந்தவேளையிலென்னசெய்கிறார் அர்க்காருமார்களும்
ராமுராமுரேசீதாராமுரே மோவுத்துகாரனே
உங்கள் ராசாசிநேகிதக்காரன் ஓலையனுப்பிவைத்தார்
இந்தஓலையைவாசித்துப்பார்த்து என்னையனுப்புமையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துக்காரனும்
இரண்டுகையிலேஓலைவாங்கினான் மோவுத்துகாரனும்
ஓலையைப்பிரித்துபார்த்தானையா மோவுத்துகாரனும்
கலகலவென்றுசிரித்தானையா மோவுத்துகாரனும்
மண்டிபோட்டு எழுந்துட்கார்ந்தான் மோவுத்துகாரனும்
தாலியைகொண்டுதட்டில்வைத்தான் மோவுத்துகாரனும்
பட்டாகருவிகையிலேபிடித்தான் மோவுத்துகாரனும்

## மோவுத்துகாரன் கலியாணப்பந்தலில உள்ளவர்களைச் செலவு கேட்டல்

சலாமையாசலாமையா சபையிலுள்ளவரே
சந்தோஷமாகசெலவுதாரும் சபையிலுள்ளவரே
அண்ணன்மாரே தம்பிமாரே டலாய்த்துரைமாரே
பச்சைப்பந்தலில்சுகமாயிருங்கள் பட்டாணிதுரைமாரே
சுக்கு சமூனையில்சோறுதின்கிற கானாட்டுதுரைமாரே
நானொருபேச்சுசொல்லுகிறேன்கேளும் சபையிலுள்ளபேரே
நான்போறேன் நவாப்புதண்டுக்கு நல்லசண்டைசெய்ய
எதிராளியான நவாப்புதண்டு எதிரிலேவிழுந்துதாம்
கைகலாளியானநவாப்புதண்டு பக்கத்தில்விழுந்துதாம்
எதிராளியான நவாப்புதண்டுக்கு இடுப்புகட்டிபோறேன்
சத்துருவான நவாப்புமேலே சண்டைக்குப்போறேன்
ஆற்காட்டு இன்னவிதியையெல்லாம் அதுவானப்பண்ணிவாரேன்
தலைப்பாகட்டிதாலிகட்டுகிறேன் பட்டாணிதுரைமாரே
நாளப்பொழுதேபோய் வருகிறேன் சபையிலுள்ளோரே
சலாமுசலாம்வாங்கித்திரும்பினானையா மோவுத்துகாரனும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் அவனைபெற்றதாயும்
ஆசையதுசாயமும் தாயாருமாக சல்தியிலோடிவந்தார்
எதிரிலேவந்து மகனைநிறுத்தி ஏந்தி முத்தமிட்டாள்
மகனின் முகத்தைகண்ணிலேகண்டு மாதா என்ன சொல்வாள்
கர்ப்பத்திலேபத்துமாதஞ்சுமந்து மகனைபெற்றேனே

எறும்பு அண்டவொட்டாமல் இருந்துகாத்தேனே
தரையில்விட்டால்மண்படுமென்று தாலிவளர்த்தேனே
மெத்தபுத்திசாலியென்று மேன்மையுற்றேனே
சற்றும்யோசனையில்லாமல் நீ சண்டைக்குப்போறேனென்றாய்
என்னகாரியம் முழுகிப்போச்சுது எந்தன் கண்மணியே
சந்தனம்பூசிசண்டைக்குப்போனால் சகதிகண்டுபாயும்
சங்கணம்கட்டிசண்டைக்குப்போனால் கடுகுகண்டு பாயும்
மஞ்சளுடுத்திசண்டைக்குப்போனால் மகனைக்காணமாட்டேன்
தாலிகட்டிவிருந்துபேசித்து சந்தோஷமாயிருந்து
வந்தபேருக்குமரியாதைசெய்து மகிழ்வாயனுப்பிவிட்டு
இன்றைக்கிருந்துநாளைக்குப்போடா எந்தன் கண்மணியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துகாரனும்
அம்மாகேளும் அம்மாகேளும் என்னைபெற்றதாயே
என்னிடராஜன் சிநேகிதக்காரன் எழுதியனுப்பினான்
நவாப்புஜனமும்செஞ்சியில்வந்து அங்கேமேறினாராம்
இரண்டு நாழிகையில நவாபை வெட்டிரத்தகளம்பண்ணி
ஆற்காடுநகர்வீதியெல்லாம் அத்துவானம்பண்ணி
செஞ்சிராஜனுக்குமகுடஞ்சூட்டியேசிறையை **கொண்டுவாரேன்**
நவாப்புமகனைதாலிகட்டுகிறேன் என்னைபெற்றதாயே
கட்டாமற்போனால்நவாப்புகையில கடுகச்செத்துபோறேன்
இன்றைக்குசாவுநாளைக்குஞ்சாவு இருக்குதுதலைமேலே
பிள்ளைபிறந்தால்சண்டைமுகத்தில் பேரெடுக்கவேணும்
மைந்தன்பிறந்தால்லன்னங்கொடுத்து மகிழ்ச்சியாகவேணும்
உந்தன்வயிற்றில்பிள்ளைபிறந்து ஊதாரியாவேனோ
ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு என்னைப்பெற்றதாயே
பிறந்தவன்றைக்கேசாவிருக்குது என்னைப்பெற்றதாயே
இரணகளத்தில்செத்துப்போனால் நல்லபதவியுண்டு
கத்திமுனையிலேசாவேனேயானால் கனத்தபதவியுண்டு
ஈட்டிமுனையிலேசாவேனேயானால் இனியபதவியுண்டு
சண்டைமுகத்தில்செத்தேனேயானால் சத்திமோக்ஷமுண்டு
குண்டுமுகத்திலேசெத்தேனேயானால் கோடிலாபமுண்டு
மருந்து புகையிலேசெத்தேனேயானால் மகாபதவியுண்டு
என்றைக்குமபேரிருக்கவேணும் இந்தவுலகினிலே
புகழும்பூமியுள்ளவரைக்கும் பேரெடுக்கவேணும்
சண்டைஜெயித்துவந்தேனேயானால் தாலிகட்டுகிறேன்
போரைஜெயித்துவந்தேனேயானால புகழ்ந்துகட்டுகிறேன்
மாண்டுமடிந்துபோவேனேயானால் மனதுகலங்காதே
சந்திரசூரியருள்ளவரைக்கும் தாயேபெற்றவளே
வருஷமொருதிருநாள்செய்ய மனுவுகேட்கிறேனன்
உற்றுறவோருள்ளவரைக்கும் உருவுசெய்யவேணும்
போய்வாரேன் போய்வாரேனிப்போ புண்ணியவதிதாயே



அந்தப்பேச்சைகாதிலேகேட்டு அலறிவிழுந்தாளாம்
மைந்தன்பேச்சைகாதிலேகேட்டு மண்மேல்விழுந்தாளாம்
கண்களைக்கையைப்பார்த்துப்பார்த்து கதறியழுதாளாம்
மஞ்சளுடுப்பையப்பார்த்துப்பார்த்துமயங்கிவிழுந்தாளாம்
முகத்தின்தெளிவைக்கண்டுவருந்தி மூர்ச்சையானாளாம்
கலியாணபெண்ணைக்கண்டுமெலிந்து கலங்கியழுதாளாம்
இந்தவிதிக்கோ இவ்வகைசெய்தோமென்றுமெலிந்தாளாம்
... காரியததடங்கலாச்சுதென்றுதயங்கிவிழுந்தாளாம்
பந்தலைவிட்டுவெளியேவந்தான் மோவுத்துகாரனும்
குதிரைலாயத்தில்வந்தானையா மோவுத்துகாரனும்
முத்துநீலகுதிரைக்குதுடிப்பானகுதிரை நீலவேணிகுதிரை
நீலவேணியருகில்வந்தான் மோவுத்துக்காரனும்
கழுத்துக்கயிற்றைக்கால்கயிற்றை கத்தியால்வெட்டினான்

## மோவுத்துகாரன் குதிரை ஏறுதல்

... பயிரைப்பிடித்தானையா நீலவேணிமேலே
... றினமோவுத்துக்காரனை கண்ணாலேகண்டது
... ஆட்டியமாடிவருகுது நீலவேணிகுதிரை
... கண்டான்கோபமாச்சுது மோவுத்துக்காரனும்
கோபத்தினாலேசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
... விழுந்துபோகுதுபாரு நீலவேணிகுதிரை
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் மோவுத்துகாரனும்
என்னமோசம்பண்ணினாயடா நீலவேணியே நீ
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன் நீலவேணியேநான்
சண்டைஜெயித்துவந்தேனேயானால நீலவேணியே
தங்கத்தாலேஜீனபோடுகிறேன் நீலவேணியேநான்
என்று நீலவேணிக்குசலாம் வாங்கினான் மோவுத்துக்காரனும்
சலாம்வாங்கிதிரும்பினானையா நீலவேணிமேலே
... மேலே [illegible] நீலவேணிகுதிரை
குதிரைக்காரனைப்புதெரிந்தநாழிக்கு குதிரைதெரியவில்லை
குதிரைமேலவன்தெரிந்தநாழிக்கு அவனேதெரியவில்லை
ஏறிக்கொண்டுபோரானையா மோவுத்துக்காரனும்
கோட்டையைசுற்றிவளைந்திருக்குது நவாப்புபாளையமும்
நவாப்புபாளையங்கண்ணாலேகண்டான் மோவுத்துக்காரனும்
கலகலவென்றுசிரித்தானையா மோவுத்துகாரனும்
பாளையத்தைசுற்றிப்போவோமென்றால் இரண்டுநாழிசெல்லும்
பாளையத்துக்குக்கேபோறானையா நீலவேணிமேலே
முத்துநீலகுதிரையைகண்ணாலேகண்டான் நவாப்புபாளையத்தி
முத்துநீலகுதிரையுடனே முன்னேயோடிவந்தான் [ல்
முத்துநீலகுதிரையைகண்ணாலேகண்டான்மோவுத்துகாரனும்
... குதிரைக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிகுதிரை

கறகறவென்றுசுழற்றுதுபாரு நீலவேணிகுதிரை
கால்கயிற்றைகழுத்துக்கயிற்றை அவிழ்க்க நேரமில்லை
இடதுகாலுக்கசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
சிமிட்டாகொடுத்த நிமிஷநேரத்தில் நீலவேணிகுதிரை
தண்டுதாண்டி தரைமண்டலங்கொண்டது நீலவேணி குதிரை
ஆறுகுளங்கள்தாண்டிவிழுகுது நீலவேணிகுதிரை
போடுபோடென்றுபோகுதையா நீலவேணிகுதிரை
லகானுமில்லை ஜீனியுமில்லை நீலவேணி குதிரை
குறட்டாணிகூடசேர்ப்பதில்லை நீலவேணிகுதிரை
கால்கயிற்றோடே ஓடிவருகுது நீலவேணிகுதிரை
கழுத்துகயிற்றோடே ஓடிவருகுது நீலவேணிகுதிரை
பெரியபெரிய கல்லுகளெல்லாம்புரண்டுபோகுதுபார்
சின்னசின்னகல்லுகளெல்லாம் செந்தூளாகுதுபார்
காடுமலைகள்செடிகளெல்லாம் கலங்கிநடுங்குதுபார்
காற்றுப்போலேபறந்துவருகுது நீலவேணிகுதிரை
குதிரை சுழன்றுநிமிஷ நாழிகைக்கு முந்நூறுகுதிரை
கரணைகரணையாய்விழுந்துபோச்சுது தவாபுபாளையமும்
அல்லோலகல்லோலமாகுதையா தவாப்புபாளையமும்
கட்டியிருந்தகுதிரையெல்லாம் அறுத்துகொண்டோடுது
சோறுதின்றசிப்பாய்மார்களும் பதுங்கியோடினார்கள்
ஓடுகிறபேரை கண்ணிற்கண்டான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
நடுவேவிட்டுபிளந்தானையா தவாப்புபாளையத்தை
இவனைஎதிர்ப்பாரொருவருமில்லை தவாப்புபாளையத்தில்
இரண்டுநாழிகைக்குள்வந்துசேர்ந்தான் செஞ்சிகோட்டை
சிங்காரமாயில்வந்தானையா மோவுத்துக்காரனும் [குள்ளே
குதிரை விட்டுக்கீழேகுதித்தான் மோவுத்துக்காரனும்
இராசபேட்டிக்குவாரானையா மோவுத்துக்காரனும்
மண்டிபோட்டுசலாம்வாங்கினான் மோவுத்துக்காரனும்
என்ன காரியம் பண்ணினீரையா ராசாதேசிங்கு
இத்தனைமறதியுனக்கேனையா ராசாதேசிங்கு
இரண்டுநாழிகைக்குமுன்னாலே சொன்னால் நான்வரமாட்
இத்தனைநாழி தவாப்புஜனமும் இங்கேயிருக்குமா [டேனா
சல்தி சல்தியுத்தாரந்தாரும் இராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா இராசாதேசிங்கு
கண்ணாலேகண்டான்கோபமாச்சு இராசாவுக்காரனும்
என்னகாரியம் பண்ணினீருடா மோவுத்துக்காரனே
கல்யாணவுடுப்புகட்டியிருக்கிறாய் மோவுத்துக்காரனே
கங்கணங்கைகயிற்கட்டியிருக்கிறாய் மோவுத்துக்காரனே
கஸ்தூரிசந்தனம் பூசியிருக்கிறாய் மோவுத்துக்காரா நீ
சல்திசல்திசொல்லுமென்றான் இராசாதேசிங்கு



[illegible] வந்தாயோயில்லையோ மோவுத்துக்காரா நீ
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் மோவுத்துக்காரனும்
என்னபேச்சுபேசினீரையா ராசாதேசிங்கு
[illegible] சிப்பாய்மாருக்கு பெண்டாட்டியென்னத்திற்கு
[illegible] பெண்ணை தாலிகட்டுவேனோ ராசாதேசிங்கு
[illegible] தவாப்புமகளைத் தாலிகட்டவேணும்
[illegible] கலியாணம்பண்ணுகறேன் ராசாதேசிங்கு
நல்ல [illegible] பேச்சிருக்கட்டும் ராசாதேசிங்கு
[illegible] போகட்டுமா ராசாதேசிங்கு
[illegible] யுத்தாரந்தாரும் ராசாதேசிங்கு
[illegible] பெழுந்தானையா மோவுத்துக்காரனும்
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் ராசாதேசிங்கு
[illegible] கொண்டதுராசாவுக்காரனும்
மோவுத்துக்காரனைகிட்டவழைத்து கையைபிடித்தானும்
[illegible] தழுவினானையா ராசாதேசிங்கு
[illegible] கேளு மோவுத்துக்காரனே
[illegible] சண்டைபோடவேண்டாம் மோவுத்துகாரனே
[illegible] வருகிறேனப்பா மோவுத்துகாரனே
[illegible] சொல்கிறேன் கேளும் மோவுத்துக்காரனே
[illegible] கலியாணம் பண்ணிமூன்றுவருஷம் மோவுத்துக்காரனே
[illegible] முகத்தை பார்த்துவாரேன் மோவுத்துக்காரனே
[illegible] நல்லதாகட்டுமென்றான் மோவுத்துக்காரனும்
[illegible] கேயோடிவந்தான் ராசாதேசிங்கு
என்ன காரியம் பண்ணினீரையா ராசாதேசிங்கு
[illegible] கேளும் சிற்றப்பராசாவே
[illegible] சண்டைக்குப்போறேன் சிற்றப்பராசாவே
[illegible] முகத்தைபார்த்துப்போகிறேன் சிற்றப்பராசா
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் சிற்றப்ப ராசாவும் [வே
என்ன காரியம்பண்ணினுயடா குழந்தைதேசிங்கு
[illegible] வெள்ளிக்கிழமை மகனே தேசிங்கு
[illegible] பிறந்தது வெள்ளிக்கிழமைமகனேதேசிங்கு
[illegible] பிறந்ததுவெள்ளிக்கிழமைமகனேதேசிங்கு
[illegible] பிறந்ததுவெள்ளிக்கிழமை மகனேதேசிங்கு
[illegible] பிறந்தது வெள்ளிக்கிழமை மகனே தேசிங்கு
[illegible] நாளைக்குப்போனால் மகனே தேசிங்கு
[illegible] வருவாயடா மகனேதேசிங்கு
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் ராசாதேசிங்கு
கலகலவென்று சிரித்தானையா சிப்பாய்தேசிங்கு
என்ன பேச்சுபேசினீரையா சிற்றப்பராசாவே
[illegible] சொல்லுகிறேன் கேளும் சிற்றப்பராசாவே

இத்தனை நாளும் நவாப்புஜனங்களிங்கு வந்ததோ
இப்போகோட்டைசுற்றிவளைந்திருக்குது நவாப்புபாளைய
கோட்டை கொள்ளையடித்தாரையா சிற்றப்பராசாவே [மும்
இரங்கர்கோயில் துலுக்கன் வந்தால் சும்மாயிருப்பேனோ
டாறுடாறுய்க்கிழித்துப்போடுகிறேன் நவாப்பு பாளையத்தை
நவாபடையைவெட்டி ஜெயிக்குவாரேன் சிற்றப்பராசாவே
இராசகுலத்தில் நானும்பிறந்தேன் ரோஷக்காரனுக
ஆசீலுஞ்ச வு நா சீலுஞ்சாவு சிற்றப்பராசாவே
பிறந்தவன் இறக்கவிருக்குது சிற்றப்பராசாவே
நான் முன்வைத்தகாலைப்பின் வைப்பேனோ சிற்றப்பராசாவே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டான் சிற்றப்பராசாவும்
என்னபேச்சுபேசிறுயடா மகனேதேசிங்கு
என்வார்த்தை நீ கேட்கிறதில்லை மகனேதேசிங்கு
உந்தனிடசோறு தின்னவில்லை மகனேதேசிங்கு
எந்தன்சோறுநீயேதின்றாய் மகனேதேசிங்கு
ஆறுமாதமாகாதென்று நயமிட தருசொன்னார்
மூனுமாதமாச்சுதேடா மகனேதேசிங்கு
இன்னும் மூன்றுமாதம்போகவேணும் மகனேதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராசாதேசிங்கு
கண்கள்சிவந்துகோபமாச்சுது ராசாவுக்காணும்
கோபம்வருவதைக் கண்ணாலேகண்டான் சிற்றப்பராசாவும்
நாளைக்குபேச்சுசொல்லுகிறேன் நானும்மகனேதேசிங்கு
தடுவிட்டதிரையைபோட்டுச்சொல்லும் மகனேதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராசாதேசிங்கு
ஆனால் நல்லதாகட்டுமென்றான் சிப்பாய் தேசிங்கு
பெரிய அரண்மனைவாராளையா ராசாதேசிங்கு

## தேசிங்கு ராணியிடம் வருதல்

ராணியரண்மனைவந்து நின்றான் ராசாதேசிங்கு
அதற்கு முன்னமேகுதிரைகட்டினார் சோபுதார்மார்களும்
சோபுதார்மாரைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
சல்திசல்திராணியையழையும் சோபுதார்மாரே
என்றவுடனே சோபுதார்மார்கள் இசைந்ததோழிமாரை
அழைத்துமன்னன்ராணியை நீங்கள் கூட்டிவா எனவே
நல்லதென்று தாதிமார்கள் நடந்தார்களப்போது
அம்மாளும் அம்மாளும் எங்கள்மாதாவே
எங்களையாளும்ராஜாயிப்போ உங்களையழைக்கசொன்னார்
இந்தச்செய்தியைக்காதிலேகேட்டாள் ராணியம்மாளும்
மயிலைக்குயிலைமருளச்செய்யும் மாதுராணியம்மாள்
அன்னநடையைபின்னிடச்செய்யும் அன்னராணியம்மாள்
சந்தோஷங்கள் மிகவுண்டாகி சரீரம்பூரித்தாள்



மெத்தமனதிலாச்சரியமாக வியப்பினைக்கொண்டாள்
ராஜனழைத்தகாரியமாய நலமாயெழுந்திருந்தாள்
சிங்காதனம் விட்டுக்கீழேகுதித்தாள் ராணியம்மாளும்
மஞ்சள்நீர்சாலையில் வந்திருந்தாள் மாதுராணியம்மாள்
சுத்தஜலத்திலஸ்நானம் செய்தாள் சுந்தரராணியம்மாள்
கஸ்தூரிமஞ்சள் நிறந்தலக்கினாள் கனகராணியம்மாள்
இந்திரவர்ணபட்டுடுத்தினாள் எங்கள் ராணியம்மாள்
சீவருத்துக்கொண்டையிட்டாள் திருமுராணியம்மாள்
வண்ணவிழிக்குமையிட்டாளே மாதுராணியம்மாள்
சந்திரபிறைபோல் பொட்டுமிட்டாள் நகைராணியம்மாள்
கச்சையிறுக்கிபூண்டாளையா காதல்ராணியம்மாள்
ரத்தினதாலிசெங்குமணிகை நாயகிமார்பித்தார்
முத்துக்கருச்சுகொப்புத்தொங்கல் மூடிய தொங்கவிட்டாள்
ரவைகனிஅழுத்தகமலஜக்கை தந்தெகப்புமயிர்மாட்டி
நானிலம்புகழும் தகரிப்பாயல் நடமாய் தரித்தார்கள்
கண்டசரங்கள் பொன்னின் வளையல் கையிற்றரித்தார்கள்
இடையால் ஒட்டியாணம் பலவிதசெலுசு இனிப்பாய் மாட்டி
கலகலவென சருள் காலூசு கால்விரல்குஞ்சிட்டவ [ளார்கள்
அரசனிருக்குமரண்மனைக்குள்ளே வாராள ராணியம்மாள்
திரைக்கப்பால்வந்துநின்றாள் ராணியம்மாளும்
கலகலவென்றிருஞ்சத்தம்ராசன் காதில்தான் கேட்டான்
திரையைப்பார்த்து கோபங்கொண்டாள் ராணியம்மாளும்
என்னையழைத்தகாரியமென்ன நடுவிலேதிரை யென்ன
இந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராஜதேசிங்கு
நானொருசேதிசொல்லுகிறேனைகேள் எந்தன்ராணியே
நவாப்புமேலேசண்டைக்குப்போறேன் எந்தன் ராணியே
உனக்குச்சொல்லிப்போகவந்தேன் எந்தன் ராணியே
சல்திசல்திஉத்தாரந்தாரும் எந்தன்ராணியே
அந்தப்பேச்சைக்காதிலேகேட்டாள் ராணியம்மாளும்
என்னபேச்சு பேசினீரையா என்பிராணநாதா
நூத்துவருஷம்சண்டையெல்லாம் நமதுகோட்டைக்குள்ளே
கோட்டைவிட்டுவெளியேபோகவேண்டாம்என்பிராணநாதா
இந்தசேதிகாதிலே கேட்டான் ராசாதேசிங்கு
என்னபேச்சிப்பேசினாயடி எந்தன் கண்மணியே
பெண்புத்திசண்டைகேட்குமோ என்பிராணநாயகியே
நானிடபோதேபேயவருகிறேன் என்பிராணநாயகியே
காரியமனம்பண்ணிநூபியிலையத்தீர் என் பிராணநாதா
நானசந்தோஷசுகமொன்றுமறியேன் என் பிராணநாதா
நீர்சண்டைக்குப்போகவேண்டாமையா என்பிராணநாதா
எந்தன்பேச்சைதடுத்துப்போனீர் என் பிராணநாதா
சண்டைபண்ணிஜெயிக்கவேண்டும் என்பிராணநாதா

இந்தசவுரியமிருக்கவேண்டும் என்பிராண நாதா
சண்டைக்குப்பயந்து வந்தீரானால் என் பிராண நாதா
கோட்டைகதவைசாத்திப் போடுவேன் என்பிராண நாதா
அலங்கத்துமேல் பீரங்கியேற்றுவேன் என்பிராண நாதா
அடியோட நான் கொளுத்திப்போடுவேன் என்பிராண நாதா
ஆனால்சுகமாய் போய்வாரும் என் பிராண நாதா
கலகலவென்று சிரித்தானையா ராசாதேசிங்கு
நானொருபேச்சுசொல்கிறேன் கேளும் எந்தன் ராணியே
எந்தன்மேலே கோபம்வேண்டாம் என்பிராண நாயகியே
நானிப்போதேபோய்வருகிறேன் பிராண நாயகியே
கோட்டைபத்திரம்பார்த்துக்கொள்ளும் எந்தன் ராணியே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டாள் ராணியம்மாளும்
பாக்குவெற்றிலைகையிலேபிடித்தாள் ராணியம்மாளும்
திரைக்குள்ளேகைநீட்டினாரையா ராசாதேசிங்கு
பாக்குவெற்றிலைகையில்கொடுக்க ராணியம்மாளும்
இராசன்கையைஉள்ளுக்கிழுத்தாள் ராணியம்மாளும்
கையைப் பார்த்து அழுகிறாளையா ராணியம்மாளும்
என்னகாரியம்பண்ணினீரையா என் பிராண நாதா
பாவிநான் செய்தபாவமிதுதானோ என்பிராண நாதா
என் தலையெழுத்துயிப்படியிருக்குதோ என்பிராண நாதா
கையையெடுத்துகண்ணிலொத்தினாள் ராணியம்மாளும்
கதறியழுதுபுலம்பினாளையா ராணியம்மாளும்
கண்ணீர்ஜலம் முழங்கையிலேகண்டான் ராசாதேசிங்கு
என்னகாரியம்பண்ணினாயடி எந்தன் ராணியே
நானிப்போதேபோய்வருகிறேன் எந்தன்ராணியே
ராணிவார்த்தையைவிட்டுவாரான் ராசாதேசிங்கு

## தேசிங்கு ராணியிடம் விட்டு கொலுவுக்கு வருதல்

சிங்கார மாளிகையில்வந்தானையா ராசாதேசிங்கு
கண்ணையுருட்டிக்கதும்பினானையா ராசாதேசிங்கு
சல்திசல்தி குதிரை கொண்டுவாரும் அர்க்காருமார்களே
சலாம் வாங்கத்திருப்பினாரையா அர்க்காருமார்களும்
குதிரைப்பாகரை கண்டு சொல்லுகிறார் அர்க்காருமார்களும்
குதிரைலாயத்தில் வந்தாரையா அர்க்காருமார்களும்
சல்திசல்திகுதிரை கொண்டுவா குதிரைப்பாகரே
ஆனால் நல்லதாகட்டுமென்றார் குதிரைப்பாகரும்
நாலு காலுக்குவண்டயம்போட்டார் பாராசாரிக்கு
நடுவிலே சங்குவிட்டாரையா பாராசாரிக்கு
கழுத்திலே சங்குவிட்டாரையா பாராசாரிக்கு
கன்னத்துக்குகண்ணாடிகட்டினாரையா பாராசாரிக்கு
தங்கத்தாலே ஜீனிபோட்டார் பாராசாரிக்கு



வாய்க்குத்தங்கக்கடிவாளம்போட்டார் பாராசாரிக்கு
குதிரையைக்கொண்டுநிறுத்தினாரையா குதிரைப்பாகரும்

## தேசிங்குராஜன் குதிரை வந்ததைக் காணல்

குதிரைவந்ததைக் கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
தான்கொண்டுவளர்த்த பாராசாரியைமுன்னேவரச்சொன்னான்
முன்னே வந்துநிற்குதையா பாராசாரியும்
குதிரைக்குச்சேதிசொல்கிறானையா ராசா தேசிங்கு
நானிப்போமேலே சண்டைக்குப்போறேன் பாராசாரியே
சண்டை ஜெயித்துவந்தேனேயானால் பாராசாரியே
தங்கத்தாலேமுத்துதுரு போடுகிறேன் பாராசாரியே

## குதிரை விசனப்படல்

சாகிறேனென்று தெரியுதையா பாராசாரிக்கு
கோடுகோடென்று அழுகுதையா பாராசாரியும்
தரையைத்தரையைப்பார்க்குதையா பாராசாரியும்
பூமியிற்காலை புரட்டுகுது பாராசாரியும்
வாயைசும்மாமெல் மூடுது பாராசாரியும்
பிராணபிரளகண்ணை மூட்டுது பாராசாரியும்
திரேகமெல்லாம்படபடவென்று நடுங்குது பாராசாரிக்கு
காலைசுமுட்டிவிசிறிதட்டுது பாராசாரிகுதிரை
குதிரைதூக்கத்தைக் கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு

## தேசிங்கு பாராசாரிக்கு திட்டஞ் சொல்லல்

என்னகாரியம்பண்ணினாயடா பாராசாரியே
பன்னீராயிரம்வராகன் கொடுத்து உன்னைவாங்கினேனே
முப்பதினாயிரம்வராகன் தின்றாய் பாராசாரியே
தண்ணீர்வைத்தாலாகாதென்று சாராயம்வைத்தேனே
கொள்ளுவைத்தாலாகாதென்று கடலைவைத்தேனே
கொத்தவைபோட்டு வளர்த்தேனுன்னை பாராசாரியே
ஆயிரம் கட்டு நல்லநல்ல ஒருகட்டுபுல்லையும்
பொறுக்கிப்போட்டுவளர்த்தேனடா பாராசாரியே
சாகத்தானாபடைப்பட்டாய் நீ பாராசாரியே
ஆகிறதுஞ்சாவு நூறிலுஞ்சாவு பாராசாரியே
சிறந்தவன்றைக்கேசாகிறது பாராசாரியே
சண்டை முனையில் செத்தேயானால் பாராசாரியே
சல்திமேலேகூடிவிடைக்குமடா பாராசாரியே
நீ செத்தகடத்தில்நானுஞ்சாகிறேன் பாராசாரியே
ஒன்றுக்கு அஞ்சவேண்டாம் நீ பாராசாரியே
அந்தப்பேச்சை காதிலேகேட்டது பாராசாரியும்

## பாராசாரி தைரியங் கொள்ளல்

சந்தோஷமாகக்கனைத்ததுபாரு பாராசாரியும்
ராசன் முன்னே வந்து நின்றது பாராசாரியும்
நெத்தியைச் சுரப்பிடித்த ஈனுடா பாராசாரியை
வெள்ளிசமக்காளம் போட்டானையா பாராசாரிக்கு
கடிவாளமிழுத்துக்கை யிலேபிடித்தான ராசாதேசிங்கு
நாராயணா கோவிந்தாவென்று குதிரையேறினனும்
அங்கே ஊர் யிலென்ன பண்ணுகிறான் சிற்றப்பாராசாவும்
சிற்றப்பாதுரை தாணிசிங்கும் குதிரையேறினார்
இராமூசிங்குலட்சுமணசிங்கு குதிரையேறினாராம்
இராமூதசிங்கு லட்சுமணசிங்கு குதிரையேறினாரும்
பான்சிகுத்ரிபுசிங்கு குதிரையேறினாரும்
பேட்டைசிப்பாய்மோவுத்துக்காரனும் குதிரையேறினாரும்
மூத்தார் குதிரை புறப்பட்டதையா ராசன் முன்னாலே
இடதுகாலுக்குசிமிட்டா கொடுத்தான் பாராசாரிக்கு
சுற்றிவந்து சவாரியாய்ச்சுது பாராசாரியும்
பரதநாட்டியமாடி வருகுது பாராசாரியும்
அந்தவேளையிலேயென்ன பண்ணுகிறான் ராசாதேசிங்கு
குதிரைவிட்டுக்கீழே குதித்தான் சிப்பாய்தேசிங்கு
தேவியைப் பட்டணி புகுந்தானையா ராசாதேசிங்கு
என்னென்னவகையெடுத்தானையா ராசாதேசிங்கு
புனுகுசவ்வாது அத்தர்சவ்வாது கையிலேபிடித்தானும்
வெட்டிவேரு மருக்கொழுந்து கையிலேபிடித்தானும்
கண்டமாலை கண்டமாலை கையிலேபிடித்தானும்
பொன்னின் பொட்டுப்பிலேபன்னீங்கே நெற்றியிலிட்டானும்
பொன்னின் திருமணியங்கே நெற்றியிலிட்டானும்
தூங்காவிளக்கையேற்றிவைத்தான் இராசாதேசிங்கு

நானொரு சேதி சொல்கிறேன் கேளும் ரங்கநாதரே
நாவாப்பு மேலே சண்டைக்குப்போகிறேன் ரங்கநாதரே
சண்டைகெலிக்கவுந்தானந்தாரும் ரங்கநாதரே
சண்டைகெலித்துவந்தேனானால் ரங்கநாதரே
தங்கத்தாலே கலசம்வைக்கிறேன் ரங்கநாதரே
சண்டைமுனையில் தப்பித்துக்கொள்ள ரங்கநாதரே
எனக்கு நல்லபரம்வேணும் ரங்கநாதரே

நன்மைகின்னை ஈயிரண்டுமைந்தன் கண்ணீர்காட்டாயோ
நாராயணா கோவிந்தாவென்று நமடிவிழுந்தானும்
பக்தவத்சலா கேசவாவென்று காலில்விழுந்தானும்
சங்குசக்கரகோதண்டாவென்று சரணஞ்செய்தானும்
மதுசூதனதாமோதராவென்று மலரடிபணிந்தானும்
கரிமுறைபயந்தீர்த்தவாவென்று கழல்கள்பணிந்தானும்



இப்படியாகஸ்தோத்திரஞ்செய்து இருகரந்தனை கூப்பி
சரணஞ்செய்துசந்நிதியிலே நின்றானே இராசாதேசிங்கு
பன்னை சகுனமாகுதையா ரங்கர்கோவிலிலே

## தேசிங்குராஜன் சகுனம் காணல்

கண்டமாலை கண்டமாலை கருகிப்போயிற்று
கழுத்திலிருந்த புத்தாரங்கள் கழன்று விழுந்ததுபார்
கண்ணிலே நிறைபதகண்ணீர்சொரியுது ரங்கநாதருக்கு
மார்பின் மீதுகண்ணீரோடுது ரங்கநாதருக்கு
அத்தர்சவ்வாது பன்னீரங்கே கரைந்து விழுந்தது
நெற்றியிலிருந்த திருமணியட்டோ நிலத்திலவிழுந்தது
கழுத்திலிருந்ததுளசி மாலை கழன்றுவிழுந்தது பார்
எரிகின்ற திருவிளக்கங்கே திட்டென்றுவிழுந்துதாம்
எதிரிலிருந்தகோபுரமங்கே யிடிந்து விழுந்துதாம்
பக்கத்திலிருந்தலட்சுமியங்கே பதறிவிழுந்தாளாம்
எதிரிலிருந்தகருடஸ்தம்பமிரண்டாய்விழுந்ததுபார்
கிழக்குமுகத்திலிருந்தசாமி மேற்குதிரும்பினாராம்
இத்தனை சகுனம் கண்ணாலேகண்டான் இராசதேசிங்கு
கோபம்வந்துமூண்டுகொண்டது ராசாவுக்காலும்
உனக்கென்ன கேடுவந்ததுசாமி ரங்கநாதரே
நானொன்று கேட்கப்பட வேண்டும் ரங்கநாதரே
நீர்சொன்னால்பயப்படவேண்டுமா ரங்கநாதரே
நான்-மூன்வைத்தகாலை பின்வைப்பேனோ ரங்கநாதரே
நீ-சகாயமாட்டாய் பிழைக்கவுமாட்டாய் ரங்கநாதரே
ஏதோ ஜனனமெடுத்தீரையா ரங்கநாதரே
இன்னொரு சேதி சொல்லுகிறேன்கேளும் ரங்கநாதரே
காணிக்கைபோய்விடுகிறேன் ரங்கநாதரே
என்னை-அநியாயமாய்கொல்லவேண்டாம் ரங்கநாதரே
முடிவுசண்டையில் கொல்லுமையா ரங்கநாதரே
நானிறந்தாலும் பிழைத்தாலும் ரங்கநாதரே
உன்பாதத்திற் சேர்த்துக்கொள்ளும் ரங்கநாதரே
கும்பிட்டுக்கொண்டு வந்தானையா ராசாதேசிங்கு
கோவில் வெளியில்வந்தானையாராசாதேசிங்கு
கண்ணைபுரட்டிகதும்பினானையா ராசாதேசிங்கு
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை முன்னுக்குவந்தது
நாராயணாகோவிந்தாவென்று அசுவமேறினனும்
ஆபத்துபாந்தவாவென்று அசுவமேறினனும்
தூங்கர்கோயிலேவடமாகவந்தான் ராசாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டா கொடுத்தான் ராசாதேசிங்கு
போடுபோடென்று போடுகிறானையா ராசாதேசிங்கு
கோட்டையைவிட்டுவெளியேவந்தான்ராசாதேசிங்கு

பாராசாரியைக்கண்ணாலேபார்த்தது நவாப்புபாளையமும்
அல்லோலகல்லோலமாகுதையா நவாப்புபாளையமும்
கள்ளக்குறிச்சிக்கோடிப்போகுது நவாப்பு பாளையமும்
திருவண்ணாமலைக்கோடிப்போகுது நவாப்புபாளையமும்
கணவாக்குறிச்சிக்கோடிப்போகுது நவாப்பு பாளையமும்
புலியாயிருந்தபாளையமெல்லாம் பூனையாய்ப் போச்சுது
முக்காதவழிக்குப் பரவியிருக்குது நவாப்பு பாளையமும்
அந்தவேளையிலென்னசெய்கிறான் பங்காரு நாய்க்கனும்
நவாப்பருகேவோடிவந்தான் பங்காருநாய்க்கனும்

## பங்காரு நாய்க்கன் நவாப்புக்கு தேசிங்கு சேதி சொல்லல்

சலாமையாசலாமையா நவாப்புசைதுல்லா
நானொருசேதி சொல்கிறேன்கேளும் நவாப்புசைதுல்லா
எமனைப்போலேவாரானையா ராசாதேசிங்கு
சிங்கம்போலேவாரானையா ராசாதேசிங்கு
புலியைப்போலே வாரானையா ராசாதேசிங்கு
யானையைப்போலேவாரானையா ராசாதேசிங்கு
வருகுமுன்னமேவிசிட்போடுவான் ராசாதேசிங்கு
இதற்கொருபாயம் சொல்லுகிறேன் கேளும்நவாப்புசைதுல்லா
ஆலமரமுழுகியிருக்குது தாழனூரேரியிலே
பனைமரமுழுகியிருக்குது மடையனூரேரியிலே
பதின்காதவழிபரவியிருக்குது யிரண்டேரிதண்ணீர்
இரண்டையும்வெட்டி திருப்புகிறேன் சங்கராபரணியிலே
தண்ணீர்மேலேவரமாட்டான் ராசாதேசிங்கு
சாவகாசமாய்போகலாமையா நவாப்புசைதுல்லா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் நவாப்புசைதுல்லா

## நவாப்பு பங்காரு நாய்க்கனுக்கு ஏரியை வெட்ட உத்தரவு கொடுத்தது

மாறுமாறென்றுத்தாரங்கொடுத்தான் நவாப்புசைதுல்லா
சலாம்வாங்கித்திரும்பினானையா பங்காருநாய்க்கனும்
ஐந்நூறுபேர்வேலைக்காரரை கூட்டிப்போனானும்
ஏரிக்கரைமேலேவந்தானையா பங்காரு நாயக்கனும்
கீழ்மண்ணு மேல் மண்ணு த்து சங்கராபரணியிலே
தலைக்குமேல ஓராள் பிரியத்தம் தண்ணீரோடுது
பாம்புபோலேபுரண்டுவருகுது சங்கராபரணியிலே
ஏரியைவெட்டி நவாப்புபாளையம் வந்துசேர்ந்தானும்
பாளையத்தில்வந்தானையா பங்காருநாய்க்கனும்
வருகுமுன்னமேதயார் பண்ணினான் பங்காருநாய்க்கனும்
திருவண்ணாமலைசுபங்கி துரையும் முன்னேவந்தானும்
இரண்டாங்கணவாயவல்தாரையா மோவுத்துக்காரனும்



மூன்றாங்கணவாவசவிகொண்டான் அப்துல்காதரும்
நாலாங்கணவா வெட்டியாபுரம் பாளையக்காரனும்
ஐந்தாங்கணவாசெங்கற்பட்டு பாளையக்காரனும்
ஆறாங்கணவாசயரியலூரு பெரியதுரைநாதனும்
ஏழாங்கணவாபஞ்சாலகுறிச்சி பாளையக்காரனும்
எட்டாங்கணவா ஆரணிக்கோட்டை வேங்கடராயரும்
ஒன்பதாங்கணவாபூகம்லதத்தான் ஷேக்முகமதையா
பந்தோபஸ்தாயிருக்கறதையா நவாப்புசைதுல்லா
பாளையத்திலிருக்கிறானையா நவாப்புசைதுல்லா
அந்தவேளையிலென்ன பண்ணுகிறான் ராசாதேசிங்கு
நவாப்பெங்கேயெங்கேயென்று யிவனும் வந்தானும்
பக்கத்திலிருக்கும் சமேதார்மாரை கண்ணாலே கண்டானும்

## தேசிங்குராஜன் சேனைகளுக்குச் சொன்னது

அண்ணமாரே தம்பிமாரே சமேதாருமாரே
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும் சமேதாருமாரே
எனக்கு தெய்வபலமில்லையடா சமேதாருமாரே
என்கைபலங்கொண்டுபோறேனடா சமேதாருமாரே
பாலுஞ்சோறுதின்கிறவரானால் கொஞ்சிக்குப்போங்களடா
ரத்தஞ்சோறுதின்கிறவரானால் என்பின்னே வாங்களடா
பெண்சாதிமுகத்தில்விழியாதவரானால் என்பின்னேவாங்களடா
சண்டைபண்ணிஜெயித்தோமானால் சதிரோடமூன்று [டா
போர்க்களத்தில்செத்தோமானால் பூமுங்கீர்த்தியுமுண்டு
இரணகளத்தில்செத்தோமானால் நலமைதவியுண்டு
சாவுக்கென்று பயப்படவேண்டாம் சமேதாருமாரே
சக்திசல்திவாருமென்றுசொன்னான் ராசாதேசிங்கு
சங்கராபரணிக்கரையிலேவந்தான் ராசாதேசிங்கு
ஆற்றிலேதண்ணீர்வருவதைக்கண்டான் ராசாதேசிங்கு
சித்றப்பன்முகத்தைத்திரும்பிப்பார்த்தான் ராசாதேசிங்கு

## தேசிங்குராஜன் சிற்றப்பனுக்குச் சொன்னது

இரண்டுநாழிகைக்குமுன் தண்ணீரில்லையே சிற்றப்பராசாவே
இப்போதுதண்ணீர்வந்ததென்னை சிற்றப்பராசாவே
ஐயாவேனுமையாகேளும் ராஜாதேசிங்கு
நானொருசேதிசொல்லுகிறேன்கேளும் ராசாதேசிங்கு
இந்தச்சேதிக்கொலைக்காரன் பங்காருநாய்க்கனும்
தாழனூரேரிமடையனூரேரி ரெண்டும்வெட்டினானும்
இரண்டுதண்ணீரும் வருகுதடா மகனே தேசிங்கு
இரண்டுநாழிவற்றிப்போகுது இந்தஏரிதண்ணீர்
பிற்பாடுபுறப்பட்டுபோகலாமடா மகனே தேசிங்கு
கலகலவென்று சிரித்தானையா ராசாதேசிங்கு
என்னபேச்சுபேசினீரையா சிற்றப்பராசாவே

எனக்கு பயந்து தண்ணீர்கொண்டுவந்தான் நவாப் புசைதுல்
தண்ணீர்க்குப் பயந்திருப்பேனோ நான் சித்றப்பராசாவே [லா
பயந்துபோனால்விடுவேனோ நான் சித்றப்பராசாவே
என்று—கனைத்துக் குதித்தட்டினானையா பாராசாரியை
ஆற்றின் அக்கரையில் கொண்டுபோய் பழி சங்கரா ரணியாறு
தண்ணீர்வந்ததை பார்த்தானையா ராசாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டா கொடுத்தான் பாராசாரிக்கு
பன்னிரண்டடிக்கு படிவைத்ததுதிரை பாராசாரிகுதிரை
அந்தக்காட்சியைக் கண்ணாலேகண்டான் சமேதாருமாரும்
நத்தர்சிங்குநேகோபாலசிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
சித்றப்பதுரைதாராணிசிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
ராமசிங்கு லட்சுமணசிங்கு ஆற்றிலேகுதித்தாராம்
ராமூதாரிலட்சுமணதாரி ஆற்றிலேகுதித்தாரும்
பேட்டைசிப்பாய் மோவுத்துக்காரனும் ஆற்றிலேகுதித்தானும்
ஆற்று தண்ணீரைப்பார்த்துபயந்தார் சமேதாருமாரும்
பயந்ததுமல்லாமல் திரும்பினாரே செஞ்சிகோட்டையுமே
முப்பதுகுதிரையைக் கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
முப்பதுகுதிரை பம்பரம்போலவந்தது ராவுத்துக்காரனும்
பதிலுக்கு முகங்கொடுத்தானையா ராசாதேசிங்கு
முப்பதுகுதிரைக்குச்சர்தாரையா மோவுத்துக்காரனும்
கண்ணாலேகண்டான் மோசம்போச்சுது மோவுத்துக்காரனுக்கு
இடதுகாலுக்குசிமிட்டா கொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்று சுழன்றுவாருது நீலவேணிகுதிரை
இராச முனையைச் சுற்றிவந்தான் மோவுத்துக்காரனும்
குதிரையைவிட்டுக்கீழிறங்கிக்கொண்டான் மோவுத்துக்காரனும்
மண்டிபோட்டுச் சலாம்வாங்கினான் மோவுத்துக்காரனும்

### மோவுத்துக்காரன் சண்டைக்குப்போக தேசிங்கைக் கேட்குதல்

நானொருவார்த்தைசொல்கிறேன் கேளும் ராசாதேசிங்கு
முதற்சண்டைக்கு உத்தாரந்தாரும் ராசாதேசிங்கு
சந்தோஷமாய் உத்தாரந்தாரும் ராசாதேசிங்கு
முதல்பூசைக்கு நின்றிருக்கிறேனையா சுபங்கிதுரைதானும்
கலகம் செய்கிறானையா நவாப்புசைதுல்லா
இரண்டுபேரையும்வெட்டிஜெயிக்கிறேன் ராசாதேசிங்கு
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராஜாதேசிங்கு

### தேசிங்குராஜன் மோவுத்துக்காரனுக்குச் சொல்லல்

என்னடா சகா பேசினையடா மோவுத்துக்காரா நீ
அண்ணனும்பிள்ளை தம்பியுமில்லையோமோவுத்துக்காரா நீ
கையிற்கங்கணங்கட்டியிருக்கிறாய் மோவுத்துக்காரா நீ
சண்டைமுகத்தைபார்த்ததில்லையேமோவுத்துக்காரா நீ



ஒண்டியாய்ச்சண்டைபோடவேண்டாம்மோவுத்துக்காரா நீ
நீயும்நானும் புகுந்துவெட்டுவோம் மோவுத்துக்காரனே
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துக்காரனும்
என்னபேச்சுபேசினீரையா ராசாதேசிங்கு
நானும் நீயும்புகுந்துவெட்டினால் ராசாதேசிங்கு
உமதுபேருண்டாகுமோ எனது பேருண்டாகாது
சல்லிசலாய் உத்தாரந்தாரும் ராசாதேசிங்கு
கத்திபிடிக்கச் செய்தானுமானால் ராசாதேசிங்கு
நாக்கு நழிநீர் கண்ணாலல் ரூப ராசாதேசிங்கு
நவாபைப்பாளையத்தைஇப்போ அழிஞ்செய்யாவிட்டால்
எந்தன்பேருமோவுத்துக்காரனென்று சொல்லுவார்களோ
தூள் தூளாகத்துவம்சம்செய்கிறேன் துரைகளையாவற்றும்
அணுவணுவாய் அறுஞ்செய்கிறேன் பயல்களையாவற்றும்
தவிடுபொடியாய்ச்சிதைத்துப்போடுகிறேன் ஜனங்கள்யாவற்றும்
காற்றிலேயவம்பஞ்சாகச்செய்கிறேன் கனைத்தபடையெல்லாம்
அரைநாழிகை தனக்குத்தாரந்தாருமையா ராசாதேசிங்கு
அந்தப்பேச்சை காதிலேகேட்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
நானென்ன சொன்னாலும் கேளேனென்றாய் மோவுத்துக்காரனே
சந்தோஷமாகதலையையசைத்தான் ராசாதேசிங்கு
முதற்சண்டைக்குத்தாரங்கொடுத்தான் ராசாதேசிங்கு
சந்தோஷமாகச்சலாம்வாங்கினான் மோவுத்துக்காரனும்

### மோவுத்துக்காரன் சண்டைக்குப் போகுதல்

சலாம்வாங்கித்தாண்டினானையா நீலவேணிமேலே
இடதுகாலுக்குசிமிட்டா கொடுத்தான் நீலவேணிக்கு
காற்றுப்போலேபறக்குதையா நீலவேணி குதிரை
மேகம்போலேபறக்குதையா நீலவேணி குதிரை
ஒற்றைக்குதிரையை கண்ணாலேகண்டான் சுபங்கிதுரைதானும்

### சுபங்கிதுரை தளசேனைக்குச் சொல்லல்

அண்ணைமாரே தம்பிமாரே சமேதாருமாரே
ஒற்றைக்குதிரைக்காரன் வாரான் சமேதாருமாரே
ஜல்திஜல்தி பீரங்கிபோடும் சமேதாருமாரே
ஆனால் நல்லதாகட்டுமென்று சமேதாருமாரும்
சொல்லிவாயைமூடுமுன்னே சமேதாருமாரும்
படபடவென்றுசுட்டார்கள் சமேதாருமாரும்
பருத்தாசத்தங்காதிலேகேட்டது நீலவேணிக்கு
குண்டுமேலே சாணுயரம் வேகமாய்ப்பறக்குது
நடுக்கண்டிலேவந்துவிழுந்தது நீலவேணியும்
தண்டுக்குச்சைகைகூடுதிருனையா சுபங்கிதுரைதானும் [னும்
மோவுத்துக்காரனைக் கண்ணாலேகண்டான் சிப்பாய் துரைதா

மூவாயிரம்குதிரை வந்த வளைத்தது மோவுத்துக்காரனை
லகானையிழுத்து கையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்
பட்டாவுருவி கையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்
ஆகாயவாணியைசாக்ஷிவைத்தான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் மோவுத்துக்காரனும்
கரகரவென்றுவருகுது நீலவேணிக்குதிரை
குதிரைசுழன்ற நிமிஷத்துக்குள் மோவுத்துக்காரனும்
வடக்குமூலம் திரும்பினானையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்த ஆயிரங்குதிரை வந்துவளைந்தது
குதிரைகள வந்ததைகண்ணாலேகண்டான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழலுது பாருநீலவேணிக்குதிரை
குதிரைசுழன்றநிமிஷநாழிகைக்கு மோவுத்துக்காரனும்
கண்கள் சிவந்து பொறிகள் பறக்க மோவுத்துக்காரனும்
கனைத்துக்கதுப்பிமீசையுருவியே மோவுத்துக்காரனும்
கத்தியையெடுத்துவீசினானையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்த ஆனைகுதிரை டாருடாய்விழுந்தது
மேற்குபக்கம் திரும்பினானையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்த ஆயிரங்குதிரை வந்துவளைந்தது
குதிரைவருவதைக்கண்ணாலே கண்டான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
கரகரவென்றுசுழன்றதுபாரு நீலவேணிக்குதிரை
குதிரைசுழன்ற நிமிஷநாழிகைக்குமோவுத்துக்காரனும்
குடல்கள்சரிந்திட சிலகுதிரைகள வந்துவிழுந்தது பார்
தலைகள்துண்டாய்சிலகுதிரைகள் தவறிவிழுந்ததுபார்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
சிங்கம்போல வாரானையா மோவுத்துக்காரனும்
புலியைப்போலபுகுந்தானையா மோவுத்துக்காரனும்
துண்டு துண்டாய்தூக்கிவெட்டுகிறான் மோவுத்துக்காரனும்
தலைதலையாயுருட்டிப்போடுகிறான் மோவுத்துக்காரனும்
சப்பைசப்பையாய்கழித்துப்போடுறான் மோவுத்துக்காரனும்
கால்மாடுதலைமாடாய்ப்போகுதுபார் நவாப்பு பாளையமும்
அந்தவேளையிலென்னபண்ணுறான் சுபங்கிதுரைதானும்
மூவாயிரம் பீரங்கியைத் தயார்பண்ணினானை
சுற்றிலுமிருந்த சிப்பாய்மார்கள் பருத்த தீர்க்கார்கள்
அத்தனை குண்டுக்குந்தப்பிவருகுது நீலவேணிகுதிரை
ஒருகுதிரைமேலாயிரங்குதிரை வந்துவளைந்தது
ஆயிரங்குதிரையைதாண்டிவருகுது நீலவேணிகுதிரை
ஒருகத்தியின்மேலாயிரங்கத்தி வந்துவிழுந்ததுபார்
ஆயிரங்கத்தியுந்தள்ளிவெட்டுகிறான் மோவுத்துக்காரனும்
மருந்துபுகையிலே புகுந்துவெட்டுகிறான் மோவுத்துக்காரனும்



தலைதெரியாதுபுகுந்துவெட்டுகிறான் மோவுத்துகாரனும்
கிழக்குப்பக்கந்திரும்பினானையா மோவுத்துக்காரனும்
அங்கேயிருந்த ஆயிரங்குதிரை வந்து வளைந்தது
மார்கள்பிளந்திடசிலகுதிரைகள் மாய்ந்துவிழுந்ததுபார்
மண்டைதிறந்து மூளைசிதறிட மாய்ந்ததுசிலகுதிரை
இப்படியாகசிதைத்தறுத்து இம்சைகள் செய்தபின்பு
சிந்தைமகிழ்ந்துசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
அங்கேயிருந்த தண்டில் புகுந்தது நீலவேணிகுதிரை
தண்டிலேபுகவே சந்தோஷமானான் மோவுத்துக்காரனும்
பாளையங்களை கண்ணாலேகண்டான் மோவுத்துக்காரனும்
கொசுக்களைபோலேதேய்ப்பேனென்றான் மோவுத்துக்காரனும்
தூசிபோலூதிடுவேனென்றான் மோவுத்துக்காரனும்
பஞ்சுபோலபறக்கடிப்பேனென்றான் மோவுத்துக்காரனும்
மெத்தைதைரியங்கொண்டுதிரிகிறான் மோவுத்துக்காரனும்
அரிந்தரிந்துபோட்டானையா மோவுத்துக்காரனும்
முன் வீச்சுக்காயிரம் விழுந்ததுபார் நவாப்புபாளையமும்
பின் வீச்சுக்காயிரம்விழுந்ததுபார் நவாப்பு பாளையமும்
தெற்கேயிருந்தசுபங்கி துரையவன் கண்ணாலேகண்டானும்
ஆனையின்மேலம்பாரிபோட்டே யவனுமிருக்கிறான்
அவ்வேளையிலென்னபண்ணுகிறான் மோவுத்துக்காரனும்
ஆனைக்கூட்டமெத்தயிருக்குது சுபங்கிதுரையண்டை
ஆனை வடிக்கைபார்த்துவாறான் மோவுத்துக்காரனும்
குதிரைவருவதைக்கண்ணாலேகண்டான் சுபங்கிதுரைதானும்
ஆயிரம் யானைமுன்னேதூரத்தினான் சுபங்கிதுரைதானும்
ஆனைவருவதைக்கண்ணாலேகண்டான் மோவுத்துக்காரனும்
கலகலவென்றுசிரித்தானையா மோவுத்துக்காரனும்
பாலாவுருவி கையில்பிடித்தான் மோவுத்துக்காரனும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
யானைக்குமேலே ஐந்துயரம் அதிர்ந்துபாய்கிறது
குதிரைபோகிறவேகத்தில் குத்திசாய்க்கிறானும்
கரகரவென்று சுழன்றுவருகுது நீலவேணி
கால்மாடுதலைமாடாக குத்திசாய்க்கிறானும்
கடகடவென்றுசாயுது பாரு யானைகளானதும்
ஆயிரம் யானைகுத்திபுரட்டினான் மோவுத்துக்காரனும்
தெற்கேயிருந்தசுபங்கிதுரை கண்ணாலே கண்டானும்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் நீலவேணிக்கு
முன்னங்காலைதூக்கிவைத்து யானைத்தலைமேலே
பாலாவுருவிக்கையிலேபிடித்தான் மோவுத்துக்காரனும்
அல்லாகு அல்லாகுவென்றுபோட்டான் பாலாதன்னாலே
முன்னேயிருந்த மாவெட்டியான் நிலத்தில்வீழ்ந்தானும்
மாருக்குபாலாயிழுத்துபிடித்தான் மோவுத்துக்காரனும்

ஓடிப்போகிறேன் ஓடிப்போகிறேன் மோவுத்துக்காரனே
ஓடிப்போகிறசிப்பாய்மகனும் சண்டைக்கேன்வந்தாய
சௌகரியமில்லாதவனே நீயும் சண்டைக்கேன்வந்தாய்
இனியில்லாதகோபமச்சுது மோவுத்துக்காரனுக்கு
வலதுகையைப்பிடித்தானையா மோவுத்துக்காரனும்
வலதுகையுந்தானுமாகவே பூமியில்விழுந்தானய

### சுபங்கித்துரை மோவுத்துக்காரனை வணங்கி கேட்குதல்

இடதுகையால் சலாம் வாங்கினான் சுபங்கிதுரை தானும
நானொருசேதி சொல்கிறேன் கேளும் மோவுத்துக்காரனே
உத்தன் மேல சண்டைக்கு வரவில்லை மோவுத்துக்காரனே
பெண்சாதியிழந்தேன் தெண்டமையா மோவுத்துக்காரனே
பிள்ளையிழந்தேனே அல்லவறிய மோவுத்துக்காரனே
ஊருமிழந்தேனே பசவியிழந்தேன் மோவுத்துக்காரனே
நீர் சொன்னபடி நானுங்கேட்டேன் மோவுத்துக்காரனே
சோறுகூட தின்னவில்லை மோவுத்துக்காரனே
நானிப்போ தேசோடிப்போகிறேன் மோவுத்துக்காரனே
இப்போதென்னை விட்டுவிடவேண்டும் மோவுத்துக்காரனே
ஆனால் நல்லதாகட்டும்போடா சுபங்கித்துரையே நீ
ஓர் வரக்கையோடு ஓடிப்போனானும் சுபங்கிதுரை தானும்
அவ்வேளையிலென்னபண்ணுகிறான் மோவுத்துக்காரனும்
இடதுகையூக்குசிமிட்டா எடுத்தான் நீலவேணிக்கு
நவாபு எங்கே எங்கேயென்று இவனும்வாரானும்
குதிரை குருவனைக்கண்ணாலே கண்டது நவாப்பு பாளையமும்
அல்லோலகல்லோலமாச்சுது நவாப்பு பாளையமும்
அங்கேயிருந்து கண்டில் நுழைந்தானே மோவுத்துக்காரனும்
திமிதிக்கோட்டை ஷேக்முகம்மது வந்தெதிர்த்தானும்
ஷேக்முகமதைக் கண்ணாலே கண்டான் மோவுத்துக்காரனும்
கலகலவென்று சிரித்தானையா மோவுத்துக்காரனும்
கண்ணாலேகண்டான்கோபமாச்சுது நவாப்பு பாளையத்தை
கத்தியையெடுத்து நீலவேணியை கலங்கத் தட்டினானும்
தட்டினவுடனே நீலவேணியும் தண்டில பாயுதுபார்
பாய்ந்தவுடனே ஷேக் முகம்மது பாலையெடுத்தானும்
குத்துனக் குத்துமோவுத்துக்காரன் தொண்டையில பாய்ந்தது
பாய்ந்த ஈட்டியைவலதுகையிலே பற்றியெடுத்தானும்
கோபம்மிகவும்பொங்கிவந்தது மோவுத்துக்காரனுக்கு
சிவ்வென்றெழுந்து ஷேக் முகம்மது கையைபிடித்தானும்
கத்தியெடுத்து ஷேக் முகம்மது கழுத்தை வெட்டப்போனான்
அந்தவேளையிலென்ன சொல்கிறான் ஷேக்முகம்மதையா



### ஷேக்முகம்மது மோவுத்துக்காரனை இரங்கக்கேட்குதல்

சலாமையாசலாமையா மோவுத்துக்காரனே
அறியாமல்சண்டைக்குவந்தேனையாமோவுத்துக்காரனே
மெய்யாயும் நீரே தேசிங்குப நீரே மோவுத்துக்காரனே
அடிமையென்னை ஆதரிக்கவேண்டும மோவுத்துக்காரனே
என்று வணங்கிச்சலாம் செய்தான் ஷேக்முகம்மதையா
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் மோவுத்துக்காரனும்
பகையாளிசண்டைக்குவந்தால் பாலன்விடுவேனோ
கட்டியெறிந்தகையிப்போ என்னிடவாளாலே
கண்டகண்டமாய்வெட்டியெறிந்தான் மோவுத்துக்காரனும்
கத்திபிடித்தசிப்பாய்மார்களைக் கரணையாடிவாருன்
சலாம்வாங்கினசிப்பாய்மார்களை ஓடிப்போகசொன்னான்
திவெட்டுவையநபாலனையா மோவுத்துக்காரனும்
ஒருக்காலமும்சண்டையறியான் மோவுத்துக்காரனும்
கைகளெல்லாம் ஓய்ந்துபோச்சி மோவுத்துக்காரனுக்கு
ஆரத்தகவலுகள்விகொண்டது மோவுத்துக்காரனுக்கு
களைகளைவந்துமூண்டுகொண்டது மோவுத்துக்காரனுக்கு
ராசாவிடம்போகலாமென்றுகுதிரையை திருப்பினானும்
சந்தோஷமாகதிருப்பினானையா மோவுத்துக்காரனும்
பரததாட்டியமாடிவருகுது நீலவேணிகுதிரை
இராசாமுன்னுக்குவாருனையா மோவுத்துக்காரனும்
அந்தவேளைக்குபதுங்கியிருந்தார் தப்பினகுண்டுக்காரர்
இரட்டைக்குண்டுபார்பண்ணி படுக்கென்றுசுட்டானும்
படுக்கென்றசத்தம்திரும்பிபார்த்தான் மோவுத்துக்காரனும்
அந்தகுண்டுநெற்றியில்பட்டது மோவுத்துக்காரனுக்கு
அல்லாரே அல்லாரேயென்று கீழேவிழுந்தானும்
அரிகோவிந்தாவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்
வைகுந்தபதவிசேர்ந்தானையா மோவுத்துக்காரனும்

### மோவுத்துக்காரன் இறந்ததைக்கண்டு நீலவேணி விசனப்படல்

சுற்றிசுற்றிவருகுதையா நீலவேணிகுதிரை
முகந்து முகந்து அழுகுதையா நீலவேணிகுதிரை
கண்களில் நீரும் பொங்கிவருகுது நீலவேணிக்கு
கடகடவென்றுபுரண்டழுகுது நீலவேணிக்குதிரை

### மோவுத்துக்காரன் இறந்தபின்பு நவாப்பு பங்காரு நாய்க்கனை நீலவேணியைக் கொண்டுவரச் சொல்லல்

அண்ணுவாடா தம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
மோவுத்துக்காரன்விழுந்துபோனான் பங்காருநாயக்கா நீ
நீலவேணியைகொண்டுவரவேணும் பங்காருநாயக்கா நீ



அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் பங்காருநாயக்கனும்
குதிரையையெல்லாம்சுற்றிபார்த்தது நீலவேணியும்
கனைத்துக்குதும்பியெழும்பிற்று நீலவேணியும்
கரகரவென்றுசுழன்றதையா நீலவேணியும்
இடதுசாரிவலதுசாரிவந்தது பாரு நீலவேணியும்
வந்துபாய்ந்து உதைத்தது பாரு நீலவேணியும்
காலினாலேயெட்டியுதைத்தது பாரு நீலவேணியும்
வாலினால்வீசியடித்தது நீலவேணியும்
வீறிட்டுக்கொண்டுவிழுந்துசாகுது நவாப்புதன் குதிரை
மூலைக்குமூலைதுரத்தியுதைக்குது நீலவேணியும்
காலுதையால் விழுந்துசெத்தது ஐம்பதுகுதிரையும்
விக்கி முக்கிட்டுச்சாகும் குதிரைகளந்நேரம்
ஆயிரந்துருப்புசிப்பாய்மாரும் அடியோடேபோனார்கள்
குதிரைவிழுந்தது கண்ணாலேகண்டது நீலவேணியும்
இராசாபக்கம்போவோமென்று நீலவேணியும்

### மோவுத்துக்காரன் குதிரை தேசிங்குராசனிடம் வருதல்

இரண்டுதாண்டில்வந்துநின்றது ராசாமுன்பாக
கண்ணில்நிறையகண்ணீர்கலங்குது நீலவேணிக்கு
குதிரைமுகத்தை கண்ணாலே கண்டான் ராசாதேசிங்கு
என்னுடன்வளர்ந்ததம்பிதானுமிறந்துபோய்விட்டான்
எந்தன்பலமும்பாதிபோச்சுது சமேதாருமாரே
குதிரையைவந்துகட்டிக்கொண்டான் ராசாதேசிங்கு
என்னகாரியம் பண்ணினையடா நீலவேணியே நீ
அந்தப்பேச்சைகாதிலேகேட்டது நீலவேணியும்
இராசன்முன்பாகநடக்குதுபாரு நீலவேணியும்

### மோவுத்துக்காரன் இறந்ததைப் பார்த்து தேசிங்குராஜன் விசனப்படல்

மோவுத்துக்காரன்முன்னேவந்தான் ராசாதேசிங்கு
மண்டிபோட்டுஉட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
வாரியெடுத்துமடிமீதில்வைத்தான் ராசாதேசிங்கு
முகத்தோடேமுகம்வைத்தானையா ராசாதேசிங்கு
கோடுகோடென்றுகதறியழுதான் ராசாதேசிங்கு
என்னைவிட்டு நீஎப்படிப்போனாய் மோவுத்துக்காரனே
எனக்கு நல்வழி நீதேடிவையும் மோவுத்துக்காரனே
நவாப்பைவெட்டிநானும்வருகிறேன் மோவுத்துக்காரனே
தனக்குத்தானேதைரியமானான் ராசாதேசிங்கு
பெரியகுழியாய்வெட்டச்சொன்னான் ராசாதேசிங்கு

லட்சம்பொன் னுதானங்கொடுத்தான் ராசாதேசிங்கு
குழியில் தூக்கிவைத்தானையா மோவுத்துக்காரனே
மண்டிபோட்டுபடுத்ததுபார் நீலவேணிகுதிரை
பட்டாவுகளிகைமேல்பிடித்தான் ராசாதேசிங்கு
இரண்டு துண்டாகதீர்த்தானையா ராசாதேசிங்கு

## மோவுத்துக்காரனையும் அவன் குதிரையையும் புதைத்தல்

குதிரையைக்கூடப் புதைத்தானையா ராசாதேசிங்கு
பெரியகோரிகட்டச்சொன்னான் ராசாதேசிங்கு
அந்தவேளையிலென்ன செய்கிறான் ராசாதேசிங்கு
நாராயணகோவிந்தாவென்றான் ராசாதேசிங்கு
அண்ணமாரே தம்பிமாரே சமேதாருமாரே
நானொன்றுசொல்கிறேன் கேளும் சமேதாருமாரே
நான்போகட்டா நீர்வாரீரோ சமேதாருமாரே
ஓடிப்போகிறசிப்பாய்மாரை துரத்திவெட்டவேண்டாம்
பதுங்கிபோகிறசிப்பாய்மாரைப்பார்த்து வெட்டவேண்டாம்
ஏழைஎளிய பிச்சைக்காரரை எதிர்த்து வெட்டவேண்டாம்
உள்ளே எதிர்த்தசிப்பாய்மாரை டாருப் தீர்த்திடுங்கள்
அந்தப்பேச்சை காதிலேகேட்டார் சமேதாருமாரும்
பன்னிரண்டங்குபடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
கனைத்துக்கதும்பியெழுந்தானையா ராசாதேசிங்கு

## தேசிங்குராஜன் சண்டைக்குப் போகுதல்

பரதநாட்டியமாடிவருகுது பாராசாரிகுதிரை
குதிரைவருவதைகண்ணுலேகண்டான் நவாப்புசைதுல்லா
அண்ணுவாடா தம்பிவாடா பங்காருநாய்க்கா நீ
குதிரைவருவதைக்கண்ணுலே பாரும் பங்காருநாய்க்கா நீ
சல்திசல்திபீரங்கிதிருப்பு பங்காருநாய்க்கா நீ
சுறுக்காபலுத்தாதொடுத்தானையா பங்காருநாய்க்கனும்
பலுத்தாசத்தங்காதிலே கேட்டது பாராசாரிகுதிரை
இரண்டாங்கணைவாய்சேத்துப்பட்டு தாவுத்துக்காரனும்
குதிரைசேனைக்குசைகைபூதினான் தாவுத்துக்காரனும்
அதினவுடனே சூழ்ந்துகொண்டார் சிப்பாய்மார்களும்
முப்பதினாயிரங்குதிரைகனைத்தது ராசாவையானாலும்
அந்தக்குதிரையெல்லாஞ்சுற்றிப்பார்த்தான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
இரண்டுகையிலேபட்டாவாங்கினான் ராசாதேசிங்கு
ஆகாயவாணியைசாக்ஷிவைத்தான் ராசாதேசிங்கு
பூமிதேவியைச்சாக்ஷிவைத்தான் ராசாதேசிங்கு



சந்திரசூரியரை சாக்ஷிவைத்தான் ராசாதேசிங்கு
ராமுராமுதேதேவா வென்று போட்டானொருவெட்டு
துண்டுதுண்டாய் தூக்கிவெட்டுகிறான் ராசாதேசிங்கு
தலைதலையாயுருட்டிபோடுகிறான் ராசாதேசிங்கு
டாருடாருய்கிழித்துபோடுகிறான் ராசாதேசிங்கு
இணையில்லாமல் புகுந்துவெட்டுகிறான் ராசாதேசிங்கு
வெட்டொன்றுக்கு எட்டுத்துண்டாய் டாருய்விழுந்தது
ஜெயராமசங்காராமு புகுந்துவெட்டுகிறார்கள்
ராமுசிங்கு லட்சுமணசிங்கு புகுந்து வெட்டுகிறார்கள்
சித்றப்பதுரை தாணிசிங்கு புகுந்துவெட்டுகிறாராம்
மூன்றரை நாழிகைமூலைக்குமூலை புகுந்துவெட்டுகிறாராம்
இருபத்தொருகுதிரையோடு புகுந்துவெட்டுகிறாராம்
அத்தனைகுண்டுக்கும்தப்பிப்போகுது பாராசாரிகுதிரை
குண்டு சந்திலேநுழைந்துபோகுது பாராசாரிகுதிரை
அந்தகுண்டுக்குந்தப்பிப்போகுது பாராசாரிகுதிரை
நெருப்புமாரியாய் பொழிகிறானையா தாவுத்துக்காரனும்
அந்தகுண்டுக்குந்தப்பிவருகுதையா பாராசாரிகுதிரை
குண்டுமேலேபறக்குதையா பாராசாரிகுதிரை
குண்டுவிழுந்துதவாப்புபானையாமும் கூவினானதுபார்
ஒருகுதிரைமேல் ஆயிரங்குதிரை வந்துவிழுந்ததுபார்
ஒருகத்திமேலே ஆயிரங்கத்தி வந்துவிழுந்தது பார்
ஆயிரங்கத்தி தள்ளி வெட்டுகிறான் ராசாதேசிங்கு
கலகலகலகலகலகலவென்று கத்திகள்மின்னுதுபார்
மிருமிருமிருமிருமிருமிருவென்று கத்திகமின்னுதுபார்
மேல்குண்டுகீழேபாயுது பாராசாரிகுதிரை
இத்தனைக்குந்தப்பிபோகுது பாராசாரிகுதிரை
மருந்துபுகையிலேபுகுந்து வெட்டுகிறான் ராசாதேசிங்கு
தென்னங்குலைபோல புகுந்து வெட்டுகிறான்ராசாதேசிங்கு
சோளத்தண்டையறுத்தாப்போலே அறுத்துடபோடுகிறான்
வாழைதண்டையறுத்தாப்போலே அறுத்துப்போடுகிறான்
கரகரவென்று சுழன்றுவருகுது பாராசாரியும்
கண்டமட்டுஞ்சாடுறானையா ராசாதேசிங்கு
பதினைந்து நாழிகைமிகவுமாச்சுது நவாப்புபானையாமும்
சோருசோவென்றுதுடிக்குதையா நவாப்புபானையாமும்
பானிபானியென்றுதுடிக்குதையா நவாப்புபானையாமும்
ரொட்டிரொட்டியென்றுதவிக்குதையா நவாப்புபானையாமும்
தாயில்லாபிள்ளைபோல் தவிக்கிறார் நவாப்புபானையாமும்
இனியிருந்தால்பிழைக்கமாட்டோம் தேசிங்குமுன்னாலே
என்று-கள்ளக்குறிச்சிக்கோடிபோகுது சிறியபானையாமும்
ஆரணிக்கோட்டைக்கோடிபோகுது நவாப்புபானையாமும்
ஓடிபோகிறதை தைதக்கண்டான் தாவுத்துக்காரனும்

இருபதினாயிரம்துருப்புக்குதிரை வேலியேவிட்டானும்
அந்தவேளையிற் கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
குதிரைவருவதைகண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
படபடவென்றுதுடிக்குதுமீசை ராசாவுக்கானாலும்
கரகரவென்றுசுழன்றுவருகுது பாராசாரிகுதிரை
கரணைகரணையாய்விழுந்துபோகுது நவாப்புபாளையமும்
கால்மாடுதலைமாடாய்விழுந்துபோகிறது துருப்புகுதிரையும்
இருபதினாயிரங்குதிரையது டாகவிழுந்தது
யானைவேடிக்கையைபார்க்கிறானையா ராசாதேசிங்கு
இரும்புலக்கையைவாங்கியடித்தது பட்டத்துயானையும்
கரகரவென்றுசுழட்டிவருகுது யானைகளானாலும்
வீதிட்டுக்கொண்டோடிவருகுது யானைகளானாலும்
ஆனையைப்பார்க்கிலும் சாணுயரம்பாயுது பாராசாரிகுதிரை
ஆனையின்மேலே தாண்டிவிழுகுது பட்டத்துயானையும்
பாலாவுருவிகையிலேபிடித்தான் ராசாதேசிங்கு
குத்திருக்கிசாய்த்துப்போடுகிறான் ராசாதேசிங்கு
உலக்கைபோட்டுசலாம்வாங்குது பட்டத்துயானையும்
மண்ணைக்கவ்விசாய்கிறதையா மதத்தயானைகளும்
குடல்சரிந்துசாய்கிறதையா சிலதுயானைகளும்
மத்தகம்பிளந்துசாகிறதையா மதங்கொண்டயானைகளும்
உதைத்துக்கொண்டுசாகிறதையா சிலதுயானைகளும்
இரண்டாயிரம்யானையங்கே டாறாய்விழுந்தது
யானைவிழுவதைக்கண்ணாலேகண்டான் ராசாதேசிங்கு
அங்கேயிருந்ததாவுத்துக்காரனைக் கண்ணாலேகண்டானும்
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
மூன்னங்காலைதூக்கிவைத்தது யானைத்தலைமேலே
பாலாவுருவிப்போட்டானையா ராசாதேசிங்கு
முன்னேருரிந்தமாவெட்டியானும் நிலத்தில்விழுந்தானும்
மாருக்குப்பாலாயிழுத்துபிடித்தான் ராசாதேசிங்கு
அந்தவேளையில்சலாம்வாங்கினான் தாவுத்துக்காரனும்
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராசாதேசிங்கு
நானிப்போதேஓடிப்போகிறேன் ராசாதேசிங்கு
அந்தவேளையில்கோபம்பிறந்தது ராசாவுக்கானாலும்
நவாப்புக்கேற்றசிநேகிதக்காரன் தாவுத்துக்காரனும்
நாராயணாகோவிந்தாவென்று போட்டானேபாலாவை
சேத்துப்பட்டுதாவுத்துக்காரன் நிலத்தில்விழுந்தானும்
நிலத்தில்விழவேநவாப்புஜனமும் நிமிஷமிருக்கவில்லை
கண்டபடியேஓடிப்போச்சுது நவாப்புபாளையமும்
தாவுத்துக்காரன்செத்தசேதி நவாப்புகேட்டானும்
இனியில்லாதப்பம்பிடித்தது நவாப்புக்கானாலும்



இனியிருந்தால்தலைபோகுமே தேசிங்கு கையிலே
ஓடிஓடிஒளிந்தானையா நவாப்புசைதல்லா
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் ராசாதேசிங்கு
இருபத்திரண்டுவயதுள்ளபாலன் ராசாதேசிங்கு
ஐம்பதினாயிரம்சேனைவெட்டினான் ராசாதேசிங்கு
இரண்டாயிரம்யானைவெட்டினான் ராசாதேசிங்கு
கைகளெல்லாம்ஓய்ந்துபோச்சுது ராசாவுக்கானாலும்
இரத்தக்காலுகமயிக்கொண்டது ராசாவுக்கானாலும்
நவாப்புபாளையத்தைச்சுற்றிபார்த்தான் ராசாதேசிங்கு
இவனைப்பார்த்துபதுங்கினார்கள் சிப்பாய்மார்களும்
எடுத்தபீரங்கிபடுத்தாற்போலே ப்பட்டுநிற்கிறார்கள்
தனைனி ஜனத்தைகண்ணாலேகண்டான ராசாதேசிங்கு
குண்டுமருந்திலிருந்துசெதக்கது ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
செஞ்சிக்கோட்டைக்குப்போவேமென்று திருப்பினான்குதிரை
அறுபத்துநான்குழஞ்சட்டமரமும் டாறும் கிழிந்தது
ஐந்துகுதிரைமேய்பட்டுவாரான் ராசாதேசிங்கு
சங்கராபரணிக்கரையிலேவாரான் ராசாதேசிங்கு
குதிரையைவிட்டுத்தண்ணியிற்குதித்தான் ராசாதேசிங்கு
முழங்கால்வரையிற்றண்ணியங்கே பிடித்துஓடுகுது
கத்தியைகழுவியுறையிலேபோட்டான் ராசாதேசிங்கு
மூன்றுமடக்குதண்ணீர்குடித்தானையா ராசாதேசிங்கு
மரத்துநிழலிலேஉட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
அந்தவேளையிலென்னபண்ணுகிறான் அவனிடதாயாதி
தேசிங்குதாயாதியையா தலைசிங்குமகாராசன்
ஒற்றைகுதிரைபோட்டுக்கொண்டு ஓடிவந்தானெதிரே
ராமுராமுக்சீதாராமுரே ராசாதேசிங்கு
நீ-திரும்பியந்தவயணமென்ன ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான ராசாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராசாதேசிங்கு
நவாப்புசெத்துப்போனானையா தலைசிங்குராசாவே
மான்னம்பச்சிபசினிரையா ராசாதேசிங்கு
செத்துப்போனவன்சேத்துப்பட்டு தாவுத்துக்காரனும்
மலையடிவாரமூலேயோரத்தில் நவாப்புஒளிந்தானும்
சொச்சத்தோடேவிட்டுப்போகாதே ராசாதேசிங்கு
ஜல்திஜல்திபுறப்படுமென்றான் தலைசிங்குராஜனும்
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
தனக்குவளர்த்தபாராசாரியைமூன்றுக்குவர சொன்னான்
பன்னிரண்டங்குலடிவைத்தகுதிரை பாராசாரிகுதிரை
மூன்றுக்குவந்துநின்றதுபாரு பாராசாரியும்

ஐந்துகுதிரையோடேவாராரையாராசா தேசிங்கு
அவர்-மார்பிலிருந்தரங்கநாதர் வழியிலேநிக்குறாராம்
அவர்-தோளிலிருந்தரங்கநாதர் தூரத்திலேநிக்குறாராம்
இரங்கநாதரைக்கண்டுதொழுதானே ராசாதேசிங்கு
அரிகேசவிந்தாவெகருன் ராசாதேசிங்கு
அப்பாகேளும் அப்பாகேளும் குழந்தைதேசிங்கு
இத்தனைசண்டைபண்ணினுயடா குழந்தைதேசிங்கு
இந்தசண்டைநிறுத்திபோடடா குழந்தைதேசிங்கு
நமக்குசண்டைவைத்துக்கொளளடாமகனேதேசிங்கு
நானுங்கூடவருகிறேனடா மகனேதேசிங்கு
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டானசிப்பாய்தேசிங்கு
கையையெடுத்துதொழுதானையா ராசாதேசிங்கு
என்னைவிட்டுநீர்பிரிந்துபோனீர் ரங்கநாதரே
என்னிடபலமும்போத்போச்சுது ரங்கநாதரே
தன்முன்வைத்தகாலைபின்வைப்பேனே ரங்கநாதரே
இன்றைக்குஞ்சாவுநாளைக்குஞ்சாவு ரங்கநாதரே
பிறந்தவன்இறக்கேசாவிருக்குது ரங்கநாதரே
ஜலத்தியெனக்குவுத்தாதமாருட ரங்கநாதரே
இப்படிசொலிவருகிருனையா ராசாதேசிங்கு

## நவாப்பு தோன்றமல்லனை தேசிங்குராஜனிடத்திற்கு சமாதானத்திற்கு அனுப்புதல்

போனராசாதிரும்பினசேதி நவாப்புகேட்டானும்
தோன்றமல்லனையனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
சமாதானத்திற்கனுப்பிவைத்தான் நவாப்புசைதுல்லா
மூன்றுகுதிரையோட்டவருகிருனையா தோன்றமல்லனும்
தாமக்கைகேட்டுவருகிறனையா தோன்றமல்லனும்
தேசிங்குமுன்னேவருகிருனையா தோன்றமல்லனும்
குதிரையைவிட்டுக்கீழுகுதித்தான் தோன்றமல்லனும்
மண்டிபோட்டுசலாம்வாங்கிருன் தோன்றமல்லனும்
பதில்சலாமுங்கொடுத்தானையா ராசாதேசிங்கு
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராசாதேசிங்கு
ஒன்பதுகோடிசீமையுமக்கு நவாப்புதாரோமென்றார்
ஒருபெண்ணைக்குஒன்பது கொள்ளை நவாப்புதாரேனென்றார்
சமாதானமாய்போய்வாருமையா ராசாதேசிங்கு
அந்தப்பேச்சைகாதிலேகேட்டான் ராசாதேசிங்கு
கலகலவென்றுசிரித்தானையா ராசாதேசிங்கு
என்னபேச்சுபேசினுயடா தோன்றமல்லண்ணு
இன்றைக்கிருக்குமசமாதானம் அன்றைக்கிருக்கவேணும்



நவாப்புக்கேற்றபிராணசிநேகிதன் தாவுத்துகான்போனுன்
இரண்டுஜீவனுக்கென்னிடஜீவன் என்னத்துக்கிருக்குது
என்னைவிட்டுப்பிரிந்தால் ஆற்காடு நசனுக்கு
ஜல்திஜல்திஓடிப்போடா தோன்றமல்லண்ணு
தப்பிப்பிழைத்தோமென்றுசொல்லி ஓடிபோவாராணும்
தோன்றமல்லனைக்கண்டித்தசேதி நவாப்புசைதுல்லா
ஐந்துகுதிரைதபார்பண்ணினன் வேங்கடராயனும்
யானைய வந்ததைக்கண்ணுலேகண்டான் ராசாதேசிங்கு
பட்டாவுநவிகையிலேபிடித்தான் ராசாதேசிங்கு
யானையக்குறுக்கேயுருந்துவெட்டுகிருன் ராசாதேசிங்கு
மண்டைமண்டையாய்தள்ளிவெட்டுகிருன் ராசாதேசிங்கு
வேங்கடராயனைகண்ணுலேகண்டான் ராசாதேசிங்கு
ஆனையின்மீது அம்பாரிவைத்து அவனுமிருக்கிருனும்
இருதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானையின்தலைமேலே
பட்டாவுநவிவிளங்கினுனையா ராசாதேசிங்கு
ஓங்கிபட்டாவிழுந்தசேயானும் அவனேபோய்விடுவான்
வாய்பேச்சுபேசவில்லை வேங்கடராயரும்
மார்பிலிருந்தநூலைக்கண்டான் ராசாதேசிங்கு
பூநூலபோட்டபிராமணனையா வேங்கடராயராம்
போட்டிருந்தபூநூலைக்கண்டான் ராசாதேசிங்கு
அவனைவிட்டுஅப்பாலேபோனுன் ராசாதேசிங்கு
அரிந்தரித்தபோடுகிருனையா ராசாதேசிங்கு
வாலிகோட்டைஅவுலதாருப்டாருமவிழுந்தாராம்
மதுரைசீமையாளத்தானும் ரண்டாய்விழுந்தானும்
திண்டுக்கல்லுகொல்லுராமக்கனும் ரண்டாய்விழுந்தானும்
தூம்றெழுபத்திரண்டுபானையக்காரனும் துண்டாய்விழுந்தா
அவரைசேர்ந்தசனையமெல்லாமடியோடுவிழுந்தாராம் [னும்
ஆனையின்மேலேகொட்டிவைத்து அவனுமிருக்கிருனும்
நவாப்பைக்கண்டுசிரித்தானையா ராசாதேசிங்கு
இருதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் ராசாதேசிங்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானைத்தலைமேலே
சடபட்டாவுநவிபோட்டானையா சிப்பாய்தேசிங்கு
முகனேயிருந்தவெட்டியானும் நிலத்தில்விழுந்தானும்
மாருக்குபாலாவிழுத்துப்பிடித்தான் ராசாதேசிங்கு
அந்தவேளைக்குசலாம்வாங்கினுன் நவாப்புசைதுல்லா
நானொருசேதிசொல்கிறேன்கேளும் ராசாதேசிங்கு
தானுமிங்கேசண்டைக்குவரவில்லை ராசாதேசிங்கு
ஒருபெண்ணுக்குஒன்பதுகொள்ளை தான்தாரேனையா
சல்-நீயென்னபேச்சுபேசினுயடா நவாப்புசைதுல்லா
இன்றைக்கிருக்கும்சமாதானம் அன்றைக்கிருக்கவேணும்

என்னுடன் வளர்ந்தசிநேகிதக்காரன் மோவுத்துக்காரன்போ
எந்தன்பலமும்பாதபோச்சு மோவுத்துக்கா ரனோடே [றுன்
உனக்கிசைந்தபிராணசிநேகிதன் மாவுத்துக்காரன்போனுன்
இரண்டுஜீவனுங்கென்னிடஜீவன் என்னத்துக்கிருக்குது
என்கையில் பலமிருந்தால ஆற்காடுயென்னது
உன்கையில் பலமிருந்தால் செஞ்சிகோட்டையுன்னது
நூற்றெழுபத்திரண்டுபாளையப்பட்டுடன் சேயானாலும்
அந்தாழுபத்திரண்டுசேர்ந்ததடா செஞ்சிகோட்டை
செஞ்சிகோட்டைபணமுனக்கு குறைந்துபோச்சுதோ
இதோபணம் வருகுதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
சல்-பாலாவருகுதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா
ஈட்டிவருகுதுவாங்கிக்கொள்ளும் நவாப்புசைதுல்லா [லா
தப்பித்துக்கொள்ளும் தப்பித்துக்கொள்ளும் நவாப்புசைதுல
இடதுகாலுக்குறிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானைத்தலைமேலே
ஆனைவயிற்றில்தொட்டிக்கட்டியவனுமிருக்கிறானும்
தொட்டியிலிருந்தமாவெட்டியானும் எட்டிப்பார்த்தானும்
அவனுக்குமேலேகாலைவைத்திருந்தது பாராசாரிகுதிரை
வலதுகாலேஓங்கிவெட்டிஞன் மாவெட்டியானும்
வலதுகாலும்விழுந்தபோச்சுது பாராசாரிக்கு
மூன்றுகாலோடே கீழேவிழுந்தது பாராசாரிகுதிரை
மூன்றரைநாழிகைசண்டைபண்ணுகிறான ராசாதேசிங்கு
மூவாயிரம்ஜனங்களுமங்கே பட்டுவிழுந்தாராம்
இடதுகாலுக்குசிமிட்டாகொடுத்தான் பாராசாரிக்கு
முன்னங்காலைதூக்கிவைத்தது யானைதலைமேலே
இடதுகாலும்விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
நிலைநாழிகைக்குகுதிரையிறந்தால் நவாப்புபோய்விடுவான்
இரண்டுகாலும்விழுந்துபோனதை ராசா பார்த்தானும்
குதிரையைவிட்டுக்கீழேகுதித்தான் சிப்பாய்தேசிங்கு
தூண்டிகையிலும்பட்டாவுமாகினான் ராசாதேசிங்கு
கோபம்வந்துமண்டுகொண்டது ராசாவுக்கானாலும்
நவாப்புபாளையம்புகுந்தானையா சிப்பாய்தேசிங்கு
அங்கேயிருந்தசிப்பாய்மாரும் ஏகமாய்க்கூடினார்கள்
பதுங்கியிருந்தசிப்பாய்மாரும் பதுங்கியோடினார்கள்
கலகலகலகலவென்றுசத்தசண்டைசனும்
வெக்கத்தரனிராஜனிருந்தபோல்புகுந்துவெட்டுகிறான்
வெள்ளரிக்காய்வீசனைத்போல வீசிப்போடுகிறான்
டாறுடாருய்த்தீத்தப்போடுகிறான் நவாப்புபாளையத்தை
கைப்பிடியாய் பிடிக்கச்சொன்னான் நவாப்புசைதுல்லா
அதற்கவனும்பயப்படமாட்டான் சிப்பாய்தேசிங்கு
இரந்தபாளையமெல்லாம்விழுந்தது தேசிங்குகையாலே



நவாப்பின்மேலே திரும்பினானையா ராசாதேசிங்கு
நவாப்புஓடிஒளித்தானையா நடுவானபாளையத்தில்
நடுத்தண்டிலேதெரிகிறதுபார் நவாப்புபாளையமும்
நவாப்பைசுற்றிவந்தானையா ராசாதேசிங்கு
கோபம்வந்துமண்டுக்கொண்டது ராசாவுக்கானாலும்
சல்-லொக்கரித்துதண்டில் விழுந்தான் சிப்பாய்தேசிங்கு
ஆனைபட்டும்சாடுகிறானையா ராசாதேசிங்கு
நவாப்புஜனங்களோ எனைவழிவிய நானுஞ்செல்லமாட்டேன்
மண்டிபோட்டு உட்கார்ந்தானையா ராசாதேசிங்கு
இவனுக்கெதிரியாரையுங்காணோமே நவாப்புபாளையத்தில்
என்னுயிர்வாங்க எனக்கெதிரியை யாரையுங்காணோமே
என்னுயிரோடேசெஞ்சிகோட்டைக்கு நான்போவேனு
சக்கிரமாகநான் ரங்கநாதரே
இனமேலிருக்கநியாயமில்லை ரங்கநாதசுவாமி
கோவிந்தநாராயணாவென்றுகும்பிட்டெண்ணசெய்தான்
ஆனைகுதிரைசேனையெல்லாம் அடியோடேமாண்டதாம்
கூத்தநயைஊற்றி ஆகாயமெறிந்தானே ராசாதேசிங்கு
மார்பைவகித்துமண்மேல்படுத்தான் ராசாதேசிங்கு
அம்மா-மூனருசக்கப்போட்டானையா ராசாதேசிங்கு
ஸ்ரீகிருஷ்ணாராமாவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்
ஸ்ரீரங்காவென்றுசொல்லி கீழேவிழுந்தானும்
ராசாவிழுந்ததைகண்ணாலேகண்டான் நவாப்புசைதுல்லா

## நவாப்பு தேசிங்குராசனையெடுத்துமடிமீதில்வைத்து விசனப்படல்

தூக்கியெடுத்துமடிமீதில்வைத்தான் நவாப்புசைதுல்லா
ஐயாகேளும் ஐயாகேளும் ராசாதேசிங்கு
என்னுபிள்ளைத்தரைவெட்டினாய் அப்பாதேசிங்கு
மூவாயிரங்கோடிதுரைகள்மாண்டாரே ராசாதேசிங்கு
உயிருக்குப்பயந்து ஒளித்தேனடா அப்பாதேசிங்கு
உடனேதிரும்பினைக்கத்தப்போகாமல் ஐயாதேசிங்கு [தேசிங்கு
பொன்னானதிருமேனியைபொடியாக்கவிட்டாய் அப்பா
தங்கத்திருமேனியைதரையில்கவிழ்த்தாயப்பா தேசிங்கு
பாவிநான்வந்துபழிகாரனானேன் பாவாதேசிங்கு
உன்னைப்போலேசூரனொருவனுமில்லை ஐயாதேசிங்கு
நீ ஒருவனிருந்தாலுலகத்தையாள்வாயப்பா தேசிங்கு
நான்பாவியிருந்தபலனென்னசொல்லு ஐயாதேசிங்கு
உலகத்தில்நிந்தனையொருவனானேன் ராசாதேசிங்கு
மண்பூமிவேண்டாமலபொன்பூமிபோனாயோ அப்பாதேசிங்கு
பொன்பூமியிலுந்தன்புகழ்நடக்குமோ ஐயாதேசிங்கு

இப்படி சொல்லியழுகிறானையா நவாப்புசைதுல்லா
கதறியே யழுகிறானையா நவாப்புசைதுல்லா
கண்கள் வந்து சுழன்றுகொண்டது நவாப்புக்காரனலும்
கூடவந்த சேனைகளெல்லாம் கோவென்றழுதார்கள்
கண்கள் தெளிந்து எழுந்துட்கார்ந்தான் நவாப்புசைதுல்லா
அண்ணுவாடா தம்பிவாடா பங்காரு நாயக்கா நீ
குதிரைக்குகோரிகட்டச் சொல்லடா பங்காருநாய்க்கா நீ
கோடி திரவியம் தானங்கொடடா பங்காரு நாய்க்கா நீ
பட்டத்துபர்லக்குகொண்டுவாடா பங்காரு நாய்க்கா நீ
பஞ்சணை மெத்தைபோட்டு பரப்புடா பங்காருநாய்க்கா நீ
அந்தட்சணமே செய்தானையா பங்காரு நாய்க்கனும்
வாரியெடுத்து மடிமீதுவைத்தான் நவாப்புசைதுல்லா
பார்த்தழுது பல்லக்கில்வைத்தான் நவாப்புசைதுல்லா
நீயேவடா நீயேவாடா தோன்றமல்லண்ணு

## தேசிங்குராஜன் இறந்ததை ராணி கேட்குதல்

அந்தசேதியைக்காதிலே கேட்டாள் ராணியம்மாளும்
அரங்கத்தின் மேலேறி பார்த்தாள் ராணியம்மாளும்
மார்பில்காயம் பட்டதாலும் கோட்டைக்குவரச்சொன்னு
தோளில்காயம்பட்டதாலும் திரும்பிப் போகச்சொல்லும்
அந்தப்பேச்சைக்காதிலே கேட்டான் தோன்றமல்லனும்
மார்பில்காயம் பட்டதென்று உத்தாரங்கொடுத்தானாம்
கோட்டைக்குள்ளே புகுந்தானையா தோன்றமல்லனும்
பல்லக்கையிறக்கிவைத்தானையா தோன்றமல்லனும்
சலாம்வாங்கி திரும்பினானையா தோன்றமல்லனும்
நவாப்புக்குவந்துசேதி சொன்னான் தோன்றமல்லனும்
தப்பிப் பிழைக்கேனாமென்று சொல்லி தைரியமானராம்
அரங்கத்தின் மேலிருந்தராணியம்மாளிறங்கி வந்தாளாம்
ஐயோ தெய்வமேயென்று சொல்லி கதறியழுதாளாம்
ராணியம்மாளழுதசத்தம் செஞ்சியில கேட்டது
செஞ்சிகோட்டை ஜனங்களெல்லாஞ்சேரவோடிவந்தார்
ராஜாபக்கத்தில் வந்தாளையா ராணியம்மாளும்

## இராணி தேசிங்குராஜனைப் பார்த்து புலம்பல்

என்ன சொல்லிப்புலம்புகிறாளையா ராணியம்மாளும்
எந்தன் பேச்சுதடுத்துபோனீரே எந்தன் பிராண நாதா
உத்தமெழுந்திருமிப்படியிருந்ததோ என் பிராண நாதா
அக்கினிகுழி வெட்டச் சொன்னாள் ராணியம்மாளும்
சந்தனக்கட்டைகுங்குமகட்டை சுருக்காய்போடச்சொன்னாள்



முழுகின் தானம்பண்ணினாளையா ராணியம்மாளும்
இனியில்லாதவுடமைபூட்டினாள் ராணியம்மாளும்
தலைநிறைய பூப்பஞ்சூட்டினாள் ராணியம்மாளும்
ரங்கநாதரை வேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
பூமிதேவியை வேண்டிக்கொண்டாள் ராணியம்மாளும்
ஆகாயவாணியை வேண்டிகொண்டாள் ராணியம்மாளும்
அக்கினிக்குழியைச்சுற்றிவந்தாள் ராணியம்மாளும்
கண்கள்குளிரராசாவைப் பார்த்தாள் ராணியம்மாளும்
ராசாவுடனே தீயில குதித்தாள் ராணியம்மாளும்
தேவதுந்துமி முழங்குதையா செஞ்சிகோட்டைக்குள்ளே
வைகுந்த பதவியடைந்தார்களையா ராஜனும்ராணியும்
புஷ்பவிமானம்வந்தது ராசாவுக்கானலும்
இருவருங்கூடி ஏறினாரையா புஷ்பரதந்தனிலே
புஷ்பவிமானம்வந்தது நின்றது செஞ்சிக்கோட்டைக்குள்
இரங்கர்பாதம் சேர்ந்தாரையா ராசாதேசிங்கு

## வாழி

தேசிங்குராஜன் கதையைபடித்தவர் செழித்துமிகவாழி
கேட்டவர்யாவரும் சம்பத்துடன் கிளைத்து மிகவாழி
புத்திரசம்பத்துடையவராய் புகழ்ச்சியுடன் வாழி
மாடுகன்றுமனைவியுமுண்டாய் மக்கள் மிகவாழி
ஆல்போல்தழைத்து அருகுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்றங்கள் முசியாமலேவாழி
சந்திரசூரியர்களிருவருமே தழைத்துமிகவாழி
இந்திராணிவாழி எல்லோரும்மிகவாழி
முப்பத்து முக்கோடி முனிவர்களும் வாழி
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் நலமாகவாழி
அஷ்டதிக்கிலுள்ளோர் அஷ்டவசுக்களும் மிகவாழி
சொன்னமொழி தவறுதேசிங்குராஜன் சுகமாய்மிகவாழி
பலகலைபுணர்ந்தபாவலர்களும் பண்பாய்மிகவாழி
ஸ்ரீமகள் அச்சகமெந்நாளும் செழிப்புடன் மிகவாழி
நலமுடன் இச்சரிதை படித்தவர்கள் நன்றாய்மிகவாழி
நீடுழிகாலமூடாக நிற்குமிகவாழி
ஆழிபுலகிலுள்ளோர் உகப்பாய் மிகவாழி
வாழிவாழியென்று சொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

தேசிங்குராஜன் கதை முற்றிற்று

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1



சிறப்பு பாடல் வரிசையில்
புதிய நான்கு ரகங்கள்
திரை விருந்து
மலேசியா வாசுதேவன்
M.S. விஸ்வநாதன்
இளையராஜா
ஜெயசந்திரன்
பாடியது
காதல்
இளவரசன்
கமல்
காதல் கீதங்கள்
சிவகுமார் காதல்
பாடல்களும்
சேர்ந்தது
T.M. சௌந்தரராஜன்
தத்துவப்பாடல்கள்
நெஞ்சை விட்டகலாத
சிறந்த தத்துவ
பாடல்கள்
திரைப்படத்தில்
தாலாட்டு கீதங்கள்
பல முன்னணி பாடகர்கள்
பாடிய
இனிய பாடல்கள்
அழகிய வண்ண
முகப்புகள்
புதிய தொகுப்பு
ஒவ்வொன்றும்
ரூபாய் 1/-
போன்: 26118
கி.ப.எண்: 275
ஸ்ரீமகள் கம்பெனி
50, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1

ஸ்ரீமகள்
மாடர்ன் டிக்ஷனரி
இங்-இங்-தமிழ்
520 பக்கங்கள்
25000 பதங்கள்
நிறைய பொது விஷயங்கள்
விலை ரூ. 9/-
தபாலில் பெற ரூ.10/-

தமிழின் துணைக்கொண்டு
ஆங்கிலம் கற்றுக்கொள்ள
ராமுலு
இங்கிலீஷ் ஆசான்

தமிழ் துணைகொண்டு
ஹிந்தி படிக்க
நேரு ஹிந்தி
ஆசான்

ஒவ்வொன்றும் விலை ரூ 3-50
தனிப்பிரதிக்கு ரூ. 5-50
இரண்டுக்கும் ரூ.10/- M.O.செய்க

ஸ்ரீமகள் கம்பெனி
50, ஜெனரல் முத்தையப்பன் தெரு, சென்னை.